கோகுலம்

GOKULAM

அக்டோபர் '92 ரூ. 3.00



வானில் மிதந்த முதல் பலூன்!



NEW!
NEW!
NEW!
AIR TI
Comfort
AIR TIME
Catch the Action Spirit for its
CHECKED
Action
QUALITY
GENTLE GRIP
MULTIPLE COLOURS
DIFFERENT SIZES
AIRY
CUSHIONE INSOLE
action®
SHOES



கோகுலம்

1992 - அக்டோபர் மாத இதழ்
மலர் : 10 இதழ் : 9






அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

'எங்கள் ஊரில் நடந்தது' பகுதி தொடங்கப் பட்டதைப் பாராட்டி ஏராளமானவர்கள் எழுதியிருக் கிறீர்கள். இந்தப் பகுதியில் வெளியிட தினமும் கடிதங்கள் வந்து குவிகின்றன. தகுதியுள்ளவை கண்டிப் பாக வெளிவரும்.

'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதியின் பக்கங் களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று பெற் றோர்களும், ஆசிரியர்களும் கடிதங்கள் எழுதியிருக் கிறார்கள். இப்பொழுது ஏற்கெனவே நான்கு பக்கம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதை மேலும் அதிகரிப்பது இயலாத நிலை.

இம் மாதம் காந்தியடிகளின் பிறந்த நாள். ஒழுக்கத்தையும் தியாக உணர்வையும் மக்கள் மனதில் நன்கு வளர்த்து, அதையே ஆயுதமாக்கி, லட்சக்கணக்கான மக்களைத் தியாக உணர் வோடு தாங்களே சிறைபுக வைத்து, படைபலம் மிக்க பிரிட்டிஷ் ஆட்சியாளர் களைப் பயப்பட வைத்த அஹிம்சா வீரர் அவர். அதனால்தான் அவரை 'தேச பிதா' என்கிறோம். மக்களிடையே காட்டுத் தீ போல் வளர்ந்து வரும் வன் முறை கலாசாரத்தைப் பற்றி இன்று உலக வல்லரசுகள் கூடச் செய்வதறியாது கலங்கி நிற்கின்றன. ஒழுக்கமும், தியாக உணர்வும் மேம்பட்டால்தான் உலகம் நலமுடன் அமைதியாக வாழும் என்று காந்தியடிகள் கூறிய தீர்க்க தரிசனத்தின் அவசியத்தை இன்று எல்லோரும் உணர் கிறார்கள். இந்தத் தியாக உணர்வு நாளைய தலைமுறையினராகிய உங்களிடம் வளர வேண்டும்; நீங்கள் அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.




இம் மாதக் கடைசியில் தீபாவளி. இப்பொழுதே உங்களுக்கு 'அட்வான்ஸ்' வாழ்த்துகள்.

கோகுலத்தில் இன்னும் எதையெல்லாம் சேர்க்க வேண்டும் என்பது குறித்து எழுதுங்கள். இது உங்கள் கோகுலம்.

அன்புடன்,


(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்

கோகுலம்
அக்டோபர் 1992
இந்த இதழில்...

பறப்பது எந்தக்
கரப்பு பக்கம் 75



கதை சொன்ன நாற்காலி! பக்கம் 41



அண்டப் புளுகிக்கு சுண்டைக்காய் மாலை!
பக்கம் 83






வானில் மிதந்த முதல் பலூன்! பக்கம் 8




நாக்குகள் பலவிதம்!
பக்கம் 17



முதல் நாளே பெஞ்சியில் நின்றேன்!

புதிய உயர்நிலைப் பள்ளி. அன்று நான் முதல் வகுப்பு. ஆசிரியரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு போனேன். ஆசிரியர் இன்னும் வரவில்லை. மாண வர்கள் கொட்டம்தான்.



பெஞ்சுக் கோடியில் ஜன்னலோர மாக உட்கார்ந்து கொண்டேன். வெளியே அழகிய தோட்டம். ஒரு பெரிய மாமரம். குலை குலையாக மாம்பழங்கள் காய்த்துக் குலுங்கின. மாம்பழப் பிரியனான நான், என் னையே மறந்தேன்! அதையே எத்தனை நேரம் பார்த்துக் கொண் டிருந்தேனோ தெரியாது. திடீரென்று 'ஸ்கேல்' தட்டப்படும் ஓசை! திடுக் கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் னைத் தவிர அத்தனை மாணவர்களும் நின்று கொண்டிருந்தனர் ஒழுங்காக. எதிரே ஆசிரியர்!

''நான் வந்ததைக் கூட கவனிக் காமல் அத்தனை பராக்கா? எப்படி உருப்படப் போறே? ஏறுடா பெஞ்சி யில்'' என்றார் ஆசிரியர் கடுமை யாக.

ஆசிரியரிடம் நல்ல பெயர் வாங்க எண்ணினேன். ஆனால் முதல் நாளே பெஞ்சில் ஏறி நிற்கும் தண்டனை கிடைத்து விட்டது!


– ப. கணேஷ், சென்னை – 19.



SPORTS CAR FARARRI

Discover the series of the 'Best Sports Car' of the world in DIAMOND COMICS

NEXT POSTER


FAULADI SINGH & TUMULT IN THE SEA

Receive free 'Sports Car Poster' for continuous Six months with new comics of MAHABALI SHAKA & FAULADI SINGH

- Raman & Hunger Strike
- James Bond-9
- Chacha Bhatija & The pair of Skeletons
- Mahabali Shaka & Cruel Man Eaters
- Phantom-21 (Digest)

DIAMOND COMICS PVT. LTD.
2715, DARYA GANJ, NEW DELHI-110002

DISTRIBUTORS : **Madras :** • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. **Hyderabad :** • Neelkamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** • Sapna Book Stall, Opp. Tribhuvan Theatre, Gandhi Nagar. • A.K. Agencies, 2094, 8 'A', Main Road, 'E' Block, Rajaji Nagar, 2nd stage



முள் எங்கே இருக்கு?

மறுநாள் தேர்வு. நான் மும்முர மாகப் படித்துக் கொண்டிருந்தேன். இரவு நெடு நேரமாகிவிட்டது. என் தம்பியும் என்னுடனேயே இருந்தான். கடிகாரம் ஓடவில்லை. ரொம்ப நேர மாகிவிட்டது போன்ற ஒரு நினைப்பு. 'கூடத்து கடிகாரத்தில் மணி என்னவா கிறதுன்னு பார்த்துட்டுவா' என்று தம்பி யிடம் கூறினேன். ''எனக்கு மணி பார்க்கத் தெரியாதே அக்கா'' என்றான் தம்பி பரிதாபமாக. ''பரவாயில்லே, சின்ன முள் எங்கே இருக்கு, பெரிய முள் எங்கேயிருக்குன்னு பார்த்துட்டு வந்து சொல்லு போதும்'' என்றேன். தம்பி போனான். திரும்பி வந்து, ''ரெண்டு முள்ளுமே கடிகாரத்துக் குள்ளேதான் அக்கா இருக்கு'' என்றான் அப்பாவித் தனமாக!

நெடுநாள் வரை நாங்கள் இதைச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தோம்!

-- க. பேபி, சோழன் மாளிகை P.O.

வெள்ளைப் பேய்!

நானும் நண்பனும் படம் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். நல்ல இருட்டு. நண்பன் ஒரு பயந் தாங்கொள்ளி. நாங்கள் போகும் வழி யில் ஒரு சுடுகாடு. அவசரம் அவசரமாக இருவரும் அதைக் கடந்து சென்றோம். திடீரென்று தலைக்குமேல் சற்றுத் தள்ளி ஒரு வெள்ளை உருவம் பறந்து சென்றது.

நண்பன் மயக்கமடையாத குறை. அவனைத் தேற்றி தைரியம் கூறி எப்படியோ வீட்டுக்கு இழுத்து வந் தேன். அதிகாலையில் வெளிச்சம் பரவி யதும் நான் மறுபடி சுடுகாட்டுக்கு ஓடிச் சென்று, வெள்ளை உருவம் இறங்கிய



இடத்தைப் பார்த்தேன். அது பேயும் இல்லை! பிசாசும் இல்லை! சுடுகாட்டு வெட்டியானின் வெள்ளை வேட்டி! காற்று அடித்து அது பறந்து விழுந்த தைத்தான் நாங்கள் பார்த்து விட்டுப் பீதியடைந்திருக்கிறோம்!

- தீ. ஜெகதீஸ், நாகை.

We are proud to present you the

Dynam®

LOW COST
MICROSCOPE

With all the features of the more sophisticated types.

NATIONAL AWARD WINNER





The wonders of nature invisible to the naked eye, like the tiny cells of the leaf, cross-sectional details of the various stems, intricate parts of tiny insects, Micro-Organisms in a stagnant water- all these now become a reality with the Dynam Microscope.

Available at all leading Toy, Departmental Stores and scientific equipment dealers or direct from us.

DYNAM ENGINEERING CORPORATION
138, Gangadhara Chetty Road
BANGALORE-560 042. India.

BUY THIS LITTLE **MICROSCOPE** & BUY YOURSELF AN **EDUCATION!**





MAGNIFIES 60 TIMES WITH ADAPTOR 100 TIMES


I am interested in buying a Microscope at Rs. 75/- + Rs. 25/- towards taxes, Packing & Forwarding. Please send me .... kit/kits. I enclose/send a crossed D. D./Money Order (@ Rs. per kit.) as advance and promise to pay the balance when I receive the V. P. P.

NAME:..

ADDRESS:..

.... PIN ....

Climb Ads/DE/01-91.



வானில் மிதந்த முதல் பலூன்!

பா.ஜவகர்

பறவைகள் வானத்தில் சுதந்திரமாகப் பறப்பதைக் கண்டதிலிருந்தே, 'தானும் அந்த மாதிரிப் பறக்க முடியாதா?' என்ற ஏக்கம் மனித குலத்திற்கு இருந்து வந்துள்ளது. இறக்கையைப் பெற்று வானில் பறந்த தேவதைகள், விலங்குகள் போன்றவை பற்றிய அதிசயக் கதைகளை எல்லா மதத்தினரின் புராணங்களும் கூறுகின்றன. மனிதனின் பறக்கும் ஆர்வத்திற்கு இவையும் தூபம் போட்டன. மனிதன், பறக்க முடியுமா என்பதை அறியப் பல முயற்சிகளைச் செய்தான். அவற்றில் ஒன்றுதான் பலூன்களைப் பறக்க விட்டது. இன்னும் கூறப் போனால் பலூன் முயற்சியின் வெற்றியே, ஆகாய விமானத்தைக் கண்டுபிடிக்க வழிவகுத்தது எனலாம்.

இராட்சச பலூன்களில் காற்றடைத்து, வானில் பறக்கவிட ஐரோப்பிய நாடுகளில், பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிடத்தக்க வெற்றி என்று எதையும் கூற முடியாது. ஏனெனில், திசை திருப்பிகள், காற்றின் வேகக் கட்டுப்பாடுகள் கண்டுபிடிக்காத காலம் அது.

1766 ஆம் ஆண்டில் பிரிட்டனைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் ஹென்றி கேவன்டி கண்டுபிடித்த ஹைட்ரஜன் வாயு, பலூன் முயற்சிகளில் புதிய சாதனைகளைப் படைக்க வழி வகுத்தது. ஹைட்ரஜன், காற்றைவிடப் பதினொன்கு மடங்கு இலேசானது என்று கண்டு பிடித்து கேவன்டி அறிவித்தது, பலரையும் பலூன் பறக்கும் முயற்சிகளில் நம்பிக்கையுடன் ஈடுபட வைத்தது. இதற்கான பல முயற்சிகள் பிரான்சின் பாரீஸ் நகரில் தொடங்கப்பட்டன.

ஜோசப், ஈடின் மான்ட் கோல்பியர் சகோதரர்கள், சூடான காற்றைப் பட்டுத் துணியால் செய்யப்பட்ட பைகளில் நிரப்பி

வால் அவை மேலே பறக்கும் என்பதை முதன் முதலாகக் கண்டுபிடித்தனர். காகித உற்பத்தியாளர் ''அன்னோனே'' என்பவ ரின் பிள்ளைகள் இந்த சகோதரர்கள். பல வி த ம ா ன சோதனைகளுக்குப் பிறகு இவர்கள் 1783 ஆம் ஆண்டு, பார்வை யாளர்கள் முன்னிலையில் மிகப் பெரிய பலூன் ஒன்றை வானில் பறக்க விட்டனர்.

பலூன் 6000 அடி உயரம் பறந்து அனை வரையும் வியப்பில் ஆழ்த்தியது. இந்த பலூன், லினன் (Linen) வகைத் துணியால் செய்யப்பட்டு வெளிக்காற்று உள்ளே புகா வண்ணம் உட்புறம் காகிதத்தால் லைனிங் தரப்பட்டது.

அடுத்த வெற்றி முயற்சியும் பாரிசின் வெர்செய்ல்ஸ் நகரில் 1783 ஆம் ஆண்டு செப்டெம்பர் 24 ஆம் நாள், பிரான்ஸ் மன்னர் 16 ஆம் லூயி முன்னிலையில் செய்துகாட்டப்பட்டது. செய்து காட்டிய வர்கள் மாண்ட் கோல் பியர் சகோ தரர்கள். இந்த பலூனின் உயரம் 74 அடி. இதன் கீழ்ப்பகுதியில் இணைக்கப்பட் டிருந்த கூடையில் ஓர் ஆடு, கோழி, வாத்து ஆகியவையும் இருந்தன. பலூன் இவை யோடு பறந்து பார்த்தவரை வியப்பில் ஆழ்த்தியது. மாண்ட் கோல்பியர் சகோத ரர்கள் சாதனை நிகழ்த்திய பலூனின் மாடலைத்தான் நீங்கள் அட்டையில் பார்க் கிறீர்கள். இது போன்ற பல அரிய படைப் புகள் அ ர சி ன தி ன் சென்னை சிறுவர் அருங்காட்சியகத்தில் உள்ளன.

இதைத் தொடர்ந்து, பலூனில் மனி தர்கள் பயணம் செய்யவதற்கான முயற் சிகள் நம்பிக்கையோடு தீவிரப்படுத்தப் பட்டன. பலூனின் வாய்ப்புறத்தைச் சுற்றி பிரம்புக்கூடை அமைக்கப்பட்டது. பலூ னின் இருபுறங்களும் கயிறால் இழுத்துக் கம்பங்களோடு கட்டப்பட்டன. கீழ்ப்பகுதி யில் வைக்கோலும் கம்பளமும் எரிக்கப் பட்டு, அதன் வெப்பக் காற்று பலூனுக்குள் நிரப்பப்பட்டது. இந்த வித்தை பலூனில் முதன் முதலாக 'பிலேட்டர் டி. ரோஜியர்' என்பவர் நான்கு மணிநேரம் வானில் தொடர்ந்து பயணம் செய்து சாதனை நிகழ்த்தினார். இந்த சாதனை நிகழ்ந்த 1783 ஆம் ஆண்டு, நவம்பர் 21 - ம் நாள், அவர் பலூனில் பறந்த போது, பலூன் தரைக் கம் பத்தில் கட்டப்பட்டிருந்தது. இது நிகழ்ந்த இரண்டொரு நாட்களுக்குப் பிறகு ரோஜி யர், தனது நண்பர் 'மார்க்ஸ் - டி - அர லாண்டஸ்' என்பவருடன் பாரீஸ் நகரத்தின் மீது, 25 நிமிடங்கள் சுதந்திரமாகப் பறந்து புதிய சாதனை படைத்து, மனிதனின் வான் வெளிப் பயணத்தைத் தொடக்கி வைத்தார்.

அட்டையில் : **அர்ச்சீஸ்**

வண்ணப்படம் : **யோகா**



சண்டியன் ஒநாய் - வ. இராசையா, பக். 36 - ரூ 50/- அரவிந்தம் வெளியீட்டகம், பழைய வீதி, கோப்பாய், இலங்கை.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குழந்தை இலக்கியம் படைத்துவரும் கவிஞரின் முத்தான கதைப் பாடல் தொகுதி இது. சந்தம் கொஞ்சும் நடை. குழந்தைக் கவிஞரின் ''பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்'' போலவே குரங்குக்குக் கல்யாணம்! வானர வாலன் மாப்பிள்ளை! மந்திகள் செல்வி மணமகள்! ஊர்வலம் போகும் வழியில் மணமக்கள் திருட்டு மாங்காய் அடித்துத் தின்ன,

''மாப்பிள்ளை, பொம்பிளை ஒன்றாகப் - பிஞ்சு
மாங்காய் கடித்துத் தின்னுவதை
போட்டோ கலைஞர் கங்காரு - உடனே
புகைப்படம் ஆக்கிக் கொண்டாராம்!''

என்கிறது பாடல்

படங்களும், அச்சும், தாளும், அமைப்பும் மயங்க வைக்கின்றன. சொற்களில் இலங்கை வழக்கு வீசி மகிழ்விக்கிறது. பரிசளிக்க ஏற்ற புத்தகம்.

கண்ணே மணியே நீ பாடு - வெ. சிவநேசன் - பக். 64 - ரூ. 10/- கவிதா கௌரி பதிப்பகம், செந்தில் இல்லம், இராமச் சந்திரபுரம், உடுமலை (வட்டம்), நெகமம் - 642 120.

கைதட்டி, இசையோடு பாட ஏற்ற சிறுவர் பாடல்களின் அருமையான தொகுப்பு. கருத்தும், கூறும் விதமும் 'சிக்'கெனப் பிடிக்கின்றன. உதாரணம் :

''இமயம் நமது வடக்கெல்லை
இந்தியப் பெருங்கடல் கிழக்கெல்லை
அரபிக் கடலோ மேற்கெல்லை
அழகிய குமரி தெற்கெல்லை
(தாய்நாடு பக் 19)

சிலம்பொலி செல்லப்பன் அவர்களது முன்னுரையும், டாக்டர். பூவண்ணன் அவர்களின் மதிப்புரையும் பெருமை சேர்க்கின்றன. இரண்டொரு படங்கள் இருந்தால் இன்னும் அதிக மெருகூட்டியிருக்கும்.

வெள்ளி மின்னல் - கே. சிவகாமி சுந்தரி - பக். 28, ரூ. 6/- பூதுமலர்ப் பதிப்பகம், 37, கான்ரான் ஸ்மித் சாலை, கோபாலபுரம், சென்னை - 600 086

பாதரசம், சுயபுராணமாகத் தன்னுடைய வரலாறு, பெருமைகளைச் சுவைபடக் கூறும் அருமையான அறிவியல் நூல். பாதரசத்தைப் பற்றி மக்களின் கற்பனைகள், அதன் உண்மையான குணங்கள், பயன் என்று எதையும் விடாது தந்துள்ளார் ஆசிரியர். படங்களும், அச்சும், தாளும், அமைப்பும் நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன. குழந்தைகள் மட்டுமல்லாது எல்லோரும் படிக்க ஏற்றது.

புத்தர் ஜாதகக் கதைகள் - நெ. சி. தெய்வ சிகாமணி, பக். 176, ரூ 20/- பைலட் பப்ளி கேஷன்ஸ், 309, லிங்கச் செட்டி தெரு, சென்னை - 1.


சிறுவர் இலக்கியத்தைப் பண்படுத்திய பெருமைக்குரிய பழம்பெரும் எழுத்தாளரின் உன்னதமான படைப்பு இது. எளிய நடை. பெரிய எழுத்து. பரம்பரைக் கதைகளே என்றாலும் அலுப்புத் தட்டாது படிக்க வைத்து வெற்றி காண்கிறார் ஆசிரியர்.

மஞ்சள் ரோஜா - வி. ர. வசந்தன் - பக். 108 - ரூ. 12/- வானதி பதிப்பகம், தீனதயாளன் தெரு, சென்னை - 17.

கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமான ஆசிரியரின் பொன்வான சிறுகதைத் தொகுப்பு. கோகுலத்தில் வெளியான கதையும் உள்ளது. புதிய கதைக் களமும், நடையும், ஓவியங்களும், கண் கவர் அச்சும், அமைப்பும் புத்தகத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

இப் பகுதியில் பொது நூல்களும், சிறுவர் நூல்களும் மட்டுமே இடம்பெறும். இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் ஏதுமில்லை. புத்தகம் வேண்டுவோர் நேராகப் பதிப்பகத்திற்கே எழுதிக் கேட்க வேண்டும். அதற்காகவே பதிப்பாளரின் முகவரி தரப் படுகிறது.

பிருந்தாவனக் கதையரங்கம்



கிளியும் காகமும்

பறந்து திரிந்த காகம் ஒன்று சிறிது இளைப்பாற எண்ணி ஒரு மரத்தின் கிளையில் வந்து அமர்ந்தது. சிறிது நேரத்தில் அழகான கிளி ஒன்றும் அதன் அருகில் வந்து அமர்ந்தது. காகத்தின் கருமையான நிறத்தைக் கண்டு கிளி சிரித்தது. தன்னுடைய அழகைக் கண்டு கர்வம் அடைந்த கிளி தன்னை மறந்து காகத்தை ஏளமாகப் பேசத் தொடங்கியது. ''காகமே என்னைப் பார்! என் பச்சை வண்ண உடல் அழகைப் பார்! என் சிவந்த மூக்கின் அழகுக்குப் போட்டி போட, இந்தப் பறவை இனத்திலேயே யாருமில்லை! அப்படியிருக்க, நான் உன் அருகில் அமர்ந்தாலே உன் கருமை என்னுடன் ஒட்டிக் கொண்டு விடும் போலிருக்கு'' என்று சொல்லி அடுத்த கிளையில் அமர்ந்தது.

காகம் ஒன்றும் பேசாமல் மனதுக்குள் சிரித்துக் கொண்டது. தன் அழகை நினைத்து, நினைத்துத் தன்னையே மறந்து போயிருந்தது கிளி. அதே சமயம் பின்னால் இருந்து வந்த வேடன் ஒருவன் 'லபக்' என்று கிளியைப் பிடித்துத் தன்னுடன் கொண்டு வந்த கூண்டில் போட்டுப் பூட்டி விட்டான். கிளி இறக்கையைப் 'படபட' வென அடித்துப் பறக்க முயற்சி செய்தது. முயற்சி பலனளிக்காமல் சோர்ந்து போய் அமர்ந்தது. இப்பொழுது காகம், 'என்ன கிளியாரே, தங்களின் அழகுக்கு வந்த ஆபத்தைப் பார்த்தீர்களா? நாம் இருவரும் ஒரே மரத்தில்தான் இருந்தோம். அப்படியிருந்தும் வேடன்



என்னை விட்டு விட்டு உன்னை மட்டும் பிடித்துச் சென்றதுக்கு எது காரணம் தெரியுமா? உன் அழகும், அதன் காரணமாக நீ கொண்டிருந்த கர்வமும்தான்!

இப்பொழுதாவது தெரிந்ததா, 'அழகே ஆபத்து' என்று. என்னைப் பார், நான் கருப்பாக இருந்தபோதும், என்னால் எங்கு வேண்டுமானாலும் எப்பொழுதும் சுதந்திரமாகப் பறந்து திரிய முடியும்' என்று கூறிய காகம் உல்லாசமாக இறக்கையை விரித்துப் பறந்து சென்றது. கிளி தன் தவறை உணர்ந்து மவுனமாகத் தலைகுனிந்தது

என். அண்ணாமலை,
பாளையக்காடு.

மன்னரின் மதிப்பு

துருக்கி மன்னர் குளித்துக் கொண்டிருந்தார். அவ்வழியாக முல்லா வந்தார். முல்லாவிடம் பேசுவதற்கு மன்னருக்கு ஆர்வம் மிகுதி. எனவே, முல்லாவை அழைத்தார் மன்னர்.

''முல்லா, நீங்கள் உண்மையே பேசுகிறவர். அதனால் நான் கேட்கும் கேள்விக்குத் தாங்கள் தயங்காது பதில் கூற வேண்டும்'' என்றார் மன்னர்.



சரியென்று தலையசைத்தார் முல்லா. இடுப்பில் துண்டை இறுக்கி பெல்டினால் கட்டியிருந்த மன்னர், ''என்னுடைய சரியான மதிப்பு என்ன?'' என்றார்.

மன்னரை உற்றுப் பார்த்த முல்லா, ''வெறும் பத்துப் பொற்காசுகள்தான்!'' என்றார்.

மன்னருக்குக் கோபமான கோபம்! ''வெறும் பத்து பொற்காசுகள்தானா? நான் கட்டியிருக்கும் பெல்ட் ஒன்றின் விலையே பத்துப் பொற்காசுகளாயிற்றே'' என்று கேட்டார்.

''பெல்ட் அணிந்து இருப்பதால்தான் தங்கள் மதிப்பு 10 பொற்காசுகள். அது இல்லாத தங்கள் உடம்பிற்கு மதிப்பேது?'' - முல்லா அமைதியாகப் பதிலளித்தார்.

மன்னர் வெட்கினார்.

பி. அ. முஸ்தபா கமால்,
தக்கோலம்.

தங்கப்பனின் தந்திரம்

பிச்சைபுரம் என்ற கிராமத்தில் தங்கப்பன் என்னும் சிறுவன் இருந்தான். அவன் நரியைப் போல தந்திரம் உடையவன். அவனுக்கு ஒரு அண்ணன் இருந்தான். அவன் எல்லா மிருகங்களைப் போலக் குரல் எழுப்புவான். தங்கப்பனுக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் பெயர் ராஜா.

ஒருநாள் ராஜாவைத் தங்கப்பன் அழைத்துக் கொண்டு சினிமாவிற்குச் சென்றான். அடுத்த தெருவை அடைந்த பொழுது மக்கள் எல்லாம் அலறிக் கொண்டே ஓடுவது தெரிந்தது.

''ஏன் இப்படி ஓடுகிறீர்கள்?'' என்று தங்கப்பன் கேட்டான். ஒருவன் சொன்னான். ''எங்கள் தெருவில் புலி ஒன்று நுழைந்து விட்டது. நாங்கள் வேட்டைக்காரரை அழைத்து வருவதற்குள் அது எங்கேயோ மறைந்து விட்டது. ஆனால்



சத்தம் மட்டும் கேட்கிறது. எங்கள் தெருவில் மாடுகள் ஏராளமாக இருக்கிறது. அதனால்தான் எங்களுக்குப் பயமாக இருக்கு.''

தங்கப்பனுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. வேட்டைக் காரரை அழைத்து புலி சத்தம் போடும் இடத்தில் நிற்க வைத்து விட்டு அவரிடம் ரகசியமாக ஒன்று கூறினான். பிறகு தன் வீட்டிற்குச் சென்று அண்ணனை அழைத்து வந்து, ''அண்ணா, மானைப் போல கத்து'' என்று கேட்டுக் கொண்டான்.

அவன் அண்ணனும் மானைப் போலக் கத்தினான். தங்கப்பன் நினைத்தபடியே மானின் கத்தலைக் கேட்டு புலி வெளியே வந்தது. வேட்டைக்காரர் புலியைச் சுட்டுத் தள்ளினார். கிராமத்து மக்கள் தங்கப்பனின் தந்திரத்தைப் பாராட்டினர். தங்கப்பன் ராஜாவை சந்தோஷமாக அழைத்துக் கொண்டு சினிமாவிற்குச் சென்றான்.

பா. இளையராஜா,
மன்னார்குடி - 9.

ஜாடிகள்

சோமபுரம் என்ற நாட்டை குணசீலன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் நாடு மிகவும் செல்வச் செழிப்புடன் இருந்தது. அமைச்சரும், தளபதிகளும், அதிகாரிகளும் நேர்மையோடு நடந்து மக்களைக் காத்தனர். நாடு எல்லா வகைகளிலும் சிறப்புற்று இருந்தது.

குணசீலனிடம் பல அரியபொருள்கள் இருந்தன. அவற்றையெல்லாம் ஒன்றுதிரட்டி அதற்கு என ஒரு மாளிகை கட்டி, தனிக் காவலர்களைப் போட்டு கருத்தாகக் கவனித்து வந்தான் மன்னன். அந்தப் பொருள்களில், எவ்வளவு விலை கொடுத்தாலும் வாங்க முடியாத அழகுமிக்க ஜாடிகள் இருபது இருந்தன. குணசீலன், விருந்தாளிகள் யார் வந்தாலும் ஜாடிகளைத் தூரத்தில் இருந்து பார்க்க அனுமதிப்பாரே தவிர அவற்றைத் தொடக்கூட அனுமதிக்க மாட்டார். அவ்வளவு கவனமாகப் பாதுகாத்தார்.

ஒருநாள் குணசீலனின் படைத்தளபதியின் கைபட்டு இருபது ஜாடிகளில் ஒன்று சுக்குநூறாகி விட்டது. இந்த விஷயம் அரசரின் காதுகளுக்கு எட்டியது. அரசர் மிகவும் கோபமுற்றார். சிறிதும் சிந்திக்காமல் படைத் தளபதிக்கு மரண தண்டனை விதித்தார்.



படைத் தளபதி அரசரின் வலக்கை போன்றவர். அந்த நாடு சிறப்புற்றிருக்க அவரும் ஓர் முக்கிய காரணம். ஆகையால் மக்கள் வேதனைக்குள்ளா னார்கள்.

மறுநாள் மரண தண்டனையை நிறைவேற்றிக் கொள்ள படைத்தளபதி பொது மக்கள் முன் தோன்றினார். மக் களும், அமைச்சரும் அரசரிடம் எவ் வளவு எடுத்துக்கூறியும் தன் முடிவை மாற்றிக் கொள்ள அரசர் பிடிவாதமாக மறுத்து விட்டார்.

ஓர் வயது முதிர்ந்த கிழவர் தடியை ஊன்றியபடி அரசரிடம் வந்து ''அரசே! நான் உடைந்த ஜாடியை முன்பு இருந்த மாதிரியே ஒட்டித் தருகிறேன். என்னை ஜாடிகள் இருக்கும் இடத்திற்கு அழைத் துச் செல்லுங்கள்'' என்று வேண்டினார். அரசர் அவரை ஜாடிகள் இருக்கும் இடத் திற்கு அழைத்துச் சென்றார். அரசர் கவனம் மாறி இருக்கும் போது கிழவர், அங்கிருந்த மற்ற பத்தொன்பது ஜாடி களையும் ஒரே மூச்சில் கீழே தள்ளி உடைத்தார்.

அரசர் முகத்தில் கனல் பறந்தது. வாளை உருவினார். ''ஏன் இவற்றையும் உடைத்தீர்? இதற்கு என்ன தண்டனை தெரியுமா?'' என்று கோபத்துடன் கேட்டார்.

கிழவர், ''அரசே இங்கு இருந்த பத்தொன்பது ஜாடிகளும் இந்த நாட்டின் கண்களான பத்தொன்பது அதிகாரிகளைக் கொன்று விடக் கூடாது என்றுதான் உடைத்தேன். அவர்கள் இருப்பதால்தான் நாடு சிறப்புற்றிருக் கிறது. என்ன தண்டனை எனக்குக் கிடைக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனது உயிரை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பதிலாக படைத் தளபதியாளரின் உயிரை விட்டு விடுங்கள்'' என அரசரின் காலைப் பிடித்து கெஞ்சத் தொடங்கினார்.

அரசர் தெளிவு பெற்றார். ஜாடிகள் இல்லையென்றாலும் நாம் வாழ்ந்து விடலாம். ஆனால் மிகவும் திறமை வாய்ந்த தளபதியும் மற்ற அதிகாரிகளும் இல்லையேல் நாமும் வாழ முடியாது. நாடும் சிறப்பை இழக்கும் என உணர்ந்து தனக்குத் தெளிவு ஏற்படுத்தி, தன்னை நல்ல நிலைக்கு கொண்டு வந்த கிழவருக்குப் பொருளும் புகழும் வழங் கினார். படைத் தளபதியிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டி அவரையும் விடுதலை செய்தார்.

- ஜெ. சலீம் பாஷா, வந்தவாசி.

கிளியோ கிளி!

விமலும், சேகரும் நண்பர்கள். இருவர் வீடும் பக்கத்து பக்கத்தில்தான். இருவருக்கும் கிளி வளர்க்க வேண்டும் என்று ஆசை. இரண்டு கிளிகளை வாங்கி னார்கள். வளர்த்தார்கள்.

சில நாட்கள் சென்றன. கிளிகள் இரண்டும் பெரியதாகி விட்டன. விமலு டைய கிளி நன்கு பேசியது. ஆனால் சேகருடைய கிளியோ பேசவே இல்லை! எப்பொழுதும் சோர்ந்தபடியே இருந் தது. அதற்குத் தக்க காரணமும் இருந் தது.

சேகர் தன்னுடைய கிளிக்கு சரியா கவே உணவு கொடுக்க மாட்டான். எல் லாம் சோம்பேறித்தனம்தான். அதனால்





தான் அவனுடைய கிளி எப்பொழுதும் மிகவும் சோர்வுற்றுக் கிடந்தது. புத்தி சாலிக் கிளியை எடுத்துக் கொண்டு, விமல் தன்னிடம் சோம்பேறிக் கிளி யைத் தந்து விட்டான் என்று அவன் எண்ணினான். சேகருக்கு ஒரு யோசனை தோன்றியது. விமலின் கிளியையும் நம் கிளியையும் மாற்றிக் கொண்டால் என்ன? விமலிடம் சென்றான். ''விமல் நீ என் உண்மையான நண்பனாக இருந் தால் உன் கிளியை என்னிடம் கொடுத்து விடு. நான் என் கிளியை உன்னிடம் தந்து விடுகிறேன்'' என்றான்.

விமல் திடுக்கிட்டான். தான் ஆசை யாக வளர்த்த கிளியை எப்படிக் கொடுப்பது என்று திகைத்தான். அவன் கண்கள் கலங்கின. இதற்குள் சேகரின் கையில் இருந்த அவனுடைய கிளி, விமலின் கையில் இருந்த கிளியைப் பார்த்து,

''அக்கா, நீ தயவு பண்ணி இந்த சேகரிடம் வந்து விடாதே. பட்டினி போட்டே உன்னைச் சாகடித்து விடு வான். நான் சோர்வுற்று இருக்க பட்டினிதான் காரணம். ஆனால் இந்தப் பிடிவாதக்காரன் தன்னுடைய தவறை உணர்ந்து திருத்திக் கொள்ள மறுக் கிறான். நீ என்னிடம் வந்தால், என் கதிதான் உனக்கும் ஏற்படும். நீ இருப் பது நல்ல இடம். அங்கேயே இரு'' என்று கூறியது.

கிளி கூறுவதைக் கேட்ட சேகருக்கு அப்புறம்தான் தன் தவறு புரிந்தது. கிளியை மாற்றிக் கொள்ளவில்லை. வீட்டுக்குத் திருப்பி எடுத்து வந்தான். வேளை தவறாது கவனித்து அன்புடன் உணவு கொடுத்தான். அதோடு பேசி னான். அதை மகிழ்ச்சியாக இருக்கும் படி பார்த்துக் கொண்டான். அதற்கு நல்ல பயன் இருந்தது. இப்பொழுது விமலின் கிளியும் குமாரின் கிளியளவுக் குப் பேசுகிறது. விளையாடி மகிழ்விக் கிறது.

- முகம்மது சாதிக், பாண்டி - 1.

பிறந்த ஊர் இங்கே? - போட்டி

உலகப் புகழ்பெற்ற மதத் தலைவர்கள், கவிஞர்கள், தலைவர்கள், அறிவியல் பெருமக்கள் போன்றவர்களின் சாதனைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இன்னும் அறிய முயன்று கொண்டிருப்பீர்கள். இத்தகைய பெருமைமிக்கவர்கள் சிலரது பிறந்த ஊர் இங்கே தரப் பட்டுள்ளது. ஊருக்கு எதிரே, பிறந்தவர்களின் பெயரைக் குறிப் பிட்டு, கூப்பனையும் பூர்த்தி செய்து, ஆசிரியர் கோகுலம், 47, ஜவஹர் லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். கூப்பன் இல்லாது வருபவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. பரிசு உண்டு. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால், குலுக்கல் முறையில் பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

பிறந்த ஊர் இங்கே - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....
....
....
....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.10.92

1. பைசா
2. உலம் (ஜெர்மனி)
3. மாங்குடி
4. ஈஸ்ட்பர்ன் (இங்கிலாந்து)
5. போர்பந்தர்
6. கணியூர் (சங்ககாலம்)
7. பாஸ்டன் (அமெரிக்கா)
8. ரோவின்ஸ் ரிக் (அமெரிக்கா)
9. அலகாபாத்
10. யாஸ்னாயா பால்யானா (ரஷ்யா)
11. டேட்டன் (அமெரிக்கா)
12. திருவழுந்தூர்
13. ராமி கோமி தல் வண்டி
14. ஒட்டப்பிடாரம்
15. அமர்கோட்
16. திருவையாறு
17. கபிலவஸ்து
18. ஸ்ரீவில்லிபுத்தூர்
19. எடின்பரோ (ஸ்காட்லாண்ட்)
20. மருதூர்
21. தொரப்பள்ளி
22. எட்டையபுரம்

நாக்குகள் பலவிதம்


ஆழி

நாக்கு, உணவைச் சுவைக்க மட்டுமே பயன்படவில்லை; வேறு பல வகைகளிலும் அது பயன்படுகிறது. பொதுவாக, மாமிசம் உண்ணும் உயிரினங்களின் நாக்கு சொர சொரப்பாக இருக்கும். தாவரம் உண்ணும் உயிரினங்களின் நாக்கு சொர சொரப்பாக இருக்காது— மனிதனுக்கும் சொரசொரப்பாக இருக்காது!

வெளவாலின் நாக்கின் மேல், உள்பக்கமாக வளைந்த முட்கள் இருக்கின்றன. அதன் நாக்கில் பட்ட எந்த பூச்சியும் தப்ப முடியாது.




இரட்டை நாக்கு கொண்ட பிராணி லெமூர். அதற்கு மேலும் கீழுமாக இரண்டு நாக்குகள் இருக்கின்றன!







ஒகாபி என்னும் விலங்கின் நீண்ட நாக்கு, தழைகளை வளைத்து வாய்க்குள் திணித்துக் கொள்ளவும் முகத்தைத் துடைத்துச் சுத்தம் செய்து கொள்ளவும் உதவுகிறது.









ஒட்டைச் சிவிங்கியால் தன் நாக்கைத் தன் காதுகளைத் தொடும் அளவுக்கு நீட்ட முடியும்!





நாய் எப்போதும் தன் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறதே, ஏன் தெரியுமா? நாய்க்கு வேர்வை வெளியேற்றும் உறுப்புகள் உடம்பில் இல்லை. உடம்பில் அதிகமான உஷ்ணம் உண்டானால் அதை நாக்கின் மூலம் நீராக வெளியேற்றுகிறது நாய்.


'எறும்பு தின்னி' என்னும் விலங்கின் நாக்கு, அதன் மார்பெலும்பிலிருந்து ஆரம்பிக்கிறது. கம்பிபோல் உருண்டையான அந்த நாக்கை, எறும்பு, கறையான் புற்றுக்குள் விட்டு இழுத்தால், அவை நாக்கில் ஒட்டிக்கொண்டு வாய்க்கு வந்து விடும்!



பூனைக்கு இனிப்புச் சுவையை உணரக்கூடிய சக்தி கிடையாது. பூனையின் நாக்கிற்கு இனிப்புச் சுவை தெரியாது!




உயிரினங்களில், நாக்கில் அதிகமான சுவை அரும்புகளை உடையது மான்தான். அதன் நாக்கில் 50,000 சுவை அரும்புகள் உள்ளன. தாவரங்களை நன்றாகச் சுவைத்துத் தின்பது மான்தான்!



பாம்புக்கு நுனியில் பிளவுபட்ட நாக்கு. அதன் நாக்கு தொடு உணர்ச்சியை அறிவதுடன், வாசனையையும் அறிகிறது; வெளி உலகத்தை மோப்பம் பிடித்து உணருகிறது. அதனால்தான் பாம்பு அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுகிறது!







'கன்னெட்' என்னும் பறவைக்கு, நாக்கு இருக்கி-றதா, இல்லையா என்று சொல்ல முடியாத அளவுக்கு மிகவும் சிறியது!




மரங்கொத்தியின் நாக்கு, அதன் மேல் அலகின் அடியில் ஆரம்பித்து, மண்டை ஓட்டைச் சுற்றிக் கொண்டு வந்து, தொண்டையிலிருந்து நீட்டப்படுகிறது. அதன் நாக்கில் உள் நோக்கி வளைந்த முட்கள் உள்ளன. பூச்சிகள் உள்ள மரத்துளைகளில் நாக்கை நுழைத்தால் பூச்சிகள் ஒட்டிக் கொண்டு வந்து விடும்!



'ஹம்மிங் பேர்ட்'டின் நீளமான நாக்கு குழல் போன்றது. அதன் முக்கிய உணவு, பூவிலுள்ள தேன். அது தன் குழல் போன்ற நாக்கைப் பூக்களில் நுழைத்துத் தேனை உறிஞ்சி அருந்தும்!

மனிதனின் நாக்கில் 4 விதமான சுமார் 9000 சுவை அரும்புகள் உள்ளன. அவற்றைக் கொண்டு 6 வித சுவைகளை உணர்ந்து கொள்ள முடியும்!







ஃபிளமிங்கோ பறவையின் நாக்கும் விசித்திரமானது தான். அலகில் சிறிது கூட இடைவெளி இல்லாமல், நாக்கு அடைத்துக் கொண்டிருக்கும். மிகவும் பருமனான அதன் நாக்கில் முட்கள் இருக்கும். சேறு, தண்ணீருடன் பூச்சிப் புழுக்களை அலகில் நிரப்பிக் கொண்டு, நாக்கை அலகுக்குள் நுழைக்கும் போது, சேறும் தண்ணீரும் வெளியேறி, பூச்சிப் புழுக்கள் அலகிலேயே தங்கி விடும்!

கேட்குமா டாக்டர்?



டாக்டர். கு. கணேசன்

மு. பாலசுப்ரமணி, முத்துராமலிங்கபுரம்.

? சிலர் உடம்பில் வெள்ளை வெள்ளையாகத் தோன்றுகிறதே. அது வெண் குஷ்டமா? இப்போதெல்லாம் குஷ்ட நோய்க்கே மருந்து கண்டு பிடித்து விட்டார்களே, இந்த வெண்குஷ்டத்திற்கு மட்டும் இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லையா? இந்நோய் வராமல் தடுக்க, வந்துவிட்டால் பரவாமல் தவிர்க்க வழி சொல்லுங்கள், டாக்டர்?

! உன் ஊகம் சரிதான், பாலசுப்ரமணி. உடம்பில் வெள்ளை வெள்ளையாகத் தோன்றுவது வெண்குஷ்டமே! இதை ஆங்கிலத்தில் 'Leukoderma' என்பார்கள். இது வருவதற்கான காரணம் இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது. நம் உடம்பில் இயங்கும் 'தன்தடுப்பாற்றல் திறனில்' (Auto Immunity) ஏற்படும் கோளாறு காரணமாக வெண்குஷ்டம் வருவதாக நம்பப்படுகிறது. இதை முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய மருந்துகள் இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை; இதை வராமல் தடுக்கவும் வழியில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். குஷ்ட நோயைப் போல வெண்குஷ்டம் ஒரு நோயல்ல; தோல் அழகுணர்ச்சியில் தோன்றும் குறைபாடாகக் கருதலாம். எனவே, வெண்குஷ்டத்தை நினைத்து பயப்படவோ, கவலை கொள்ளவோ தேவையில்லை.

பி.அ. முஸ்தபா கமால், தக்கோலம்.

? இரத்த ஓட்டம் ஒழுங்கான முறையில் நடக்க நாம் பின்பற்ற வேண்டிய முறைகள் என்ன, டாக்டர்?

! இரத்த ஓட்டம் ஒழுங்கான முறையில் நடக்க மனிதனின் இருதயமும் இரத்த நாளங்களும் சீராக இருக்க வேண்டும். நல்ல சத்துள்ள உணவு, போதிய உடற்பயிற்சி, இரத்த ஓட்டத்தைப் பாதிக்கும் தீய பழக்கங்களான மது, புகைபிடித்தல், அளவுக்கு அதிகமாக இறைச்சி சாப்பிடுதல் போன்றவற்றைத் தவிர்ப்பது

ஆகியன ரத்த ஓட்டத்தைச் சீராகக் காப்பாற்றும்.

பி. சாமிநாதன், வி. மேட்டுப்பாளையம்.

? நாம் சாப்பிடும் போது இடையிடையே தண்ணீர் குடிக்கக் கூடாது என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். இது சரியா? காரணம் கூறுங்கள், டாக்டர்!

! சாப்பிடும் போது இடையிடையே தண்ணீர் குடித்தால் இரைப்பை நிரம்பி விடும். இதனால் உன் உடம்புக்குத் தேவையான சாப்பாட்டைச் சாப்பிட முடியாமல் போய்விடும். இது சத்துக் குறைவுக்கு வழி வகுக்கும். இதனைத் தவிர்க்கவே அப்படிச் சொல்கிறார்கள். அதே சமயம் சாப்பிட்டு முடிந்ததும் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். அப்போதுதான் சாப்பிட்ட உணவு நன்கு ஜீரணமாகும். சரியா, சாமிநாதன்?

எம்.கே. முத்துவேல், சேலம் - 10.


? குளோரோபார்மை மிக அதிக அளவில் முகர்ந்தால் உயிருக்கு ஆபத்தாக முடியுமா, டாக்டர்?

! ஆம், தம்பி, குளோரோபார்ம் ஒரு மயக்க மருந்து என்பதை நீ அறிவாய் என நினைக்கிறேன். அதை அளவோடு உபயோகித்தால் நமக்கு மயக்கம் வரும்; அளவை மீறினால் மரணம் வரும்!

டி. ஜோஸ் ஜெபராஜ், தூத்துக்குடி - 8.

? ஒரு உணவுப் பொருளைத் திரும்பத் திரும்ப சூடு படுத்தி மூன்று நாட்களோ அதற்கு மேற்பட்ட நாட்களோ வைத்திருந்தால் அவ்வுணவில் நோய்க் கிருமிகள் தொற்றிக் கொள்ளுமாமே, உண்மையா? எப்படி?

! உண்மைதான் தம்பி. உணவை சூடு படுத்தி. இரு நாட்களுக்கு மேல் பயன் படுத்தினால் அது நோய்த் தொற்றுக்கு உள்ளாக நேரிடும். எப்படியெனில் மாசு படிந்த காற்று மூலம் நோய்க் கிருமிகள் உணவை அடைந்து நச்சுக்களை உண






"கோயில்ல பூஜை நேரத்தில கரடியாரை யார் உள்ளே விட்டது..?"

"கோயிலோட அர்ச்சகரே இந்தக் கரடியார்தான்...."



"அந்த புனுகுப் பூனைப் பயல் எப்பப் பார்த்தாலும் பொய் சொல்லிட்டே திரியறானப்பா... என்ன செய்யலாம்....?"

"பேசாம பேரை மாத்தி புளுகுப் பூனைன்னு வைச்சிடேன்....!"



"அதோ ரொம்ப அழகா ஓடிட்டிருக்கே 'அந்த மானு'க்கு எந்த ஊர்...?"

"அந்த மான்."

வில் சேர்க்கும். குறிப்பாக, காற்றில் திரியும் பாக்டீரியா மற்றும் காளான் கிருமிகள் வளர்ந்து பெருக மிகச் சிறந்த ஊடகமாக உணவுப் பொருட்கள்தான் விளங்குகின்றன. இவை உணவை அடைந்ததும் நச்சுப் பொருட்களை (Toxin) உண்டாக்கும். அவை புறநச்சு (Exotoxin), அகநச்சு (Endotoxin) என அழைக்கப்படுகின்றன. புறநச்சு பாக்டீரியா செல்களுக்குள் தயாராகி உணவுக்கு வருவது; அகநச்சு பாக்டீரியா அழியும் போது வெளியாகி உணவில் சேருவது. உணவைத் திரும்பத் திரும்ப சூடாக்கும் போது பாக்டீரியாக்கள் வேண்டுமானால் அழியலாமே தவிர, இந்த நச்சுப் பொருட்கள் அழிவதில்லை! அதனால்தான் நெடுநாள் உணவை உண்ணும்போது நமக்கு நோய்கள் வருகின்றன.

எம். ஆனந்த், பெரம்பூர்.

? மூளை ஆபரேசன்களில் மண்டையோட்டைப் பிளந்துதானே ஆபரேஷன் செய்வார்கள்? ஆபரேஷன் முடிந்ததும் மண்டையோட்டை ஒட்டுவார்களா? தைப்பார்களா? மண்டையோட்டைத் தைக்க முடியாது என்றே நான் நினைக்கிறேன். விளக்கம் தரவும்.

> இப்பகுதியில் கேள்வி கேட்க விரும்புவோர் ஒரு கார்டில் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கலாம்.

! கரெக்ட், ஆனந்த்! மண்டை ஓட்டைப் பிளந்துதான் மூளையினுள் ஆபரேஷன் செய்வார்கள். ஆபரேஷன் முடிந்ததும் பிளந்த மண்டை ஓட்டை ஒட்டவோ, தைக்கவோ முடியாது. அதற்குப் பதிலாக பிளந்த மண்டை ஓட்டின் மேல் ஒட்டியிருக்கும் திசுப்பகுதியையும், பிளக்காத மண்டையோட்டின் திசுப் பகுதியையும் தையல் போட்டு இணைத்து விடுவார்கள். இதனால் பிளந்த மண்டை ஓடு தன் பழைய இடத்திற்கே வந்துவிடும். புரிந்ததா, ஆனந்த்!

கேளுங்கள் சொல்லப்படும்



சேரநம்பி

★ ஓ. பெருமாள்சாமி, சிதம்பரம்.

புருஸ்லீ உண்மையாகவே வாழ்ந்தவரா?

சரியாப் போயிற்று போங்கள்! சீனரான இவர் அமெரிக்காவில் 1940 - ல் பிறந்தார். குங்ஃபூ கராத்தே பயிற்சியாளர்கள் ரசிகர்களின் நடமாடும் தெய்வமாக விளங்கிய இவர் 32 ஆவது வயதில் மறைந்தார்.

★ பூ. சிவக்கொழுந்து, காங்கேயம்.

ஞானபீடப் பரிசை யார் வழங்குகிறார்கள்?

மெய்யுணர்வு (Philosphy), இலக்கிய சாதனைகளுக்குப் பரிசு வழங்க பிரபல தொழிலதிபர் சாந்தி பிரசாத் ஜெயின் என்பவரால் தொடங்கப்பட்டது பாரதிய ஞானபீடம் என்ற அமைப்பு. தொடங்கப்பட்ட போது ஒரு இலட்சம் ரூபாயாக இருந்த தொகை, இப்பொழுது ஒன்றரை லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கியப் பரிசு இது. தமிழில் இதைப் பெற்றவர் அகிலன் ஒருவரே.



★ மு. மாரியப்பன், விழுப்புரம்.

'கட்சிக் கொறடா' என்கிறார்களே. அப்படியென்றால் என்ன?

ஆங்கிலத்தில் Whip என்பார்கள். சட்டப் பேரவையில் உள்ள ஒரு குறிப்பிட்ட கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்களிடையே கட்டுப்பாட்டை




யும், கண்ணியத்தையும் காக்கும் பொறுப்பு மிக்க பணிக்கென தேர்ந்தெடுக்கப்படுபவர் இவர். சட்டப் பேரவையில் ஏதாவது ஒரு தீர்மானம் ஒட்ட

விக்கப்படும் போது இவரது பெயர் அடிபடும்.

★ **மு. கான்சாகிப், தேனி.**

World Wild-Life Fund **ன் இந்தியக் கிளை எங்கு உள்ளது? முகவரி தர இயலுமா?**



World Wild-Life Fund (India), Lalbaug, Pareel, Bombay - 12 என்பதே முகவரி.

★ **ஓ. செல்லப்பன், திருவள்ளூர்.**

மனிதனின் விஞ்ஞானப் பெயர் என்ன?




நொமா சேமியன் என்பதுதான் மனிதனின் விஞ்ஞானப் பெயர்.

★ **கு. பூங்கோதை, வத்தலகுண்டு.**

பாம்பு அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுகிறதே! இது எதற்காக?


இது ஓர் அனிச்சைச் செயல். உணர்வுக் கருவி என்றே இதுவரை



எண்ணி வந்தோம். ஆனால் பாம்புக்கு ஒலி அதிர்வை கிரகிக்கும் கருவியாகவும் இது பயன் படுகிறது என்பதற்கு ஆதாரம் இருப்பதாகக் கூறுகிறார்கள். இது உண்மையானால் பாம்பு இசைக்கு (தாளத்திற்கு) மயங்கும் என்பது உண்மையாகி விடும்! பரிசோதனைகள் தொடரு கின்றன. இன்றைய அறிவியல் உண் மையை நாளைய ஆராய்ச்சி முடிவு மாற்றிவிடுகிறது! இதுவே அறிவியல் விந்தை!

★ **கு. மங்கை, சிவகங்கை.**

பட்டுப் புழுவின் கூட்டில் இருந்து எத்தனை அடி பட்டு நூல் கிடைக்கும்?



சுமார் 1800 மீட்டர் நூல். சாதனை படைத்திருப்பது 1937 மீட்டர். இது அறு படாமல் இருந்தால்!

★ **மு. கண்ணம்மா, உளுந்தூர் பேட்டை.**


'தர்பார்சாகிப்' என்பது என்ன?

சீக்கியர்களின் புனிதத் தலமான அமிர்தசரஸ் பொற்கோவிலின் சொந்தப் பெயர்தான் தர்பார் சாகிப். எல்லோருமே பொற்கோவில் என்று குறிப்பிட்டு

விடுவதால் இதன் சொந்தப் பெயர் பிரபலமாகவில்லை!

★ **நா. முத்துச்சாமி, தென்கரை**

ஒரு நாட்டின் கடல் எல்லையை எப்படி முடிவு செய்கிறார்கள்?



கடற்கரையில் இருந்து 12 மைல்கள் வரை அந்த நாட்டின் கடல் எல்லை என்பது உலக நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சட்டம்.

★ **வெ. நஸ்துர் பாபா, அரிசிப் பாளையம்.**

'இம்மி' கூடக் கிடையாது என்கிறார்களே. இந்த 'இம்மி' என்பது என்ன?




ஒரு நெல்லில் 10,75,200 ல் ஒரு பங்குதான் இம்மி! அதாவது கொடுப்பதற்கு எதுவுமே இல்லை என்று பொருள்!

★ **கு. முத்துக்குமாரன், சமயபுரம்.**

பிராணவாயு (ஆக்சிஜன்) இல்லாது உயர் வாழ முடியுமா?

ஆக்சிஜன் இன்றி எந்த உயிரும் வாழ முடியாது என்றுதான் எண்ணி வந்திருக்கிறோம். ஆனால் இந்த நம்பிக்கையை



ஆஸ்திரியாவின் தொபில்சி என்ற ஏரியில் வாழும் 20 செ.மீ. நீளமுள்ள உயிரினம் ஒன்று தகர்த்து விட்டது. பனி மூடிய இந்த ஏரி நீரில், பிராணவாயு இல்லையாம்! அப்படியானால் இந்த உயிரினம் எப்படி வாழ்கிறது? அறிவியலுக்கு சவால்தான்! ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறதாம்!

★ **ஜான் ஃபெர்னாண்டஸ், மரியம் பேட்டை.**

'காந்தி' திரைப்படத்தின் வெற்றிக்கு அதை எடுத்த ரிச்சர்ட் அட்டன்பரோ மட்டும்தான் காரணமா?

அட்டன்பரோவின் கடின உழைப்பு, திட்டமிடல் ஆகியவற்றோடு இப்படத்தின் திரைக்கதையை அமைத்த ஜான் பிரைலியும் காரணமாவார். துளியும் விறுவிறுப்புக் குறையாது திரைக்கதையை ஒரு நாவலைப் போல் அமைத்து பார்ப்பவர்களைக் கட்டிப்



போட்ட பெருமை இவருக்கே உரியது. அதோடு மாறுதலான இசை அமைப்பும் மக்களை விரும்பிப்பார்க்க வைத்தது. இதற்கு இசை அமைத்தவர் சித்தார் இசைக் கலைஞர் பண்டிட் ரவிசங்கர்.

★ **மு. ரெஹ்மான், திருவண்ணாமலை.**

இந்திய அணுவியலின் தந்தை என்று டாக்டர் ஹோமி பாபாவை

குறிப்பிடுகிறார்கள். இது போல் இந்திய வானியல் தந்தை என்று குறிப்பிடப் படுபவர் யாராவது இருக்கிறார்களா?

இருக்கிறார்களே. தமிழ் நாட்டைச் சேர்ந்த வைனு பப்பு (1927-1982) இந்தப் பெருமையைப் பெற்றவர். இந்திய வானியல் கழகத்தின் தலைவராகவும் உலக வானியல் ஆய்வுக் கழகத்தின் தலைவராகவும் இவர் இருந்தார். காவலூர் வானிலை ஆய்வுக்கூடம் இவரது உழைப்பின் பரிசே.


★ வெ. வெள்ளைச்சாமி, பரமக்குடி.

தமிழ்நாடு அரசின் சின்னத்தில் உள்ள கோபுரம் எந்தக் கோவில் கோபுரம்?

ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் கோபுரமாகும்.

★ க. மயூரவல்லி, சீர்காழி.


கில்லட்டீன், கில்லட் இரண்டும் ஒன்றுதானா? எப்படித் தொடர்புடையது?



தலை வெட்டும் கொலையாளிக் கருவி கில்லட்டீன். பிரஞ்சுப் புரட்சியின் போது (1792). கில்லட்டீன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. கில்லட் என்பது முக சவரம் செய்யப் பயன் படும் ரேசர். இதைக் கண்டு பிடித்தவர் கில்லட் (1904). முந்தியது கில்லட்டீன், பிந்தியது கில்லட். நீயும் குழப்பிக் கொண்டு மற்றவர்களையும் குழப்பாதே!

★ கா. பூர்ணதாஸ், தென்காசி.

புதுடில்லி என்று குறிப்பிடுகிறார்களே, அப்படியானால் பழைய டில்லி என்று ஒன்று இருக்கிறதா?



இருக்கிறது. ஆனால் அதை நைசாமுதீன் என்கிறார்கள். இன்று நாம் காணும் புது டில்லியைக் கட்டியவர் எட்வின் லட்யன்ஸ் என்ற பிரிட்டிஷ்காரர்.

★ உ. பாலகோபாலன், திருவனந்தபுரம்.

குதிரை முகமுடைய கடவுள்கள் இந்து மதத்தில் உண்டா?



இருக்கிறார்களே. ஹயக்ரீவர் என்று ஒருவர். (திருமாலின் அவதாரம்). தும் புரு என்று ஓர் இரண்டாமவர். இவர் ஓர் முனிவர்.

★ மு. பூபாலன், மண்டகப்பட்டு.

மண்ணெண்ணெய் பூமியில் இருந்து எடுக்கும் போதே வெளிர் நீல வண்ணத்தில்தான் இருக்குமா?

இல்லை. சுத்தம் செய்யப்பட்ட மண்ணெண்ணெயின் நிறம் தண்ணீரைப் போன்றதுதான். இது மற்ற திரவங்களுடன் கலப்படம் செய்யப் படுவதைத் தடுக்கவே வெளிர் நீல வண்ணம் ஊட்டப்படுகிறது.

தலையளவு தங்கம்?



பெரிய செல்வந்தரும் கர்வம் பிடித்தவருமான பண்ணையார் ஒருவர் இருந்தார். மிகச் சிலரை மட்டுமே அவர் நேரில் பார்த்து அருகில் அழைத்துப் பேசுவார். வேறு யார் நெருங்கி வரத் துணிந்தாலும் உடனே விரட்டியடிக்குமாறு தமது வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஒருநாள் உழவர்கள் சிலர் பண்ணையாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''அருகாமையில் நின்று பண்ணையாரைப் பார்த்தேன், வயலுக்கு அருகே சந்தித்தேன்'' என்றான் ஒருவன்.

''நேற்று, நான் வேலிக்கு அப்பாலிருந்து எட்டிப் பார்த்த போது உப்பரிகையில் பண்ணையார் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன்'' என்றான் இன்னொருவன்.

அப்பொழுது அங்கு வந்த ஏழையிலும் ஏழையான மூன்றாவது உழவன், இதைக் கேட்டதும் சிரித்தான்.

''பூ, இதைப் போய்ப் பெரிதாகச் சொல்லுகிறீர்களே!'' என்று கேலி செய்து, ''வேலிக்கு அப்பாலிருந்து யார் தான் பண்ணையாரைப் பார்க்க முடியாது? ஆனால், நான் மட்டும் நினைத்தால் பண்ணையாருடன் அமர்ந்து உணவு கூட அருந்துவேன்!'' என்றான்.

''உன்னைப் பார்த்ததுமே அவர் வெளியே விரட்டியடித்து விடுவார். நீ அவருடைய வீட்டைக் கூட நெருங்க விட மாட்டார்கள்!'' என்றனர் மற்ற இருவரும்.

இரு உழவர்களும் சேர்ந்து மூன்றாவது உழவனை ஏளனம் செய்தனர்.

''பந்தயம் கட்டுவோம்! பண்ணையாருடன் அமர்ந்து நீ உணவு அருந்தினால் நாங்கள் உனக்கு மூன்று மூட்டை



அரிசியும் இரண்டு காளைகளும் பரிசு தருகிறோம். ஆனால் நீ அப்படிச் செய்யாவிட்டால், நாங்கள் சொல்வதை எல்லாம் நீ செய்ய வேண்டும்!'' என்றான் ஒருவன். இரண்டாமவன் இதை உறுதி செய்தான்.

''சரி. எனக்குச் சம்மதம்'' என்று கிளம்பினான் மூன்றாம் உழவன்.

அவன் பண்ணையாரின் வீட்டின் வெளிமுற்றத்திற்குச் சென்றான். அவனைப் பார்த்ததுமே பண்ணையாரின் வேலைக்காரர்கள் அவனை விரட்டியடிப்பதற்காக ஓடி வந்தனர்.

''இருங்கள், இருங்கள்! பண்ணையாருக்கு நான் ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். அவரிடம் இன்றி வேறு யாரிடமும் அதைச் சொல்ல மாட்டேன்!'' என்றான் உழவன்.

வேலைக்காரர்கள் பண்ணையாரிடம் ஓடி, உழவன் சொன்னதைக் கூறினர்.

அது என்ன நல்ல செய்தி எனக் கேட்டுத் தெரிந்து கொள்ள பண்ணையார் ஆசைப்பட்டார். உழவனை அழைத்து வருமாறு ஆணையிட்டார்.

உழவனை அழைத்து வந்தனர். ''நீ கொண்டு வந்திருக்கும் செய்தி என்ன?'' என்று பண்ணையார் கேட்டார்.

வேலைக்காரர் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டு, ''பிரபுவே, உங்களுடன் தனிமையில் பேச விரும்புகிறேன்'' என்றான் உழவன்.

இப்பொழுது பண்ணையார் அதிக ஆர்வம் கொண்டார். வேலைக்காரர்களை அப்பால் விலகும்படி உத்தரவிட்டார்.

வேலைக்காரர்கள் விலகிச் சென்றதும் உழவன் இரகசியக் குரலில், ''பண்ணையாரே, ஒரு குதிரைத் தலை அளவு இருக்கும் தங்கக் கட்டியின் விலை எவ்வளவு இருக்குமெனச் சொல்லுங்களேன்?'' என்று கேட்டான்.

''நீ ஏன் அதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறாய்?'' என்று பண்ணையார் கேட்டார்.

''காரணம் இல்லாமல் நான் இதைக் கேட்கவில்லை'' என்று உழவன் கூறினான்.

''உழவன் காரணமின்றி சும்மா இப்படி ஒரு கேள்வி கேட்க மாட்டான், அவனுக்கு ஏதோ புதையல் கிடைத்திருக்க வேண்டும்!'' என்று பண்ணையார் எண்ணிக் கொண்டார்.

உழவனைத் தந்திரமாக விசாரித்து சிறிது சிறிதாகத் தகவலைத் தெரிந்து கொள்ள முயன்றார்.

''நல்ல ஆள் அப்பா நீ! இது பற்றி நீ ஏன் தெரிந்து கொள்ள விரும்புகிறாய்? அதைச் சொல்லு முதலில்?'' என்று திரும்பவும் கேட்டார்.

உழவன் பெருமூச்செறிந்து கொண்டான்.

''சரி உங்களுக்குச் சொல்வதற்கு விருப்பமில்லையானால், சொல்ல வேண்டாம். நேரமாகி விட்டது. போக வேண்டும். பசிக்கிறது. வீட்டுக்குப் போய்ச் சாப்பிட வேண்டும்'' என்றான் உழவன்.

பண்ணையாரின் கர்வம் எல்லாம் பறந்தோடி விட்டது. பேராசையால் அவருக்கு உடம்பு நடுங்கியது.

''இந்த உழவனை எப்படியாவது சரிக்கட்டி, தங்கக் கட்டியை அவனிடமிருந்து அபகரித்துக் கொண்டு விட வேண்டும்'' என்று தம்முள் கூறிக் கொண்டார். உழவன் பக்கம் திரும்பி, ''நீ நல்லவனாய் இருக்கிறாய். நான் சொல்வதைக் கேள்! சாப்பிடுவதற்காக நீ வீட்டுக்குப் போக வேண்டாம். உனக்குப் பசித்தால் என்னுடன் அமர்ந்து உணவு சாப்பிடலாம்'' என்றார்.

வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, ''சீக்கிரமாய் சாப்பாட்டு மேஜையில் உண்டிகளை வையுங்கள்'' என உத்திர விட்டார். பண்ணையார் உழவனை உட்காரச் சொல்லி உண்டி வகைகளை அவனுக்கு அளித்து உபசரித்தார்.

''நல்லாச் சாப்பிடு அப்பா! கூச்சப் படாதே!'' என்றார்.

உழவன் எதையும் வேண்டாமெனக் கூறாமல் வேண்டிய மட்டும் உண்டான். பண்ணையார் மீண்டும் மீண்டும்





வீண் பழி

மூல்லா, கடைவீதிக்கு சென்றிருந்தார். அப்போது எதிரே ராமன் நொண்டி, நொண்டி நடந்து வந்தான். அவனைப் பார்த்த முல்லா,

''ஏன் ராமன் இப்படி நொண்டி நொண்டி நடந்து வருகிறாய்? உன் காலுக்கு என்னாச்சு?'' என நலம் விசாரித்தார். அதற்கு ராமன்,

''அதையேன் கேட்கிறீர் முல்லா, நான் நடந்து வரும் போது அந்த ரோட்டில் உள்ள பாறாய்ப் போன கல் ஒன்று இடித்து விட்டது. அதுதான் கால் வலி. நொண்டி நொண்டி வரேன்'' என்றார்.

''அடப்பாவமே! ஒரு மனிதனை ஒரு கல் இடித்து விட்டதா? இது என்ன அநியாயம்! வாரும். எந்தக் கல் இடித்தது எனக் காட்டும்'' எனக் கேட்டு ராமன் பின் சென்றார் முல்லா.

'இந்தக் கல்தான் என்னை இடித்தது!' எனக் காட்டினான் ராமன்.

முல்லா கல்லருகே குனிந்து, ''கல்லே... கல்லே, ஏன் என் நண்பர் ராமனை இடித்தாய்?'' எனக் கேட்டார்.

''யோவ் முல்லா, அந்தக் கல்லுக்கு என்ன உயிரா இருக்கு, நீர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல?'' எனக் கேட்டார் ராமன்.

''வா அப்படி வழிக்கு. ஆமா, உயிர் இல்லாத இந்தக் கல், உம்மைத் தேடி வந்து எப்படி இடித்து காயப்படுத்தியிருக்க முடியும்? நீரே தவறுதலாக நடந்து காலைக் கல்லின் மீது இடித்துக் கொண்டீர். அப்படி நீர் செய்த தவறுக்கு இந்தக் கல் மேல் பழி போடுகிறீரே நியாயமா?'' என முல்லா கேட்டதும் ராமன் தலைகுனிந்தார்.

– எஸ். ஜின்னா, பூலாங்குடியிருப்பு.

அவனை வருந்தி வருந்தி மூக்கு முட்டச் சாப்பிட வைத்தார்.

இதற்கு மேல் ஒரு வாயளவு கூட சாப்பிட முடியாது என்னும் அளவுக்கு உழவன் சாப்பிட்டதும் பண்ணையார் அவனிடம், ''இப்பொழுது நீ சீக்கிரமாக குதிரையின் தலை அளவுள்ள தங்கக் கட்டியை எடுத்து வா! அதை என்ன செய்வதென்று உன்னை விட எனக்குத் தான் நன்றாய் தெரியும். அதைக் கொண்டு வந்து கொடு, உனக்கு நூறு பொற்காசு தருகிறேன்'' என்று கூறினார்.

''தங்கக் கட்டியைக் கொண்டு வந்து கொடுக்க முடியாதே'' என்றான் உழவன்.

''ஏன் முடியாது?'' - பண்ணையார் கேட்டார்.

''ஏனென்றால், என்னிடம் தங்கக் கட்டி எதுவும் இல்லையே!'' என்றான் உழவன்.

''இல்லையா? பிறகு ஏன் அதன் விலையைத் தெரிந்து கொள்ள விரும்பினாய்?'' என்று பண்ணையார் கேட்டார்.

''சும்மா அப்படி ஓர் ஆவல் உண்டாயிற்று அவ்வளவுதான்!'' என்றான் உழவன். பண்ணையாருக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. அவர் முகம் செக்கச் சிவந்து விட்டது. காலால் பலமாய்த் தரையைத் தட்டினார்.

''முட்டாள்! போ வெளியே!'' என்று கூச்சலிட்டார்.

''பண்ணையார் அவர்களே! நீங்கள் நினைப்பது போல் நான் ஒன்றும் முட்டாள் அல்ல! உங்கள் செலவில் நன்றாக உண்டுகளித்தேன். அதோடு பந்தயத்தில் வென்று மூன்று மூட்டை அரிசியும் இரண்டு காளையும் பரிசு பெறப் போகிறேன். முட்டாள் செய்கிற காரியமா இது!'' என்று உழவன் கேட்டு விட்டு நடையைக் கட்டினான்.

பண்ணையார் வெட்கத்தோடு தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

– ஆ. குணசேகரன்,
குமாரமங்கலம்.



ஏரிக்குள் சிக்கிய புதையல்!

வங்காளத்தை ஆண்ட மன்னர்களில் மிகவும் பிரபலமானவர் சிதா ராம்ராய். இந்த மன்னன் கொடுமைக்கும் பேராசைக்கும் பேர் போனவன். வங்காளத்தை இவன் ஆண்ட காலம் 1699 முதல் 1712 வரை.

சிதா ராம்ராய் தன்னுடைய நாட்டு மக்களுக்கு தாங்க முடியாத அளவுக்கு ஏகப்பட்ட வரிகளை விதித்து அவர்களிடமிருந்து ஏராளமான பணத்தைக் கிட்டிப் பிழிந்து வசூல் செய்தான். அதோடு விட்டானா? அயல் நாடுகளின் மீது படையெடுத்து அங்குள்ள மக்களிடமும் கொள்ளையடித்தான். இப்படிப் பொன்னும், பொருளுமாக ஏராளமான அளவில் பெருஞ் செல்வத்தைச் சேர்த்தான்.

பேராசை பிடித்தவனல்லவா சிதா ராம்ராய்? அதனால்தான் இப்படிச் சேர்த்த செல்வத்தையெல்லாம் பாதுகாப்பாக வைக்க வேண்டும்; தன்னைத் தவிர வேறு யாருக்கும் இதன் இரகசியம் தெரியக் கூடாது என்று எண்ணினான். தன் எண்ணத்தை நிறைவேற்றச் செயலில் இறங்கினான்.

திறமையான நீர்மூழ்கிகள் இருவரை அமர்த்திக் கொண்டான். அவர்களிடம் ஆலோசனை கேட்டு அதற்கு ஏற்ப ஓர் அழகான ஏரியைத் தனது தலைநகரில் வெட்டினான். அதன் அடியில் இரகசியமாக ஒரு நிலவறையையும் அமைத்தான். அவர்களின் உதவியுடன் அந்த இரகசிய நிலவறைக்குள் தான் சேகரித்த அளவில்லாத செல்வத்தையெல்லாம் நீர்மூழ்கிகள் இருவரின் உதவியோடு பாதுகாப்பாகக் கொண்டு போய் மறைந்து வைத்தான்.

ராய் மன்னன் இவ்வாறு ஏரியில், நீருக்கு அடியில், நிலவறை அமைந்துத் தன் திரண்ட சொத்தைப் பாதுகாப்பாகச் சேர்த்து வைத்துள்ள இரகசியம் மன்னனுக்கும், நீர்மூழ்கிகள் இருவருக்கும்



மட்டுமே தெரியும். ஆனாலும் இந்த இரகசியத்தை அயல்நாட்டு மன்னனான ஜாபர்கான் என்பவன் எப்படியோ தெரிந்து கொண்டான். அவன் சீதாராம்ராயையும், ராயின் பெருத்த செல்வத்தையும் கைப்பற்றி வருமாறு ஒரு பெரிய படையை அனுப்பி வைத்தான்.


ஜாபர்கானின் படை வருவதை அறிந்த சீதா ராம்ராய் தனக்கு ஆபத்து வந்து விட்டதை உணர்ந்தான். நீர்மூழ்கிகள் மூலம்தான் உண்மை வெளிபட்டிருக்க வேண்டும் என்று அவன் சந்தேகித்தான். தான் ஒளித்து வைத்திருந்த செல்வம் பறிபோய் விடப் போகிறதே என்ற பதைப்பில் சீதாராம் ராய், நீர்மூழ்கிகள் இருவரையும் வரச் சொன்னான்; தன் வாளினால் தானே அவர்களை ஈவு இரக்கமின்றிக் கொன்றான்.

ஜாபர்கான் படை வங்காளத்துக்குள் புகுந்தது. போர் மிகவும் கடுமையாக இருந்தது. இறுதியில் சீதா ராம்ராய் போரில் கொல்லப்பட்டான். அவன் கொல்லப்பட்டதோடு, அவனது புதையல் பற்றிய ரகசியமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது.

சீதா ராம்ராயால் மறைத்து வைக்கப்பட்ட பொன்னும், பொருளும் நிரம்பிய அந்த விலைமதிப்பில்லாத புதையலை எடுக்க எவ்வளவோ முயற்சிகள் நடந்தன. ஏரிக்குள் பலமுறை எத்தனையோ பேர் மூழ்கிப் பார்த்தனர். ஊஹூம். புதையல் கிடைத்தபாடில்லை. ஏரி நீரை முற்றிலும் வடிப்பதற்கு எத்தனையோ பேர் முயற்சி செய்தார்கள் முடியாவில்லை. யாருக்கும் வெற்றி கிடைக்கவில்லை. சீதாராம் ராயின் ஏரிப் புதையல் யாருக்கும் கிடைக்காத கனவுப் புதையலாகவே இன்னமும் இருக்கிறது!

- தாராபுரம் கருணிமகன்.

எங்கள் ஸார்!




கையில் ஸ்கேலை ஓங்கி வந்தார்
எங்க வீட்டிலே - ஸார்
கடுகடுத்துச் சத்தம் போட்டார் :
''இன்னும் படிக்கலே?''

கையைக் கட்டி வாயை மூடி
கலங்கி நின்றோமே - ஸார்
கட்டளைக்கே கால் வலிக்க
காத்து நின்றோமே.


''ஆனா வன்னா'' என்றார் ஸாரும்;
சொல்லி விட்டோமே.
''ஒன்னு ரெண்டு சொல்லு'' என்றார்,
சொல்லி விட்டோமே.

எங்க ஸாரும் எந்த ஸாராம்,
சொல்லிப் போடவா? - அவர்
நின்ற உயரம் ஸ்கேல் உயரம்
எங்க பாப்பாதான்!



- அழகி

மணியின் செல்லப் பிராணிக்கு வழிகாட்டுங்களேன்!





சத்திய சுதந்திர நாயகன்

காந்தித் தாத்தா வந்தாராம்
கருணை உள்ளம் தந்தாராம்
உண்மை பேச என்றாராம்
உயர்ந்து வாழச் சொன்னாராம்

நமது நாடு இந்தியா
நாமும் காக்க வேண்டுமாய்
உறுதி கொண்ட நெஞ்சிலே
ஒளியைப் போல விளங்கினார்

பறங்கிச் சீமை வெள்ளையர்
அடிமை செய்தார் நம்மையே,
தாயைக் காக்க வேண்டியே
தலைமை ஏற்றார் காந்தியே!

அன்பு நெறியைச் சொல்லியே
அகிம்சை வழியில் நின்றவர்,
அன்னை பூமி பாரதம்
அகிலம் போற்றச் செய்தவர்

பொக்கை வாயின் சிரிப்பிலே
பூத்த தெல்லாம் சத்தியம்!
சுதந்திரத்தின் நாயகன்
சொந்த காந்தி வாழ்கவே!

- கா. வெ. தியாகசாந்தன்





வீரர் காந்தி

ஆங்கி லேயர் நம்மை யெல்லாம்
அடிமைப் படுத்த லாயினர்
வேங்கை போன்ற நமது மக்கள்
விழிபி துங்கிப் போயினர்!

என்ன செய்வ தென்று மக்கள்
எண்ணிப் பார்த்த பின்னரே,
அண்ணல் காந்தி என்ற விடையை
அறியக் கண்டார் மண்ணிலே...!

வீர மக்கள் காந்தி வழியில்
வெற்றி வேண்டி மாண்டனர்;
வீரர் காந்தி தியாகத் தாலே
விழாக் கோலம் பூண்டனர்!


காந்தித் தாத்தா பேரைச் சொல்லிக்
கலக லவெனப் பாடுங்கோ...!
தாந்த னத்தோம் தாளம் போட்டு
தரைந டுக்க ஆடுங்கோ...!


- கோவி. மகுடேசுவரன்.





சிரிப்...



அம்மா! தெருவில் ஒருத்தி விழுந்ததைப் பார்த்து எல்லோரும் சிரிச்சாங்க. நான் மட்டும் சிரிக்கலே
வெரிகுட்! நீ ஏன் சிரிக்கலை?
விழுந்ததே நான்தானே!


அந்த டிரைவரைப் பாரேன்... சக்தியே இல்லைப் போலிருக்கு... அந்தக் கம்பியை கீழே, மேலேன்னு எப்படி இழுக்கறார்... அப்படியும் பிடுங்க முடியல்லையே!


ஒண்ணாம் கிளாஸ் 'ஃபெயில் ஆயிட்டியாமே... மேலே என்ன செய்யப் போறே!



கரஸ்பாண்டென்ஸ் கோர்ஸ்ல ஜாயின் பண்ணி பாஸ் பண்ணிடுவேன் தாத்தா!


பாடத்தைப் படிச்சி முடிச்சதும் மீண்டும் தலைப்புச் செய்திகள்னு சொல்றியே! உங்கப்பா செய்தி அறிவிப்பாளரா?


புக்கெல்லாம் எடுத்துக்கிட்டு எங்கே போறே?
'பல்லி'க்கூடத்துக்கு!

கே. சோமசேகர்

பிருந்தாவனக் கவியரங்கம்



காகம்



கழுத்தைச் சாய்த்துப் பார்க்கும்
காகா என்றே கரையும்
கருப்பு நிறமாம் உடலும்
குயிலைக் குஞ்சு பொரிக்கும்!

உணவைக் கண்டால் கரையும்!
உறவுடன் சேர்ந்து உண்ணும்!
குணத்தால் உயர்ந்த பறவை
கூறும் இதுபோல் உண்டோ?

- பி. வி. எம். மன்னார்,
சென்னை - 2.



மயிலே!

அழகு மிக்க மயிலே,
ஆடிக் காட்டும் மயிலே!
விழுந் திடாமல் உயரே
வீற்றி ருக்கும் மயிலே!

தோகை விரிக்கும் அழகும்
துவளும் ஒயில் நடையும்
வேக வேக ஜதியும்
வேறு எவர்க்கும் வருமோ?

மற்ற பறவைக் கில்லா
மதிப்பு உனக்கு உண்டு
இந்த நாட்டின் தேசிய
அழகுப் பறவை நீயே!

- எம். திலீப்குமார்,
சென்னை - 2.



தேரோட்டம்

உளருக்குள்ள நல்ல தேரோட்டம் - அம்மன்
ஊர்ந்து வருகுது தேளாட்டம்


தேரிழுக்க பலர் போராட்டம் - தெருக்
கோடியிலே பாரு கோலாட்டம்


சின்னஞ் சிறுவர்கள் கொண்டாட்டம் - பெற்ற
அன்னைக்கு சிறிதோர் திண்டாட்டம்

கரகம் பார்க்க கடலாட்டம் - அங்கே
கண்ணு விழிக்குது ஓர் கூட்டம்

சொந்த பந்தங்களுக் கோர்நாட்டம் - காண
சொக்கிடுதே இந்த தேரோட்டம்

- மாத்தூர் பரமசிவம், தஞ்சாவூர்.







தீப ஒளி

ஊரெல்லாம் மகிழ்கின்ற திருநாளாம்
உல்லாசம் காணுகின்ற பெருநாளாம்
பாரெங்கும் கொண்டாடும் பொன்னாளாம்
பலருக்கும் அந்நாளே நன்னாளாம்

புத்தாடை உடுத்தியன்றே மகிழ்ந்திடுவார்
புதியதொரு சிந்தனையில் மூழ்கிடுவார்
தித்திக்கும் தின்பண்டம் செய்திடுவார்
தின்பதற்கே அனைவருக்கும் கொடுத்திடுவார்

தீபஒளி ஏற்றியன்றே ஒளிபெறுவார்
திசையெங்கும் மகிழ்ச்சியிலே திளைத்திடுவார்
கோபவெறி நீக்கியன்றே குதூகலிப்பார்
கொடுக்கலிலும் வாங்கலிலும் நாள்கழிப்பார்

திருக்கோயில் சென்றன்றே வழிபடுவார்
திக்கெட்டும் வெடி வெடித்து அதிரவைப்பார்
விரும்பாத செய்களையே மறந்திடுவார்
வீதியெங்கும் ஒற்றுமையில் கலந்திடுவார்

- பூவேந்தன்

மகிழுவோமே!

பொட்டிப் பொரியும் மத்தாப்பு
பூத்து விரியும் புஸ்வாணம்
கட்டுக் கட்டாய் பட்டாக
களிப்போடு கொளுத்துத் தீபாவளி!

பார்த்துப் பார்த்துப் பரவசமடைய
பென்சில் சாட்டை மத்தாப்புகள்
கோர்த்துக் காணும் சரவெடிகள்
குதூகலமாய் வெடிக்கும் தீபாவளி!

ஓலை வெடியோட பொட்டுவெடி
ஓசை கேட்க ஆனந்தம்
காலைக் கதிரவன் ஒளிபோல
காட்சிதரும் விஷ்ணு சக்கரம்!


ஆகாயத்தில் பாயும் ராக்கெட்டு
அணுக்குண்டு வெடியும் ஈங்குண்டு
ஏகதீப்பெட்டி கம்பி மத்தாப்புகள்
ஏந்தி கொளுத்தி இன்புறுவோம்!


பானை வயிறு கொண்ட
பக்கத்து வீட்டு மாமாவும்
யானை வெடி கொளுத்துவார்
யாவரும் பார்த்து மகிழ்வோமே!

- நாஞ்சில் இராமநாதன்





பாதியில் நிற்பதை முழுப்படமாக்குங்கள்!







தாமரையும் அவள் பாட்டியும் மட்டுமே ஒரு வீட்டில்~
கதை சொன்ன நாற்காலி
கதை: ஆனந்தி
படம்: ஜெ..
தாமரை! உன் மாமா அங்கே உடம்பு சரியில்லை.. அவருக்குப் போய்ப் பார்த்துட்டு வரேன்... சரியா?
சரி, பாட்டி!
நீ தனியா இருக்கணுமே! பயப்பட மாட்டியே?
பயமில்லை பாட்டி, ஆனா பொழுது போகாதே!
பாட்டி பூட்டியிருந்த ஒரு அறையைத் திறந்து...
தாமரை! இங்கே வந்து பாரு!
நாற்காலி அழகா இருக்கே!
அதற்கு மந்திர சக்தியும் உண்டு! உனக்குப் பொழுது போகாதபோது கதை சொல்லும்!
அட!
அதோட - இதிலே நீ உட்கார்ந்துட்டா எங்கே வேணுமானாலும் அழைத்துச் செல்லும்!


பாட்டி போன பிறகு....
என் அருமை நாற்காலி!..
...ஒரு கதை சொல்லு!
கதை கேட்டுக் கொண்டே தூங்குவாள் தாமரை...
விடிந்ததும்...
பாக்கி கதையை நாளைக்குக் கேட்கிறேன். இப்போ வீட்டு வேலையைக் கவனிக்கிறேன்.. என்ன?
சரி!
ஒரு நாள் வீட்டு வாசலில் ஒருவனிடம்...
என்ன அண்ணா தெரு எல்லாம் கோலாகலம்?
தெரியாதா? இன்று நம் இளவரசியின் பிறந்தநாள். மாலையில் பெரிய விருந்து கொடுக்கிறார் மகாராஜா!
நாற்காலி நண்பா! எனக்கு ஒரு ஆசை!..
விருந்துக்குப் போக வேண்டுமாக்கும்?


திடீரென நாற்காலியின் மடியில்—
இதோ இந்த ஆடைகளை மாலையில் அணிந்து கொண்டு...
...தோட்டத்து மலர்களைப் பறித்துக் கொண்டு என் மீது உட்கார்!
ஆஹா நாற்காலி பறக்கிறதே!
அதோ அரண்மனை!
அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பக்கம் விருந்து— இன்னொரு பக்கம்— மன்னன், அரசி, இளவரசி—
அங்கு வந்து இறங்கியது நாற்காலி—
இதென்ன ஆச்சரியம்!
தாமரை இறங்கி—
இளவரசி உங்களுக்கு மணமுள்ள பரிசு!
நல்ல மணம்! நன்றி!
அதுசரி, உன் பெயர் என்ன?
தாமரை!





இந்த நாற்காலி பறக்கிறதே!
அட!
கதை கூடச் சொல்லும், மன்னா!
எங்கே கதை சொல்லச் சொல்லு!
இளவரசிக்கு ஒரு கதை சொல்ல வேணும்!
நாற்காலிக்கு உடனே முகம் தோன்றியது-
ஓ! சொல்றேனே.. ஒரு கடலோர கிராமத்தில் வசித்து வந்தார்கள், இரு மீனவர்கள்.
பொல்லான் பெயருக்கேற்ப பொல்லாதவன்..
ஏ.. நல்லான் நாம ரெண்டு பேரும் அண்ணா மீன் பிடிக்கப் போவோம்!
சரி.
இரண்டு பேரும் சேர்ந்து நிறைய மீன் பிடித்துக் குவித்தனர்.... ஆனால் பொல்லான்..
?
படகு என்னுது. அதனால் மீனெல்லாம் எனக்குத்தான்! உனக்கு சாப்பாடு மட்டும் போடுவேன்!





பல மாதங்கள் சென்றன— நல்லானின் தாய் —
உழைப்பதெல்லாம் நீ. மீனை விற்றுப் பணம் கொழிக்கிறவன் பொல்லான்!
வருத்தப் படாதே!
உழைக்க என்னிடம் வலிமை இருக்கு. கடவுள் நல்லவர்களைக் கை விடமாட்டார்.
ஒருநாள் கடலில் —
ஏதோ கனமா சிக்கியிருக்கு!.... பொல்லான், கொஞ்சம் கை கொடு...
?
இருவரும் சேர்ந்து இழுத்துப் போட... அது ஒரு பெரிய மீன்....
ஐயோ! இது என்னது?!
பயப் படாதீர்கள்!
என்னை விடுவித்தால், நன்றியாகச் சரியாக ஒரு வருடம் கழித்து இதே பவளப் பாறைப் பக்கம் வந்தால் என் மகளைத் தருவேன்!



இருவரும் மீனை விட்டுவிட~
நன்றி! வருகிறேன்!
ஒரு வருஷம் கழித்து சந்திப்போம்!
பொல்லான் சிரித்தான...
என்ன சிரிப்பு?
அது கடலரசனாய் இருக்கும்!
ஆமா! இவருந்தான் கடலரசனுக்கு மருமகனாகப் போறாருபோல்!
படகைத் திருப்பிக் கரையை அடைந்தனர் –
எனக்கு நம்பிக்கை இருக்கு!
அட அசடு! அந்த ராட்சச மீனைப் பசி தாங்காது என்றுதானே அதைப் போக விட்டோம். அதற்காக அது நமக்கு எப்படி உதவப் போகிறது!
கிராமத்தில் பொல்லான் எல்லோரிடமும் நடந்ததைக் கூறி, நல்லானைக் கேலிப்பொருளாக்கினான்.
கடலரசன் மகளையில்ல மணக்கப் போறாராம்!
ஹா ஹா!
ஓஹோ ஹா!
கிராமமும் கிண்டல் செய்தது –
உங்கம்மாவுக்கு மீன்தான் மருமகளாக்கும்?
அப்படி ஒரு ஏமாளி உண்டா? கோமாளி!



நல்லான் வருந்தினான்.
எல்லாரும் உன்னையும் என்னையும் சேர்த்துக் கேலி செய்கிறார்கள், அம்மா!
இனிமேல் நீ வல்லானுடன் போகாதே!
நான் சேமித்த பணமெல்லாம் தரேன். நீ தனியா ஒரு படகு வாங்கிக்க!
நல்லான் பழைய படகு ஒன்று வாங்கி–
மீன் கொஞ்சமாகக் கிடைத்தாலும் சுதந்திரமாக உழைக்கலாம்!
பௌர்ணமி சமயம் பவளப் பாறைப் பக்கம் போவான்–
நிலவொளியில் வலைவீசி ஜலக் கன்னியைக் கைப்பிடிப்பேன்– ஏலேலோ ஐலசா...!
ஓராண்டு சென்றது–
அம்மா! கடலரசன் சொன்ன சமயம் வந்துடுச்சு... நான் திரும்பி வர கொஞ்சம் நாளானாலும் கவலைப்படாதே! வருகிறேன்!



பவளப் பாறைக் குச் சென்று...
நிலவொளி யில் வானம் பார்த்து ஜலக் கன்னியை எதிர் பார்த்தேன் ஐலேலோ...
ஐலசா... ஐலேலோ ஐலசா!
திடீரென்று கடலுக்குள்ளி ருந்து மூன்று மீன் கன்னிகள் தோன்றி—
!
நாங்கள் கட லரசனின் பெண்கள்!
உன்னை அழைத்து வரச் சொன் னார்!
தண்ணீர்க் கடியில் எனக்கு மூச்சு முட்டுமே!
எங்கள் கைகளைப் பிடித்துக்கொண் டால் ஒன்றுமாகாது!
தண்ணீருக்கடியில்...
நல்லா மூச்சுவிட முடியுதே!
கடலரசன்—
வா, நல்லான்!
உனக்குக் கொடுத்த வாக்கை நான் மறக்கவில்லை!
நன்றி, கடலரசே!


நல்வான் அரண்மனை விருந்தாளியாகத் தங்கியிருந்தான். சில நாட்கள் சென்று —
மலரழகி! என் எப்பவும் வருத்தமாகவே இருக்கே?
நான் கடலரசன் மகள் அல்ல. உன்னைப் போல தரைமேல் பிறந்தவள்தான். ஒரு சமயம் நான் சென்ற கப்பல் கவிழ்ந்தது.
கடலரசன் என்னைக் காப்பாற்றி வளர்த்து வருகிறான்.
உனக்கு பூலோகம் போக ஆசைதானே?
ஆமாம்.. ஆனால் இவர்கள் என்னை அனுப்பமாட்டார்களே!
நான் விடுவித்து அழைத்துப் போகிறேன்!
இதோ, நானும் வரேன்!
அப்போது மலரழகி ஒரு பாறையைத் தாண்டினாள்.


பாறைக்கு அந்தப் பக்கம்—
பார்த்தாயா!
அடேயப்பா எவ்வளவு செல்வம்!
கடலில் மூழ்கும் கப்பல் களிலிருந்து கடலரசன் சேர்த்து வைத்தது!
தங்கம்... வைரம்... வெள்ளி...
நீ இதில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண் டால்கூட கடல் நாட்டுக்கு அடிமை யாகி விடுவாய், நல்லான்!
நான் உழைத்துப் பிழைப்பவன், மலரழகி...
மலரழகி கவலை மறந்து சிரித்தாள்—
பிறர் பொருளுக்கு ஆசைப் படமாட்டேன்!
நல்லான் என்ற பெயர் பொருத்தம் தான்!
ஒருநாள் கடலரசன்—
இந்த பொக்கி ஷங் களெல் லாம் என் அத்தைப்பெண் எழிலரசிக்கு.



சற்றுத் தள்ளி - பவளத்திடல் ஒன்றில் -
இந்தப் பவளச் செல்வங்கள் எல்லாம்...
என் இரண்டாவது மகள் பேரழகிக்கு! இருவரில் நீ யாரை மணந்து கொள்ள விரும்புகிறாய்?
அரசே எனக்கு இந்தச் செல்வங்கள் வேண்டாம்! மலரழகிதான் வேண்டும்!
இளைய மகள் மலரழகியை உங்கள் வாக்குப்படி எனக்குக் கொடுங்கள். நாங்கள் கரையில் வாழவே ஆசைப்படுகிறோம்!
அவள் என் சொந்த மகள் அல்ல. அவளை மணந்தால் உனக்கு ஒன்றும் கிடைக்காதே!
செல்வம் வேண்டாம் அரசே! மலரழகியே நீங்கள் தரும் பெருஞ்செல்வம்!
வலையில் சிக்கிய என்னை விடுவித்தாய். உனக்கு வெகுமதி தர விரும்புகிறேன்! ஒரு மாதம் யோசித்துச் சொல்!


இதற்கிடையில் நல்லானின் தாய் –
யாராவது என் மகனைப் பார்த்தீங்களா?
அவன் பவளப் பாறை பக்கம் அடிக்கடி போவதுண்டு...
இன்னொரு மீனவன் –
ஆபத்து என்று சொன்னாலும் கேட்கமாட்டான்..
அவன் வருவான். ...எனக்கு நம்பிக்கை இருக்கு!
பொல்லான் வந்து –
பவளப் பாறைப் பக்கம் நல்லானின் படகு மிதந்து கொண்டிருந்தது. இழுத்து வந்து விட்டேன். ஆளைத்தான் காணோம்!
ஒரு நாள்... கடலையே பார்த்துக்கொண்டு நின்ற நல்லானின் தாய் அருகே ஒரு வண்டி வந்து நின்றது.
வண்டியிலிருந்து இறங்கி வந்த பெண்மணி –
ஏன் கடலையே பார்த்துக்கொண்டிருக்கிறாய்?
என் ஒரே மகன், நல்லான் – படகில் போனான். திரும்பி வரவில்லை!




என் மகளும் அப்படித் தான். கப்பலில் அனுப் பினேன். கவிழ்ந்து விட்டது. எங்கே யாவது கரை ஒதுங்கி இருப்பாளோ என்று அலைந்து தேடுகிறேன்..
நல்லானின் தாய் –
பாவம் உன் துயரம் எனக்குத் தான் புரியும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. திரும்பி வருவார்கள்!
கடலாழத்தில் ஒரு மாதம் சென்றபின் –
அரசே! நான் என் தாயைக் காணப் போக வேண் டும்! மலரழகி யை என்னுடன் அனுப்ப வேண்டும்!
நல்லானை ஒரு அறைக்கு அழைத் துச் சென்று –
உன் மன உறுதிக்கு என் பாராட்டு. உனக்கு வேண்டிய பொருளை எடுத் துக்கொண்டு போய் வா!
நன்றி! எனக்கு எது வும் வேண் டாம்! மலர ழகியை அனுப்பி வைத் தால் போதும்!


இருவரும் புறப் பட்டனர்-
என் கையை விடாதே! நம்மைப் பிரிக்க கடலலை களை அனுப்பு வான் கடலரசன்!
அலைகளுடன் போராடி கரையை அடைந்தனர்-
நல்ல வேளை நீ பேராசைப்பட வில்லை.. பாதள உலகத்திலிருந்து தப்பினோம்.
நீ எனக்கு இருக்கும் போது பொன்னும் மணியும் எதற்கு, மலரழகி?
மலரழகியின் மீன் வடிவம் மாற, வீடு நோக்கி நடந்தனர்-
அதோ என் வீடு!
அம்மா சமைக் கிறார்கள்!
நல்வான்! என்ன நடந் தது!
மலரழகி என் கண் ணே!
அம்மா!



இருவரும் நடந்ததைக் கூறி-
இது தான் கதை!
பொன்னாசை இல்லாமல் உழைப்பை நம்பி வந்தாயே! உன்னை எப்படிப் பாராட்டுவேன்!
எல்லாரும் உன்னைப் போற்றுவார்கள்.
நல்லான்! என் மலரழகிக்கு ஏற்ற கணவன் நீயே!
நல்லானுக்கும் மலரழகிக்கும் திருமணம் நடந்தேறியது-
பொல்லானுக்கு ஒரே பொறாமை-
ஹும்.. பணக்கார வீட்டுப் பெண் கிடைச்சுட்டா அந்தப் பயலுக்கு!....
நானும் ஒரு கடல் கன்னியோடு திரும்பறேன் பார்!


பேராசை பிடித்த பொல்லான் திரும்பி வரவேயில்லை –
கடவுளே!
நான் தூங்க எங்கு..
அடிமை!
நாற்காலி கதையைச் சொல்லி முடித்தது –
அரசர் குறுக்கிட்டு!
இளவரசி! பொல்லானைப் போல் பேராசைப் படாதே! நல்லானைப் போலிருந்து நாட்டை ஆள வேண்டியவள் நீ!
நாற்காலி! நீ என்னுடனேயே இருந்துவிடேன்!
தாமரை ஆறுதலாக....
கவலை வேண்டாம் இளவரசி! நான் அடிக்கடி நாற்காலியில் பறந்து வருவேன். நாம் இருவரும் சேர்ந்து கதை கேட்போம்!
தாமரை விடைபெற்று வீடு திரும்பினாள் –
பாட்டி திரும்பி வந்திருந்தா, நடந்ததைச் சொன்னா ஆச்சரியப் படுவா!



காந்தி மண்ணில்


முருகன் படத்திற்கு முன்பு ஊது பத்தியை ஏற்றிவைத்து விட்டு தீப்பெட்டியை வழக்கமான மாடத்தில் வைத்த மகேந்திரன், தன்னை யாரோ அழைப்பதைக் கேட்டுத் திரும்பினான்.

எதிரே அவன் வகுப்புத் தோழன் மணி கையில் ஒரு சின்ன எவர் சில்வர் கூஜாவோடு நின்று கொண்டிருந்தான்.

''மகேந்திரா! இன்னிக்குக் காலையிலே தானே நமக்கு ஆங்கிலப் பரீட்சை. எல்லாம் படிச்சிட்டியா? உன்னைப் போய்க் கேக்கறேன் பாரு... நீதான் இங்லீஷ்ல எப்பொழுதுமே முதல் மார்க் வாங்கறவன் ஆச்சே. மத்த பாடங்களிலே எப்படியோ நான் பாஸ் மார்க் வாங்கிடறேன். ஆனா - இந்த பாழாப் போன இங்கிலீஷ் மட்டும் எனக்கு வர மாட்டேங்குது. பரீட்சை ஹால்லே நாம ரெண்டு பேரும் பக்கத்திலே பக்கத்திலே தானே உட்கார்ந்திருக்கோம். எனக்குக் கொஞ்சம் காண்பிச்சா என்ன கொறஞ்சா போயிடும்? இன்னிக்கு மட்டும் எனக்கு ஹெல்ப் செய் - ப்ளீஸ்!''

''நிறுத்துடா மணி! பொழுது இப்பத் தான் விடிஞ்சிருக்கு? ஆரம்பிச்சிட்டியா... உன் புலம்பலை? எத்தனை தடவை உனக்கு நான் சொல்லியிருக்கேன்? தேர்வு ஹால்லே எனக்கு மத்தவனைப் பார்த்து காப்பி அடிக்கவும்

தி. ஜானகி



"வயிற்றை ஸ்கேன் பண்ணிப் பார்த்தீங்களே, டாக்டர்! என்ன தெரியுது?"

"28 முறுக்கு, 108 சீடை, 14 வடை, 64 லட்டு, 36 கேக், 43 ஜிலேபி, 17 பாதுஷா..."

பிடிக்காது. காப்பி அடிக்க உதவி செய்யறதும் பிடிக்காதுன்னு? உங்கிட்டே உழைப்பும் இல்லே. முயற்சியும் இல்லே. டீ.வி. பார்க்கிறதிலே இருக்கிற ஆர்வம் படிப்பிலே இல்லே.... என்ன சந்தேகம் இருக்கோ இப்போ கேள். சொல்லித் தரேன் ஆனா... பரீட்சை எழுதும் போது இல்லே"... தீர்மானமாகக் கூறினான் மகேந்திரன்.

"நீ... எப்பவுமே இப்படித்தான்டா. ஆமா... தினம் உங்கப்பா தானே கடையத் திறந்து ஊதுபத்தி எல்லாம் ஏத்திவைப்பாரு? இன்னிக்கு நீ எப்படி....?"

"என்னோட அத்தை ஊரிலேந்து வந்திருக்காங்க. கடைய நீ முதல்ல போய்க் கவனிக்கக்க... அரை மணில வரேன்னு சொன்னாரு. அதுசரி. நீ வந்த வேலைய மறந்துட்டே போலிருக்கே... உனக்கு என்ன வேணும்?"

"மூணுகப் டீ வேணும். ஸ்ட்ராங்கா தரச் சொல்லு உங்க கடை ஆளை."

அப்பொழுது -

"தம்பி! சூடா ஒரு டீ கொடு" என்று வாடிக்கையாளர்கள் அமரும் பெஞ்சில் அமர்ந்த அந்த ஆளை மகேந்திரன் பார்த்தான்.

இருபத்தி ஐந்து வயதிருக்கலாம். கருட்டை முடி. சிவந்த மேனி. நடுத்தர உயரம். கூலிங்கிளாஸ், பூப் போட்ட பாலியஸ்டர் சட்டை. பச்சை நிற பேண்ட்.

பார்த்தவுடனேயே தெரிந்தது படித்தவர் என்றும், தங்கள் ஊருக்குப் புதிதாக வந்திருப்பவர் என்றும்.

டீயை வாங்கித் தானே அந்தப் புதிய இளைஞரிடம் கொடுத்தான் மகேந்திரன். டீயை சுவைத்துப் பருகிய அவர் "தம்பி! டீ நல்லாவே இருக்கு. எவ்வளவு?" என்று வினவினார்.

"எழுபது காசு."

பணத்தை எடுத்துக் கல்லாவில் வைத்து விட்டுக் கிளம்பினார் அவர்.

அந்த சமயம், டீ கூஜாவைப் பெற்றுக் கொண்டு பணத்தை மகேந்திரனிடம் கொடுத்தான் மணி. பணத்தைக் கல்லாவில் போடப்போன மகேந்திரன் அப்பொழுதுதான் கவனித்தான். அங்கு எழுபது காசுக்குப் பதிலாக ஒரு ரூபாய் நாணயம் ஒன்றும், இருபது காசு நாணயம் ஒன்றும், ஆகமொத்தம் ஒரு ரூபாய் இருபது காசு இருந்தது. இளைஞர் செய்த தவறு அவனுக்குப் புரிந்தது. உடனே....

"சார்... சார்.. ஒரு நிமிஷம். அவசரத்திலே நீங்க... ஒரு ரூபாய் நாணயத்தை எட்டணா நாணயம்னு நினைச்சு, கூட கொடுத்திருக்கீங்க... இந்தாங்க எட்டணா" என்று அப்பொழுது தான் கடையைத்தாண்ட முயன்ற அவரைக் கூப்பிட்டுக் கொடுத்தான். நன்றி கூறிப் பெற்றுக் கொண்டார் அவர்.

காலை மணி ஒன்பது ஐம்பது. தங்கள் அறைக்கு மேற்பார்வையாளராக நுழைந்த அந்த இளைஞரைப் பார்த்ததும் மகேந்திரன், மணி இருவர் கண்களும் வியப்பால் விரிந்தன. ஆம்! அன்று காலையில் டீ ஸ்டாலில் மகேந்திரனிடம் டீ குடித்த அதே இளைஞர் தான்! புதிதாக அப்பள்ளிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர் அவர் தான்!

வினாத்தாளைக் கையில் வாங்கிய மணிக்கு ஒரே மகிழ்ச்சி. அவன் எதிர்

பார்த்தபடி லீவு லெட்டர் கேட்கப்பட்டிருந்தது.

புதிய ஆசிரியர் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கண்காணித்து வந்தார். பணியாள் டீ கொண்டு வரவே அதைக் குடிக்க ஆரம்பித்தார்.

அந்த சமயம் பார்த்து மணி, தான் கொண்டு வந்திருந்த மகேந்திரனின் நோட்டில் இருந்து கிழித்து வைத்திருந்த பிட்டை எடுத்து வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தான். எழுதி முடித்த பிறகு டெஸ்கிற்குள் அதை வைத்து மகேந்திரன் பக்கமாகத் தள்ளிவிட்டான். ஆனால் அதுவோ, உள் பகுதியில் அழுத்தமாகப் படுத்துக் கொண்டு விட்டது!

அரை மணி ஓடியது. அந்த பிட் புது ஆசிரியரின் கண்ணில் பட்டது. குனிந்து.... டெஸ்கிற்குள் கையை விட்டு வெளியே எடுத்தார்; பார்த்தார்.

''என்ன தைரியம் இருந்தா தேர்வு எழுதும் போது இப்படி பிட்டு கொண்டு வந்திருப்பீங்க? உங்க இரண்டு பேர்லே யார்டா கொண்டு வந்தீங்க? அல்லது இரண்டு பேருமே கூட்டா சேர்ந்து கொண்டு வந்தீங்களா? எழுந்திருங்கடா ரெண்டு பேருமே'' - கோபத்தோடு உத்திரவிட்டார்.

''சார்.... சார்... சத்தியமாச் சொல்றேன். இது... இது... என்னோட பிட் இல்லே... நான்... நான்... எதுவுமே கொண்டு வ ர லை.''

''முழுப் பூசணிக்காய ஏன்டா சோத்திலே மறைக்கிறே? இந்த பிட்டிலே இருக்கிறது உன்னோடு கையெழுத்துதானே?''

மகேந்திரன் பயத்தோடு பார்த்து அதிர்ந்தான்.

''ஆமா... ஆனால் இது என்னோட இங்கிலீஷ் நோட்டிலேந்து கிழிக்கப்பட்டிருக்கு... எப்படி... எப்படி இங்கே வந்ததுன்னு எனக்கே... தெரியாது சார்...'' - துக்கம் நெஞ்சை அடைத்தது.

பள்ளிச் சீருடையில் பளிச்சென்று வந்திருக்கும் மகேந்திரனையும், மணியையும் இப்பொழுது அவரால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. காலையில் நடைபெற்ற நிகழ்ச்சி உள்ளத் திரையில் தெளிவாகத் தெரியலாயிற்று.

''எனக்கு காண்பிக்க மாட்டேன்னு சொன்னே இல்லே.... இப்ப வசமா... மாட்ட வச்சேன் பார்த்தியா....?'' என்று மனதிற்குள் வெற்றி முரசு கொட்ட மகேந்திரனை அலட்சியமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் மணி.

எட்டணான்னு நெனச்சு ஒரு ரூபாய் கொடுத்தப்போ நாணயமா மீதிக் காசைத் திருப்பிக் கொடுத்த இவனா காப்பி அடித்திருப்பான்! எல்லா வினாக்களுக்கும் அதிகப் பிழை இல்லாமல் விடை எழுதிக் கொண்டிருக்கும் இவனுக்கு இந்த விடுமுறை விண்ணப்பத்தைப் பாராமல் எழுதவா தெரிந்திருக்காது? உம் - என்ன செய்வது?

''வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே



வாக்குறுதி தர வேண்டும்

காந்தியடிகளிடம் ஒருவர் காந்தியடிகளின் படத்தில் கையெழுத்திட்டுத் தருமாறு வேண்டினார். "நான் இந்தப் படத்தில் கையெழுத்துப் போட வேண்டுமென்றால் ஒரு வாக்குறுதி தர வேண்டும்" எனக் கேட்டார் காந்தி. "என்ன வாக்குறுதி?" எனக் கேட்டார் வந்தவர். "நான்தோறும் அரைமணி நேரத்திற்குக் குறையாமல் கைராட்டையில் நூல் நூற்பதாக நீங்கள் எனக்கு வாக்குறுதி தரவேண்டும்" என்று கேட்டார் அண்ணல். சிறிது யோசனை செய்துவிட்டு, "இது என்னால் முடியாத காரியம்" என வந்தவர் கூற, அதற்குக் காந்தி, "நீங்கள் சொன்ன உண்மையான பதிலைப் பாராட்டுகிறேன். எனக்கு வாக்குத் தந்துவிட்டு வாக்குத் தவறுவதைவிட, உங்களால் முடியாது என வெளிப்படையாக ஒப்புக் கொண்டதே மேல்" என்றார். "நான் ஒளிக்காமல் உண்மை பேசியதற்காகத் தாங்கள் கையெழுத்திடக் கூடாதா?" என்று கேட்டார் அந்த மனிதர். சிரித்துக் கொண்டே கையெழுத்திட்டார் அண்ணல்!

- தங்கராஜ், மதுரை – 2.



எனக்கு இப்படி ஒரு சவாலா!'' யோசனையில் ஆழ்ந்தபடி மறுபடியும் இரண்டு பேரின் விடைத் தாள்களையும் வாங்கி உற்று உற்றுக் கவனித்தார் ஆசிரியர். மின் பொறி போல் உண்மை பளிச்சிட்டது. மணியைக் கோபத்தோடு பார்த்து வினவினார்.

''விடைத்தாளில் லீவு லெட்டர் எழுதியிருக்கே இல்லே.... அதை அப்படியே சொல்லு பார்க்கலாம்?''

''மை ஸிஸ்டர்ஸ் மேரேஜ்... க்ரேண்ட் மீ லீவ். த்ரீடேஸ்'' என்று தட்டுத் தடுமாறி வார்த்தைகளை விழுங்கி, சரியாகச் சொல்ல முடியாமல் தவித்தான் மணி.

''உனக்கு பயத்துல சொல்ல வரவில்லை என்றால் எங்கே... இந்த பேப்பர்லே எழுதிக் காண்பி?''

மணியால் சொல்லவும் முடியவில்லை. எழுதிக் காண்பிக்கவும் தெரிய

வில்லை. உள்ளத்தில் மாவு மிஷின் ஓசை. அவனையும் அறியாமல் உடல் நடுங்க ஆரம்பித்தது.

''என் அக்காவுக்குக் கல்யாணம். மூன்று நாட்களுக்கு விடுமுறை கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று உங்க வகுப்பு ஆசிரியர் உங்களுக்கு எழுதிப் போட்டிருக்கிறாரு. அதைத் தான் மகேந்திரன் நோட்டிலே எழுதி வைத்திருக்கிறான். அந்தப் பேப்பரைக் கிழிச்சுக்கிட்டு வந்ததாலே அதைப் பார்த்து அப்படியே எழுதியிருக்கே. ஆனா, பரீட்சையிலே உங்க அண்ணனோட கல்யாணத்திற்காக இரண்டு நாட்களுக்கு விடுமுறை தரும்படி கேட்கப்பட்டிருக்கு. இதை உணர்ந்து கொண்ட மகேந்திரன், வினாவில் கேட்டுள்ளபடி லீவு லெட்டரை மாத்தி எழுதியிருக்கான். ஆனா... நீ என்ன செய்திருக்கே? கிழித்துக் கொண்டு வந்த பிட்டைப் பார்த்து அப்படியே காப்பி அடிக்க எழுதியிருக்கே. அதோட, உங்க ஆசிரியர் என்ன தேதியிலே இதை எழுதிப் போட்டாரோ அதே தேதியைக்கூட மாத்தாம நீ



போட்டிருக்கே. இன்னி தேதிய போடலே.''

தன் ஈனச் செய்கையை எண்ணி வெட்கினவனாய் உண்மையான வருத்தத்தோடு விழிகள் பனிக்க நின்று கொண்டிருந்தான் மணி.

ஒரு வினாடி அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர்,

''மணி! அங்கே பார்'' என்று சுவரை நோக்கிக் கையை நீட்டிக் காண்பித்தார்.

அவர் காட்டிய இடத்தில்..... தேச பிதா காந்தி மகானின் சிரித்த புகைப் படம்!

''நம்ப காந்திஜியைப் பற்றி உனக்கெல்லாம் ஓரளவு தெரிஞ்சிருக்கும்னு நெனைக்கிறேன். அவர் படிக்கும் காலத்திலே, கல்வி அதிகாரி வந்த போது ஆசிரியரே பக்கத்தில் வந்து நின்று கொண்டு, அருகில் இருக்கும் பையனைப் பார்த்து ''கெட்டில்'' என்ற சொல்லின் ஸ்பெல்லிங்கை ஒழுங்காக எழுதும்படி தூண்டினார். அவர் அப்படிச் செய்தாரா? ஆனா, இன்னிக்கி அவர் படத்துக்கு முன்னாடியே உட்கார்ந்து கொண்டு காப்பி அடிக்க எழுதினதும் இல்லாம, பழிய வேற உன் நண்பன் மீது போடறே! காந்தி பிறந்த மண்ணிலே தான் நீயும் பிறந்திருக்கே... அப்படி இருக்க நீ செய்தது நியாயமா?''

ஆசிரியர் கேட்ட கேள்விகள் மணியின் இதயத்திலே சாட்டை அடிகளாக விழுந்தன. ஒவ்வொரு அடியும் அவன் உள்ளத்திலே இருந்த பொறாமைப் பேயை, ஆத்திரப்பேயை, பகைமை யுணர்ச்சிப் பேயை ஓட ஓட விரட்டியது.

''சே.... ஆசிரியர் அனுமதித்தும் கூடக் காப்பி அடிக்காத மகாத்மா காந்தி எங்கே? ஆசிரியர் கண்டு பிடித்தும் கூட உண்மையை ஒத்துக் கொள்ளாத நான் எங்கே?''

அவமானத்தால் மணியின் உடல் குறுகியது.

அவனையும் அறியாமல் அவன் பார்வை மீண்டும் காந்தி மகானின் படத்தின் மீது சென்றது.

''நான் பிறந்த மண்ணில் பிறந்த நீ, இப்படிச் செய்யலாமா? காப்பி அடிப்பது என்பது சரியாகப் படிக்காமல் மற்றவன் அறிவை, மற்றவன் படிப்பைத் திருடுவதுதானே? இதுவும்கூட ஒருவகைத் திருட்டு இல்லையா?'' என்று அவர் கேட்பது போல் தோன்றியது.

அதற்கு மேல் அவனால் பொறுக்க முடியவில்லை. ''சார்! தயவு செய்து என்னை மன்னிச்சுடுங்க. மகேந்திரா நீயும் என்னை மன்னிச்சுடு. இனிமே... நான் இந்த மாதிரி சத்தியமா செய்ய மாட்டேன்'' என்றான் மணி விம்மிய படி.

''செய்த தவறை உணர்ந்து கொண்டு விட்டதால் உன்னைத் தண்டிக்க விரும்பவில்லை. இப்ப உனக்கு மறுபடியும் பதில் எழுத புதிதாக வெள்ளைத் தாள் தரேன். அதிலே எழுத ஆரம்பி. இன்னும் நேரம் இருக்கு. ஆங்கிலப் பாடம் ஒன்றும் வேப்பங்காய் இல்லே... அக்கறையோடும், ஆர்வத்தோடும், கவனத்தோடும் படித்தால் கட்டாயம் நல்ல மதிப்பெண் பெற முடியும்.'' என்று கூறிய ஆசிரியர் புதிய வெள்ளைத் தாளை நீட்டினார்.


''இனி நான் என்றுமே காப்பி அடிக்க மாட்டேன். ஆசிரியரும், மகேந்திரனும் சொன்னதைப் போல ஒழுங்கா படிச்சு, முழு ஆண்டிலே கட்டாயம் பாஸ் மார்க் வாங்குவேன்!'' என்று மனதிற்குள் உறுதி மொழி எடுத்துக் கொண்டு, காந்தி மகானிடம் மானசிகமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டு தனக்குத் தெரிந்த பதில்களை நிதானமாக எழுத ஆரம்பித்தான் புதிய மணி.

காந்தியின் பொன்மொழிகள்

★ குழந்தைகளுடன் கலந்து மகிழ்வதில் கிடைக்கும் இன்பம் வட்டமேசை மகாநாட்டில் கலந்து கொண்டதில் இல்லை.


★ அஹிம்சையிலும் சத்தியத்திலும் தோல்வி என்பதே கிடையாது.

தொகுப்பு : எஸ். விஜயா சீனிவாசன்



நூறு ரூபாய் இரகசியம்

டாக்டர் பூவண்ணன்



5. ஒலியும் ஒளியும்

குழிக்குள்ளே நின்று கொண்டிருந்த பரதன் பயந்தான். அவன் குரல் சாலை வழியே போகிறவர்களுக்குக் கேட்கவில்லை என்பதை உணர்ந்தான். அந்தத் தடாகம் சாலையிலே செல்லும் ஆட்களின் எண்ணிக்கை குறைவு; வாகனங்களின் எண்ணிக்கை அதிகம். வாகனங்கள் வேகமாகச் செல்லும் ஓசையும் அவற்றின் ஹாரன் சப்தமும் பரதனுக்கு நன்றாகக் கேட்டன.

இப்போது என்ன செய்வது?

இருட் குழிக்குள் பாம்போ, தேளோ இருக்கலாம். இரவெல்லாம் அங்கேயே இருந்தால், அவை அவனை விட்டு வைக்குமா?

பரதனைப் பயம் பற்றத் தொடங்கியது.

அப்போதுதான் அவன் தன் குருநாதரான வெள்ளியங்கிரியை நினைத்தான். உடனே அவர் குரல் காதில் ஒலிப்பது போலிருந்தது.

''பரதா! பயப்படாதே! பயம் மனிதனின் விரோதி! பயம் ஒரு பலசாலியைக் கூடக் கோழையாக்கி விடும். 'புலியடிப்பதன் முன்னம் கிலியடிக்கும்' என்பது பழமொழி. எந்த ஆபத்தான சூழ்நிலையிலும், தப்புவதற்கு ஒரு வழி இருக்கும். அதை நீ கண்டுபிடிக்காதபடி பயம் மறைக்கும். அதனால், முதலில் பயத்தை விடு! ஆறிலும் சாவு! நூறிலும் சாவு! அதனால் அச்சம் தவிர்! ஆண்மை தவறேல்!''

பரதன் சட்டென்று உடலைச் சிலிர்த்துக் கொண்டான். மணலில் உட்கார்ந்து எழுந்தவுடன், உடையில் ஒட்டிக் கொள்ளும் மணலைத் தட்டி விடுவதைப் போலப் பயத்தைத் தட்டி விட்டான்.

இதோ, இப்போது அதே குழியில், அதே இருளில், அதே ஆபத்தான சூழ்நிலையில் நிற்கும் பரதன் பயமற்றவன்! பதட்டமடையாதவன்!

மீண்டும் குருநாதரின் குரல் கேட்டது.

''ஆபத்தில் சிக்கிக் கொண்டாயா? சரி. அதிலிருந்து தப்ப வழியில்லை என்று பயந்த மனம் நினைக்கும். பண்பட்ட மனம் நினைக்காது. உன்னைச் சுற்றியுள்ள இடத்தைப் பார். அங்கே இருக்கும் பொருள்களைக் கவனி. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்! அறிவிலே வல்லவனுக்கு ஒரு புழுதியும் ஆயுதம்! அதனால், இருக்கிற பொருளைக் கொண்டு, ஏற்பட்டுள்ள ஆபத்தை எதிர்க்க முடியும் என்ற நம்பிக்கையோடு சிந்தனை செய்! செயல்பட ஒரு வழி தெரியும்!''

பரதன் இருக்கிற குழியைப் பார்த்தான். குழியில் என்ன இருக்கிறது? இருட்டில் தெரியவில்லை.

கைளால் தடவிப் பார்த்தான்.

ஒரு கோல் சிக்கியது.

அது ஒரு கோலா?

இல்லை.

முற்றாத ஒரு கிளை. ஆனால் நீண்ட கிளை. இலைகள் உதிர்ந்து போய் வற்றி ஒரு கோல் போல் இருந்தது.



குழியிலே விழுந்த குருடன், தனது ஊன்றுகோலால், குழியின் ஒரு பக்கத்தை இடித்து, சரியச் செய்து, அதன் வழியே நடந்து வெளியேறி விட்டதாக ஒரு சிறுவர் நாவலில் படித்திருந்தான், பரதன்.

இந்தக் கோலை அப்படிப் பயன் படுத்தலாமா?

முடியாது!

இது கோலல்ல; உறுதியற்ற ஒரு கிளை. ஒருமுறை மண்ணைக் குத்தினால் உடைந்து போகும்.

குழியில் வேறென்ன இருக்கிறது?

பரதன் மீண்டும் இரு கைகளாலும் தடவிப் பார்த்தான். தடவிய ஒரு கையில் ஏதோ ஒன்று, ஏறியது! சட்டென்று இரு கைகளையும் இழுத்து உதறிக் கொண்டான்.

மீண்டும் பயம் அவன் மனத்தே தோன்றியது.

கையில் ஏறியது ஓணானாக இருக்கலாம். பாம்பாக இருக்கலாம். அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் பயம், அவன் மனத்தில் இருக்கக் கூடாது.

குருநாதர் வெள்ளியங்கிரி பாடும் பாரதியின் பாடல் நினைவுக்கு வந்தது.

பரதன் அந்தப் பாடலை உரக்கப் பாடினான்.

“பயம் என்னும் பேய்தனை
அடித்தோம்
வாய்ம்மைப் பாம்பைப்
பிடித்துயிர் குடித்தோம்.”

பாடப் பாட அவன் பயம் பறந்தது.

மீண்டும் கைகளால் தடவிப் பார்த்தான்.

ஒரு கல் கிடைத்தது.

மீண்டும் தடவினான்.

காய்ந்து போன சருகுகள் கிடைத்தன.

மீண்டும் தடவினான்.

மற்றொரு கல் கிடைத்தது.

கிடைத்த கற்கள் கருங்கற்கள். சாலை போடப் பயன்படுத்தும் கருங்கற்கள்.

ஒரு வற்றிய கிளை.

சில காய்ந்த சருகுகள்.

இரு கருங்கற்கள்.

இவை உதவுமா?

உதவ வேண்டும்!

இவற்றைக் கொண்டு தப்ப முடியுமா?

தப்பியாக வேண்டும்!

எப்படித் தப்புவது?

அவன் மூளையில் மின்னலின் வீச்சாய் ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

மடமடவென்று தன் சட்டையைக் கழற்றினான்.

சட்டையின் விலை அதிகம் என்று அவன் மனம் கூறியது.


உடனே பனியனைக் கழற்றினான். பிறகு, முதலில் கழற்றிய சட்டையைப் போட்டுக் கொண்டான்.

கழற்றிய பனியனை, கண்டெடுத்த வற்றிய கிளையின் முனையில் சுற்றிக் கொண்டான். அது இப்போது ஒரு பந்தம் போல் இருந்தது.

பிறகு, சருகுகளை ஒன்றாகச் சிறு குவியல் போலக் குவித்தான். அதன் அருகே மண்டி போட்டு உட்கார்ந்து கொண்டான். இரு கைகளிலும் இரண்டு கற்களை எடுத்துக் கொண்டான். ஒரு கல்லோடு மறு கல்லை மோதச் செய்தான்.

கல் மோதும் ஒலி கேட்டது. ஆனால், அவன் எதிர்பார்த்த ஒளியைக் காணோம்.

கல்லோடு கல் மோதினால் தீப்பொறி உண்டாக வேண்டுமே!



“பட்டாசையெல்லாம் பட்டாபிக்குத் தெரியாமல் ஃபிரிட்ஜுக் குள்ளே ஒளிச்சு வச்சுட்டேன்!”



மோதலில் போதுமான சக்தி இல்லை.

பரதன் தன் பலத்தையெல்லாம் திரட்டி, இடக்கையில் இருந்த கருங் கல்லை, வலக்கையில் இருந்த கல்லால் அடித்தான். வேகமாக அடித்தான். அடித் துக் கொண்டே இருந்தான். ஒளி தோன்ற வில்லை; கைகளில் வலி தோன்றியது.

''பரதா, சோர்ந்து விடாதே! வெற் றிக்கு முன்னேதான் சோர்வு தோன்றும்! சலிப்புத் தோன்றும்! அவற்றுக்கு இடம் தராதே! முயற்சி செய்!''

பரதன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

கல்லிலே கல் மோதும் ஒலி கேட்டுக் கொண்டே இருந்தது.

திடீரென்று சில தீப்பொறிகள் தோன்றின. அவற்றில் சில சருகுகளைத் தாக்க, அதே நேரத்தில் காற்றும் துணை செய்ய, சருகுகள் குப்பென்று தீப்பற்றி எரிந்தன.

பரதன் கற்களைப் போட்டு விட்டு, பனியன் சுற்றிய கிளையை அந்தச் சருகுத் தீயின் அருகில் வைத்தான்.

தீ பனியன் உருண்டை மீது பாய்ந் தது; படர்ந்தது; பற்றிக் கொண்டது.

வற்றிய கிளை இப்போது தீப் பந்தமானது.

பரதன் அந்தத் தீப்பந்தத்தை எடுத் துக் கொண்டு எழுந்து நின்றான். அதை இரு கையாலும் பிடித்தபடி வானை நோக்கி உயர்த்தினான். தீப்பந்தம் குழிக்கு வெளியே ஒரு முழ உயரத்தில் தலைநீட்டிக் கொண்டிருந்தது!

பரதன் தீப்பந்தத்தை வலமும் இடமுமாக அசைத்தபடி, ''காப்பாத் துங்கோ! காப்பாத்துங்கோ'' என்று கத்தினான்.

தடாகம் சாலையில் காரோட்டிச் சென்ற சிலர் இந்தத் தீப்பந்தத்தைக் கண்டனர். ஆனால் காரை நிறுத்தாமல், வேகத்தைக் குறைக்காமல் சென்று விட்டனர்.

கட்டட வேலை செய்யும் மேசன் (மேஸ்திரி) ஒருவர் அந்தச் சாலையில் சென்றார். அவர் தீப்பந்தம் அசைவதைக்

கண்டு அருகே வந்தார். அப்போது பரதனின் குரல் ஒலி கேட்டது. உடனே அவசர அவசரமாக வந்து, குழிக்குள் எட்டிப் பார்த்தார். பரதனைக் கண்டு, கைகொடுத்து மேலே தூக்கிக் காப் பாற்றினார்.

பரதன் அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு வீட்டுக்குச் சென்ற பிறகுதான் காற்றும் மழையும் கலந்து வந்தன.

பரதன் குழியிலிருந்து தான் தப்பிய கதையைக் கூறி முடித்தான்.

ஞானசம்பந்தன், ''பரதா, நீ சொன் னதை ஒருவகையான ஒலியும் ஒளியும் என்று குறிப்பிடலாம். கல்லின் ஒலியும், கல்லிலிருந்து பிறந்த தீப்பொறி ஒளியும் தீப்பந்தத்தை உருவாக்கின. உன் குரலின் ஒலியும் தீப்பந்தத்தின் ஒளியும் உன் னைக் காப்பாற்றின'' என்று கூறினான்.

''ஞானசம்பந்தம் சொல்வது சரி. ஆனால் இது வேறு வகையான ஒலியும் ஒளியுமாமகத் தெரிகிறது. பரதனின் குருநாதர் கொடுத்த குரல் ஒலியும், பரதனின் அறிவு ஒளியும் சேர்ந்து பரத னைக் காப்பாற்றி விட்டன. அறிவொளி யால் பரதன் ஆபத்தைத் தடுத்துக் கொண்டான்'' என்றான், நாகன்.

அன்று முதல் ஞானசம்பந்தம், பரதன், நாகேந்திரன் மூவரும் நெருங் கிய நண்பர்கள் ஆனார்கள். வேறு வழி யில்லாமல், அந்தோணிசாமியும் அவர் களுடன் சேர்ந்து, மூவர் கூட்டணியை நால்வர் கூட்டணியாக்கினான்.

தடாகம் சாலைக்குப் பெருமை தரும் ஒரு அமைப்பு இருந்தது. அதுதான் அரசினர் பொறியியற் கல்லூரி. இத னைச் சுருக்கமாக ஜி.சி.டி. (Government College of Technology) என்று குறிப்பிடு வார்கள். பல பெரிய கட்டடங்களும், விளையாட்டு மைதானமும் அடங்கிய அந்த நிலப்பரப்பே ஐம்பது, அறுபது ஏக்கர் இருக்கும்.

அங்கே காலையிலும், மாலை யிலும், மாணவர்கள் தவிர மற்றவர்கள் நிறையப் பேர் வருவார்கள். பணக்காரர் கள் காரிலே வந்து இறங்கி, ஜி.சி.டி.யின் உள்ளே உள்ள நீண்ட சாலைகளில் வாக் கிங் போவார்கள். இளைஞர்கள் உடற் பயிற்சி செய்வார்கள். பெண்களும் வாக் கிங் போக அங்கே வருவார்கள்.

பரதனின் வீடு ஜி.சி.டி.க்கு அருகே இருந்தது. அவனுடைய குருநாதரான வெள்ளியங்கிரி, மாலை வேளைகளில் அவனை ஜி.சி.டி.க்கு அழைத்து வரு வார். ஆள் நடமாட்டம் அற்ற பகுதிக்கு அழைத்துச் சென்று அவனுக்கேற்ற உடற்பயிற்சிகளைக் கற்றுத் தருவார். பிறகு இருவரும் சிறிது நேரம் நடப் பார்கள். சிறிது நேரம் ஓடுவார்கள்.


இதெல்லாம் காலையில் நடை பெறும்.

மாலையில் வெள்ளியங்கிரி வீடு திரும்புவதற்கு நேரமாகும். அதனால், பரதன் மட்டும் வருவான். மாலையில் அவன் உடற்பயிற்சி செய்வதில்லை.


ஜி.சி.டி. வளாகத்தின் தென் மேற்கு மூலை மாலையில் அமைதியாக இருக் கும். அங்கே செல்லும் தார் போட்ட சாலைக்கு அருகே அடர்ந்த மரங்கள். மரங்களின் அடியில் சிமெண்ட் பெஞ்சு கள்.

பரதன் அங்கே, கடைசியில் உள்ள புங்கமரத்தின் அடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படிப்பான். அல்லது ஒரு கதை, கவிதை பற்றிச் சிந்திப்பான்.

குள்ளமான தான், பேச்சாளனாகப் புகழ்பெற வேண்டும் என்று நினைக்கும் பரதனுக்கு, புகழ்பெற்ற எழுத்தாளனாக



''பட்டாசை வெறும் கையாலே பிடிச்சுக்கிட்டுக் கொளுத்தாதேன்னு சொன்னாயேம்மா!''



காந்தி சிரித்தார்

★ 1942 ஆம் ஆண்டு ஆகாகான் அரண்மனையில் காந்தியடிகள் கைதியாக இருந்த போது மகாதேவ தேசாய் காலமாகிவிட்ட துக்கத்தில் தனது பிறந்த நாளன்றும் கூட துக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

இவரை மகிழ்விக்க எண்ணிய சரோஜினி தேவி, "நான் கேட்கின்ற கேள்விகட்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். காந்தியடிகளைப் பார்த்து, "ஏழைகளிடம் இறைவன் ரொட்டி வடிவில் வருகிறான் என்பது யாரால் சொல்லப்பட்டது?" என்று கேட்டார். காந்தியடிகள் தீவிரமாகச் சிந்தித்தார். 'வாக்கியம் மிகவும் தெரிந்ததாக இருந்தாலும் நினைவுக்கு வரவில்லை' என்று சொன்னார்.

சரோஜினி தேவி ஒரு பள்ளிக்கூட ஆசிரியை போல் விரலை ஆட்டிக் கொண்டு, "பெரியவரே! நீங்கள் தாம் சொல்லியிருக்கிறீர்கள்" என்று சொன்னதும் காந்தியடிகள் விழுந்து விழுந்து சிரித்தாராம்!

– இராம. சிவக்குமார்,
செய்யார் வட்டம்.

வேண்டும் என்றும் ஆசை. கண்ணில்லாத குருடரான அந்தகக் கவி வீரராகவ முதலியார் அற்புதமான கவிதைகள் படைக்கவில்லையா? மற்றவரைப் போல ஓடி ஆடிச் செயல்புரிய முடியாமல் நொண்டியாகப் போன எச். ஜி. வெல்ஸ் அற்புதமான நூல்களை உருவாக்கவில்லையா? - இவையெல்லாம் வெள்ளியங்கிரி எழுப்பும் வினாக்கள். இவர்கள் வரலாறுகளையும், இவர்களைப் போல உடல் ஊனம் பெற்றவர்கள் தளராது முயன்று ஞாலம் போற்றும் அழியாத புகழ் அடைந்த அற்புதங்களையும் கூறியிருக்கிறார், வெள்ளியங்கிரி. அதனால் எழுத்தாளனாக வேண்டும் என்ற வேட்கை, வேகம் அவனுக்குள் எழுந்தது.

எழுத்தாளன் என்ன செய்ய வேண்டும்?

நிறையப் படிக்க வேண்டும்!

நிறையச் சிந்திக்க வேண்டும்!

இந்த இரு செயலுக்காகவே மாலையில் பரதன் ஜி.சி.டி. வளாகத்தின் தென் மேற்கு மூலையைத் தேடி வருவான்.

அன்று மாலையும் பரதன் அதற்காகவே புறப்பட்டான். அவன் கையில் அறிஞர்கள் வாழ்வில் நிகழ்ந்த அற்புதச் சம்பவங்களைச் சுவையாகத் தொகுத்துக் கூறும், "அவர்கள் வாழ்விலே..." என்னும் நூல் இருந்தது.

ஜி.சி.டி.க்கு பிரதான வாசல்கள் இரண்டு. இரண்டும் கிழக்கு நோக்கியவை. ஒன்று, வளாகத்தின் வடபகுதியில் அழகேசன் சாலைக்கு எதிரே இருந்தது. மற்றொன்று அங்கிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தள்ளி, அதே தடாகம் சாலையில், வளாகத்தின் தென் புறத்தில் இருந்தது.

பரதன் அந்தத் தென்புற வாசலில் நுழைந்து சில அடி நடந்தான். அவன் எதிரே இருவர் வந்து கொண்டிருந்தனர். இருவரும் அவன் கவனத்தைக் கவர்ந்தனர்.

எதனால் இருவரும் அவன் கவனத்தைக் கவர்ந்தனர்?

சிலர் உருவத்தால் நம் கவனத்தைக் கவர்வார்கள்.

இவர்கள் புருவத்தால் பரதனின் கவனத்தைக் கவர்ந்தனர்.

இருவரும் நல்ல உயரம். உடல் பலம் காட்டும் உருவம்.

ஒருவனுடைய இரு புருவங்களும் டூத் பிரஷ் போல அடர்த்தியாகக் கருகருவென்று இருந்தன.

இன்னொருவனுடைய முகம், மோனலிசா முகம் போல, புருவமே இல்லாமல் இருந்தது.

இந்தப் புருவங்கள் பரதனைக் கவர்ந்தன.

அதனால் அவன் அவர்களைப் பார்த்துக் கொண்டே நடந்தான். அவர்கள் பரதனைப் பார்க்காமல் தமக்குள் ஏதோ பேசிக் கொண்டே நடந்தார்கள்; பரதனைக் கடந்தார்கள்.

பரதனுக்கு, முரண்பட்ட இரு புருவமும் ஒரு வகை ஆவலைத் தூண்ட திரும்பிப் பார்த்தான்.

இருவரும் நடந்து, வாசலை விட்டு வெளியேறி, தென்புறம் திரும்பி, ஆர். எஸ். புரம் நோக்கிச் செல்லும் வழியே சென்றார்கள்.

பரதன் இருவகை புருவங்களையும் தான் எழுதப் போகும் ஏதாவது ஒரு கதையில் புகுத்த வேண்டும் என்று நினைத்தபடி, தான் வழக்கமாக உட்காரும் தென் மேற்கு மூலைக்குச் சென்றான். பெஞ்சில் உட்கார்ந்து, கொண்டு வந்த புத்தகத்தைப் படித்தான்.

அரை மணி நேரம் சென்றது.

ஒளி மங்கியது.

'படித்தது போதும்' என்று எழுந்தான்.

புத்தகத்தில் எதுவரை படித்தான் என்பதைக் குறிக்க, ஒரு 'புக் மார்க்' வைக்க நினைத்தான். கீழே ஏதாவது காகிதம் கிடக்கிறதா என்று பார்த்தான்.

கீழே, அவன் காலருகே ஒரு வெள்ளைத் தாள், நீண்ட சதுரமான தாள் இருந்தது.

அதை எடுத்து, புத்தகத்தில் வைக்க நினைத்துக் குனிந்து, கை நீட்டினான்.

அந்த வெள்ளைத்தாள் அவனுக்குப் பலப்பல தொல்லைகள் தரப் போகிற தாள். அதை எடுத்தால் அவனுக்கு ஆபத்து வரும். அதை உணர்ந்தது போல, காற்று திடீரென்று வேகமாக வீசி அந்தத் தாளை விலகிச் செல்லச் செய்தது.

வாயு பகவான் அவனுக்கு உதவி செய்வதை பரதன் உணரவில்லை.

எழுந்து போய் அந்தத் தாளை எடுத்துக் கொண்டான்.


விதி யாரை விட்டது?

(தொடரும்)

"ஸ்வீட் டப்பாவினுள்
கட்டெறும்பு
இருந்ததை
நான் கவனிக்கலே,
டாக்டர்!"



"வரும்போது பாம்பு
வாணம் வாங்கிட்டு
வரச் சொல்லி
என் மனைவி
ஞாபக முடி போட்டு
அனுப்பிட்டாள்."





பொல்லாத குதிரை

ஒரு வியாபாரியிடம் ஒரு பொல்லாத குதிரை இருந்தது. அதன் பக்கத்தில் யார் போனாலும் அது உதைக்கும். ஒருநாள் அந்த வியாபாரி அந்தக் குதிரையை ஒரு நதிக்கரையில் உள்ள மரத்தில் கட்டி விட்டு, தண்ணீர் குடிப்பதற்காக இறங்கினான். அப்பொழுது ஓர் ஆள் ஒரு கோவேறு கழுதையுடன் அங்கு வந்தான். அவனும் தன் கோவேறு கழுதையை அதே மரத்தில் கட்டப் போனான்.

"உன் கோவேறு கழுதையை அந்த மரத்தில் கட்டாதே! என் குதிரை பொல்லாதது, உதைக்கும்" என்று வியாபாரி நதிக்கரையிலிருந்து கத்தினான். ஆனால், அந்த ஆள் அதைப் பொருட்படுத்தவில்லை. அதே மரத்தில்தான் கட்டுவேன் என்று பிடிவாதம் பிடித்துக் கட்டி விட்டு அவனும் தண்ணீர் குடிப்பதற்காகக் கீழே இறங்கினான்.

அப்பொழுது குதிரை, கோவேறு கழுதையை நன்கு உதைக்க, கோவேறு கழுதை இறந்தது.

கோவேறு கழுதைக்குச் சொந்தக்காரன், வியாபாரியைப் பிடித்துக் கொண்டு போய் நீதிபதியின் முன்னே நிறுத்தி, "இவருடைய குதிரை என் கழுதையைக் கொன்று விட்டது" என்று சொன்னான்.

"என்ன இது? உண்மைதானே!" என்று நீதிபதி வியாபாரியிடம் கேட்டார். வியாபாரி பதில் சொல்லவில்லை. ஊமையைப் போல நடித்தான்.

"இந்த வியாபாரி என்ன ஊமையா?" என்று நீதிபதி கேட்டார்.

அதற்குள் அந்த ஆள், "அவரை நம்பாதீர்கள். வேண்டுமென்றே ஊமையைப் போல நடிக்கிறார். நான் என் கோவேறு கழுதையை அவர் குதிரையின் பக்கத்தில் கட்டப் போன போது, 'என் குதிரையின் பக்கத்தில் உன்னுடைய கோவேறு கழுதையைக் கட்டாதே, அது உதைக்கும்' என்று திரும்பத் திரும்பச் சொன்னார். அப்போது பேச முடிந்தது, இப்பொழுது பேச முடியவில்லையாக்கும்!" என்றான்.

நீதிபதி, "எப்பொழுது அவர் தடுத்தும் நீ கட்டினாயோ, உன் கோவேறு கழுதையை இழந்ததற்கு அவர் பொறுப்பில்லை" என்று தீர்ப்புக் கூறினார்.

– மு. எத்திராஜ், குடியாத்தம்.

ஆராய்ச்சியாளர்களை அசத்தியவர்!



ஜானகி மணாளன்

1761 ஆம் ஆண்டில் ஓர் நாள்.

''ஐயா...! யாரோ ஒரு அம்மாள்.... 'மேடம் டி மார்டிவில்லி'யாம்... உங்களைப் பார்க்க வந்திருக்காங்க....'' என்றான் வேலையாள்.

''மார்டிவில்லியா...? அவர் டச்சு தூதுவரின் மனைவி ஆயிற்றே... என்ன விஷயமாம்? வரச் சொல்....'' என்றார் போர்க்.

உள்ளே வந்த பெண்மணி, ''ஐயா! என் கணவர் சில மாதங்களுக்கு முன் காலமாகி விட்டார். ஒருவருக்கு அவர் பணம் தரவேண்டியிருந்தது. இறப்பதற்கு முன்பு, என் கணவர் அந்தக் கடனைக் கொடுத்துத் தீர்த்து விட்டார். ஆனால், அதற்கு ஆதாரமான சீட்டு எதுவும் என்னிடம் இப்போது இல்லை. அந்த ஆள் இப்போது, தான் பணம் பெற்றுக் கொள்ளவே இல்லை என்று பொய் சொல்கிறான். தயவு செய்து எனக்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்....'' என்று வேண்டினாள்.

''அப்படியா...? அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்...?'' என்று கேட்டார் போர்க்.

''நீங்கள்தான் இறந்த என் கணவருடன் பேசி, உண்மை என்ன என்று கேட்டுச் சொல்ல வேண்டும்....'' என்றாள் அப்பெண்மணி.

'இறந்தவருடன் பேசுவதா? அது எப்படி சாத்தியம்?' - என்று குழம்புகிறீர்களா? இது உண்மைச் சம்பவம். 'போர்க்'கிடம் அந்த அற்புதச் சக்தி இருந்தது. இறந்து போன எவருடைய ஆவியையும் அவரால் அழைத்துப் பேச முடியும். எனவேதான், அப்பெண்மணி அவரை நாடி வந்தாள்.

''சரி... நீங்கள் போய் விட்டு, நாளைக்கு வாருங்கள்... நான் உங்கள் கணவரிடம் கேட்டு வைக்கிறேன்....'' என்று அவளை அனுப்பி வைத்தார் போர்க்.


மறு நாள். அந்தப் பெண்மணி வந்தாள். போர்க் சொன்னார், ''உங்கள் கணவருடன் பேசினேன். இறப்பதற்கு ஏழு மாதங்கள் முன்பே அந்தக் கடனை அவர் அடைத்து விட்டாராம்....''

''அப்படியானால் அதற்கு ஏதாவது ஆதாரச் சீட்டு எழுதி வாங்கியிருப் பாரே.... அது பற்றி ஏதாவது சொன் னாரா?''

''ஆம் அம்மணி... அந்த நபரிட மிருந்து பெற்ற ரசீதை அவர் உங்கள் வீட்டின் பீரோ டிராயரில் பத்திரமாக வைத்திருக்கிறாராம்..... எடுத்துக் கொள்ளுங்கள்...'' என்றார் போர்க்.

''அப்படியா? ரொம்ப நன்றி ஐயா...'' என்ற அந்தப் பெண்மணி, மகிழ்ச்சியுடன் நேராக வீட்டுக்கு ஓடி னாள். பீரோவைத் திறந்தாள். டிரா யரில் ரசீதைத் தேடினாள். ஆனால் ரசீது எது வும் கிடைக்கவில்லை.

அவளுக்கு மிகுந்த ஏமாற்றமாகி விட்டது. தன் கணவரின் ஆவியுடன் பேசியதாக போர்க் பொய் சொல் கிறாரோ என்று கூடச் சந்தேகப்பட் டாள். இருந்தாலும் மறுபடியும் ஒரு தடவை அவரிடமே போய்க் கேட்டு வர விரும்பினாள். போய்ப் பார்த்தாள்.



''பார்சிலோனா வெடியாம்டி!

''என்ன அம்மணி? ரசீது அகப் பட்டதா?'' எனக்கேட்டார் போர்க்.

''இல்லை ஐயா! நன்றாகத் தேடி விட்டேன். கிடைக்கவில்லை.''

''அப்படியா? சரி... நாளைக்கு மீண் டும் வாருங்கள்... இன்று இரவு மறுபடி யும் உங்கள் கணவருடன் பேசி, விவர மாகக் கேட்டு வைக்கிறேன்....''

அப்பெண்மணி போய்விட்டு மறு நாள் வந்தாள். அன்று அவளுக்கு நல்ல செய்தி கிடைத்தது. போர்க் சொன்னார், ''அம்மா! அந்த பீரோ டிராயரில் அறைக் குள் அறையாக ஒரு ரகசிய அறை இருக் கிறதாம். அதனுள் அந்த ரசீதைப் பத்திரப் படுத்தி வைத்துள்ளாராம். கூடவே இன்னும் சில ரகசியக் கடிதங்களும் உள்ளனவாம்.... போய் எடுத்துக் கொள் ளுங்கள்....'' என்றார் போர்க்.

அந்தப் பெண்மணி வீட்டுக்கு ஓடி னாள். போர்க் கூறியது அனைத்தும் உண்மை. ரசீதும், கூட இருந்த ரகசியக் கடிதங்களும் கிடைத்து விட்டன. ரசீ தைக் காட்டிக் கடனிலிருந்து தப்பித்து விட்டாள் அப்பெண்மணி.

போர்க் என்ற அந்த அற்புதச் சக்தியுள்ள மனிதனின் முழுப் பெயர் இமானுவல் ஸ்வீடன்போர்க். அவர் ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகரில் 1688 ஆம் ஆண்டு பிறந்தார். ஜெஸ்பர் ஸ்வீடன்போர்க் என்ற பிஷப் ஒருவரின் மகனே அவர். அவர் ஒரு விஞ்ஞானி. அறிவியலின் எல்லாத் துறைகளிலும் அவர் சிறந்து விளங் கினார். அவர் ஒரு தத்துவ ஞானி. தீர்க்கதரிசி. விந்தை மனிதர்.

அவர் தனது 57 வது வயதில் ஒரு கனவு கண்டார். அதில் இயேசு அவர் முன் தோன்றிப் பேசினார். அதன் பிறகு, அவருக்குப் பலவித அற்புதச் சக்திகள் ஏற்பட்டன என்கிறார்கள். அவற்றில் ஒன்றுதான் இறந்தவரின் ஆ வியுடன் பேசுவது. இன்னும் அவ ருக்கு வேறு கிரகங்களின் உயிரினங் களுடன் நேரடித் தொடர்பு இருந்தது என்கிறார்கள். அது மட்டுமல்ல. எங்கோ தொலை தூரத்தில் நடப்பதை நினைத்த மாத்திரத்தில் கண் முன்

நடக்கும் காட்சி போன்று அவரால் பார்த்து அறிந்து கொண்டு விட முடிந்த தாம். உதாரணத்துக்கு ஒரு நிகழ்ச்சி. 1759 செப்டெம்பரில் நடந்தது.

ஸ்வீடன்போர்க்கிற்கு ஒரு நண்பன். வில்லியம் காஸ்டில் என்று பெயர். ஸ்டாக்ஹோம் நகரிலிருந்து 480 கி.மீ. தூரத்தில் உள்ள 'கோடேபர்க்' என்ற நகரில் வாழ்ந்தார்.

ஒரு சமயம் போர்க் அவரைப் பார்க்க அங்கு சென்றார். மாலை நேரம். இருவரும் அவர் வீட்டில் உண வருந்த மேஜை முன் அமர்ந்தனர். அப் போது மாலை ஆறு மணி.

திடீரென்று போர்க்கிடம் ஒரு பர பரப்பு. அவர் முகம் வெளுத்தது. நிலை கொள்ளாமல் தவித்தார். அவர் கண்கள் நீரைப் பொழிந்தன. அவர் தன் வாயில் கர்ச்சீப்பைத் திணித்துக் கொண்டு குலுங் கக் குலுங்க அழுதார்.

அதைப் பார்த்த வில்லியம் திடுக் கிட்டார். ''என்ன நண்பரே! ஏன் அழுகி றீர்கள்? என்ன ஆயிற்று? ஏதாவது உடல் நலக் குறைவா...?'' என்று வினவினார்.

அதற்கு போர்க் துக்கம் தொண் டையை அடைக்கச் சொன்னார். ''ஸ்டாக் ஹோம் நகரில் நான் வசிக்கும் தெருவில் ஒரு வீட்டில் தீப் பற்றிக் கொண்டு விட்டது....''

''சீ... பைத்தியம் யார் வந்து உம் மிடம் இப்போது அதைச் சொன்னது? உம் ஊர் இங்கிருந்து 480 கி.மீ. தூரத்தில் இருக்கிறது.... தெரிந்து கொள்ளும்'' என்றார் வில்லியம்.

''இல்லை வில்லியம்.... இதோ என் கண் முன்னே எல்லாம் காட்சி யாகத் தெரிகிறது. அந்தத் தீ, வீடு வீடாகப் பரவிக் கொண்டே இருக் கிறது. என் வீட்டிற்கும் அத் தீ பரவி விடுமோ என்று அஞ்சுகிறேன்....'' என் றார் போர்க்.

வில்லியம் அவருக்கு ஆறுதல் சொன்னார். அதே நேரத்தில் சுத்தப் பைத் தியக்காரன் என்று ஏளனமும் செய்தார்.

நேரம் நகர்ந்து கொண்டே இருந் தது. இரவு எட்டு மணி. அதுவரையில் பர பரத்துக் கொண்டிருந்த போர்க் திடீ



ரென்று துள்ளி எழுந்தார். வில்லியத்தின் கைகளைப் பற்றிக் குலுக்கினார். அவரிடமிருந்து நீண்ட ஒரு நிம்மதிப் பெருமூச்சு!

''அப்பா....டா...! தீயை அணைத்து விட்டார்கள். என் வீடு தப்பித்தது....'' என்றார் போர்க்.


வில்லியம் மகிழ்ந்தார். என்றாலும், எல்லாம் அவருக்குப் பெரும் புதிராகவே இருந்தது.

அப்புதிருக்கு விடை அடுத்த இரண்டாம் நாள் கிடைத்து விட்டது. போர்க் வர்ணித்த காட்சி முற்றிலும் உண்மை. அவர் விவரித்த விதமே ஸ்டாக்ஹோமில் தீப்பற்றி எரிந்திருக்கிறது. அரசாங்க அறிவிப்பே வெளிவந்து விட்டது.

இப்படிப் பல அற்புதச் சக்திகளைப் பெற்றிருந்த ஸ்வீடன் போர்க் ஆராயச்சியாளர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் விளங்காத ஒரு பெரும் புதிராகவே இருந்தார். 1772 - ல் லண்டனில் அவர் இறந்தார். அவரது தலை மட்டும் துண்டிக்கப்பட்டு அங்கேயே ஆராய்ச்சிக்காக வைத்துக் கொள்ளப்பட்டது. உடல் மட்டும் ஸ்வீடனுக்கு அனுப்பப்பட்டது. அங்கு அது ஸ்வீடிஷ் சர்ச்சில் அடக்கம் செய்யப்பட்டது. 1908 ஆம் ஆண்டு அது உப்சலா தேசியத் தேவாலயத்திற்கு மாற்றிப் புதைக்கப்பட்டது.

பிற்பாடு சமீபத்தில் 1977 - ல் அவருடைய மண்டை ஓடு லண்டன் 'சோதிபை பார்க் பெர்நெட்'டில் ஏலத்தில் விற்கப்பட்டது. ஸ்வீடிஷ் அறிவியல் கழகத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் அதை ரூ. 37,000 க்கு ஏலத்தில் எடுத்துச் சென்று, அதை அவருடைய உடலுடன் இணைத்தார்.

இப்படிப்பட்ட பல அற்புதச் சக்திகளைப் பெற்றிருந்த விந்தை மனிதர் ஸ்வீடன்போர்க் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். அவை பிற்பாடு தோன்றிய பல அறிஞர்களின் பல கண்டு பிடிப்புகளுக்குத் தூண்டுகோலாக இருந் துள்ளன. தற்போது அவை முப்பதுக்கும் அதிகமான உலக மொழிகளில் மொழி மாற்றம் செய்யப் பட்டுள்ளன.



பறப்பது எந்தக் கரப்பு?

பெருமாள் கோவிலில் திரு விழா. ஏழாம் நாள் குதிரை வாகனம். பெருமாளுக்கு அலங்காரம் செய்யத் தேவைப்படும் நகைகளை எடுக்க, நிர்வாக அதிகாரி, பெட்டக அறைக்குள் வந்தார். திருஆபரணப் பெட்டியைத் திறந்தார்.

''மொலு மொலு''வென்று நூற்றுக் கணக்கான கரப்புகள் பெட்டிக்குள் ளேயே மேலும் கீழுமாக ஓடின. ஒருசில 'பர்'ரென்று பறந்து சுவர்களிலும், சன்னல்களிலும் ஏறின.

''சனியன்கள். எப்படி கெட்டியாக மூடி வைத்தாலும் எப்படியோ உள்ளே வந்து மொய்த்துடறதே! வேறு பொரு ளாக இருந்தால் துடைப்பத்தால் அடித் துக் கொன்று விடலாம். பெட்டி நிறைய பெருமாளின் புனிதமான நகைகள். எப்படி இதையெல்லாம் விரட்டி நகை களை எடுக்கிறது?'' என்று சலித்துக் கொண்ட அதிகாரி இரண்டு பணியாளர் களை அழைத்தார்.

''பெட்டியை அப்படியே தூக்கிக் கொண்டு போய், உள் பிரகாரத்தில் வெயில் அடிக்கும் தரையில் திறந்து வையுங்கள். நானும் வருகிறேன்'' என்று பெட்டியைப் பூட்டி விட்டு நடந்தார்.

அப்பொழுதுதான் முட்டையில் இருந்து பொரித்து வெளிவந்திருந்த குஞ்சுகளில் ஒன்று 'அம்மா பசி' என்றது. ''நம்ம கரப்பான்பூச்சி இனத் துல, பசிக்கிறதுன்னு யாருமே இதுவரை கேட்டதில்லை. உன்னைச் சுற்றிப் பாரு, இந்தப் பெட்டிக்குள் காகிதம், அட்டை, பட்டுத் துணி, எல்லாம் இருக்கு. இதெல் லாம் நமக்கு ஏத்த உணவு வகைதான். இதெல்லாம் உனக்குப் பிடிக்கலையா, கொஞ்ச நேரம் பொறுத்துக்க. இந்தப் பெட்டியோட நம்பளை மேல் பிரகாரத் திற்குக் கொண்டு போய்க் கவிழ்க்கப் போறாங்க. பக்கத்தில் மடப்பள்ளி இருக்கு. புளி, மிளகாய், பயிர் வகைகள், நெய், வெண்ணெய், காய்கறி வகைகள் எல்லாம் இருக்கும். உனக்கு எது வேணுமோ அதைச் சாப்பிடலாம். ஆனால் பெட்டியைத் திறந்ததும் 'குடு குடு'வென்று யார் கைக்கும் அகப்படாது ஓடிப் போய் விட வேண்டும்'' என்றது அம்மா கரப்பு.

''தம்பி, உனக்கு அசைவ வகை வேணும்னு ஆசையா இருந்தா, மடப்பள்ளி மூலையில் ஒரு சாக்கடை இருக்கு. அது வழியா போனால், நாலு தெரு தாண்டி ஒரு மிலிடெரி ஓட்டல் சமையலறை வரும். உனக்கு வேண்டி யதை ஒரு வெட்டு வெட்டலாம்'' என்றது இன்னொரு கரப்பு.

''ஆமாம், நாம்ப சர்வ பட்சணி. எதையும் தின்னக்கூடிய உடலமைப்புப் பெற்றவர்கள். மரக் கட்டையைக் கூட நம்மால் கரண்டித் தின்ன முடியும். நமது உணவுப் பாதையில் எதையும் சீரணிக்கச் செய்யும் 'என்சைம்' என்ற திரவம் சுரக்கிறது.''

பெட்டிக்குள்ளேயே ஒரு கரப்புப் பறந்தது. ''அம்மா, இந்தக் கரப்பைப்

ரேவதி

போல என்னாலும் பறக்க முடியுமா?'' என்று கேட்டது குட்டிப் பூச்சி.

''நாமெல்லாம் பெண் பூச்சிகள். கரப்பு இனத்தில் ஆண் கரப்பால் மட்டுமே பறக்க முடியும். அதற்குத் தேவையான பெரிய இறக்கைகள் அவைகளுக்கு மட்டுமே உண்டு. நாம் தரையில் வேகமாக ஓடலாம். நம்மால் அவ்வளவு தான் முடியும்,'' என்றது அம்மா கரப்பு. குட்டி ஒன்று பறக்க முயன்றது.

''ஆணாக இருந்தால் பறக்கலாம்னு சொன்னதும் இப்பவே பறக்க ஆரம்பிச்சுட்டியா? இப்ப உன்னால் பறக்க முடியாது. இறக்கைகள் இன்னும் முளைக்கலையே. பலமுறை நீ தோலுரித்து, தோலுரித்துப் பெரியவனாக வேண்டும். அதுவரை உனக்கும் உன் தங்கைகளுக்கும் வேறுபாடு கிடையாது'' என்றது அம்மாக் கரப்பு.


பெட்டி அதிர்ந்தது. கீழே வைத்து விட்டார்கள். ''இனிமே எப்ப வேண்டுமானாலும் மூடியைத் திறப்பார்கள். நாம்ப வெளியேறித் தப்பிக்கத் தயாராய் இருக்க வேண்டும்'' என்ற எச்சரிக்கை விடுத்தது பெரிய கரப்பு.

உடம்பின் பின்பக்கத்தில் காராமணிப் பயிரின் அளவுக்கு முட்டைகளை இட்டு, அவற்றை உடல் பிசினால் ஒட்ட வைத்துக் கொண்டிருந்தது ஒரு பெரிய பெண் கரப்பு.

''இட்டு ஒட்ட வைச்சுட்டியா? அது போதும். நம்ப குழந்தைகள் புத்திசாலிகள். எந்தச் சூழ்நிலையிலும் தாக்குப் பிடித்து உயிர் வாழும். இந்தப் பெட்டியின் அடியில், கீழ்வரிசையில் ஒரு வெள்ளிக் குத்துவிளக்கு இருக்கு. அதன் பாதத்தின் அடிப்பாகம் குமிழ்ந்திருக்கும். அங்கே எண்ணெய்ப் பசை கூட இருக்கும். அதில் போய் இட்ட முட்டைகளை ஒட்ட வைத்து விடு. முட்டைகள் பிழைத்துக் கொள்ளும்'' என்று உபதேசித்தது ஒரு பெரிய கரப்பு.

பூட்டைத் திறந்து பெட்டியின் மூடியைத் திறந்தார்கள். 'சுளீர்' என்று பெட்டிக்குள் வெயில் பாய்ந்தது. 'மொலு மொலு'வென்று கரப்புகள் பெட்டிக்குள்ளேயே மேலும் கீழுமாக ஓடின.

''நான் அம்மன் சன்னதிக்குப் பறந்து போறேன். அங்கேதான் மின்விளக்கு



இருக்காது. அபிஷேகம் பண்ணும் பால், தயிர், தேன் சொதசொதப்பு இருக்கும். நமக்கு நிம்மதியா வாழ ஏற்ற சூழ்நிலை'' என்று பறந்தது ஒரு கரப்பு.

நீண்ட மீசை போன்ற இரு உணர் கொம்புகளை மட்டும் வெளியே நீட்டி அசைத்து என்ன நடக்கப் போகிறது என் பதை அறிய முயன்றன பல பூச்சிகள். ஒருசில கூட்டுக் கண்களை அசைத்து அசைத்துப் பார்த்தன.

ஒரு தாம்பாளத்தைக் கொண்டு வரச் சொல்லி, பெட்டிக்குள் துணியால் சுற்றப் பட்டிருந்த ஒவ்வொரு நகையாக வெளியே எடுத்துத் தாம்பாளத்தில் வைத்தார் நிர்வாக அதிகாரி.

பணியாள் ஒருவன் வந்து அதிகாரி யை வணங்கினான்.

''ஐயா, இந்த முறை பெரிய பந்தலாப் போடச் சொன்னீங்களே... அதுக்கு ஏத்தபடி பந்தல்காலை வேற இடத்துல போடும்படி இருக்கு. அங்கே ஒரு பாம்புப் புத்து வருது. என்ன பண்ற துன்னு பந்தல்காரர் கேட்டுக்கிட்டு வரச் சொன்னார்'' என்றான்.

''பந்தல்காலை வேற இடத்துல போடுங்க. அந்தப் பாம்பு எத்தனையோ காலமா கோவில்ல இருக்கு. புத்தை ஒண்ணும் பண்ண வேண்டாம்'' என்றார் அதிகாரி.

பெரிய கரப்பு 'பரபர'வென்று வெளியே வந்தது. பெட்டி விளிம்பில் நின்று, தன் கூட்டுக் கண்களால் அதிகாரி யைப் பார்த்தது. உணர்வுக் கொம்பு இழைகளை வீசி ஆத்திரத்துடன் அதி காரியை அழைத்துப் பேசியது!

''நிர்வாக அதிகாரி அவர்களே... நீங்கள் அநியாயக்காரர். நியாயமற்ற வர்.''

அதிகாரி திகைத்துப் போனார்.

''கரப்பா! நீயா பேசுகிறாய்!''

''ஆமாம்! நான்தான் பேசுகிறேன்.''

''என்ன அநியாயத்தைக் கண்டு விட்டாய்? சாக்கடை, குளியலறை, கழிப்பறை, சமையலறை, பணப் பெட்டி, நகைப் பெட்டி, துணிப்பெட்டி என்று எந்த இடத்தையும் விட்டு வைக் காமல் வாசம் செய்கிறீர்கள். நீங்கள் தின் னாத பொருள் உலகத்தில் இல்லை. பெருமாள், அம்மனின் சன்னதியில் கூட வாசம் செய்து அசுத்தப்படுத்துகிறீர்கள். கழிவுப் பொருள்களில் உட்கார்ந்து



அதே காலுடன் உணவுப் பண்டங்களிலும் வந்து உட்கார்ந்து நோய் நொடிகளைப் பரப்புகிறீர்கள். உங்களை என்ன பண்ணினாலும் தகும்'' என்றார் அதிகாரி.

''அப்படிப் பார்த்தால், பாம்பு கூடத்தான் மனிதர்களையும் கால்நடைகளையும் கடித்து மரணமடைய வைக்கிறது?''

''அதைக் கூறுகிறாயா? அது கோவில் பாம்பு. எத்தனையோ காலமாக இங்கே வாழ்கிறது. அதுவும் நீயும் ஒன்றாகி விட முடியுமா?''

''அதிகாரி அவர்களே... அந்தப் பாம்பு எத்தனை காலமாக இந்தக் கோவிலில் இருக்கிறது?''

''ஒரு ஐந்து தலைமுறையாக என்று கேள்வி...''

''இந்த ஆலயத்தை எப்பொழுது கட்டினார்கள் என்பது உமக்குத் தெரியுமா?''

''ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.''

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கும் முன்தோன்றிய மூத்த குடி என்று தமிழர் பெருமையைக் கூறுகிறீர்கள் அல்லவா... அந்த மூத்த குடி தோன்றுவதற்கு எத்தனையோ மிலியன் ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் தோன்றியவர்கள். நாங்கள் தோன்றிய பிறகு எத்தனையோ மிலியன் ஆண்டுகளுக்குப் பிறகுதான் டினோசர்கள் என்ற ராட்சச விலங்குகள் தோன்றின. எங்கள் இனத்தின் வரலாறு முன்னூற்று ஐம்பது மிலியன் ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமாகி விடுகிறது!''

அதிகாரி அசந்து போய் நின்றார்.

''மனிதன் உட்பட உலகத்தில் தோன்றிய எல்லா உயிரினங்களும் பரிணாம வளர்ச்சி பெற்று எவ்வளவோ மாறுதல்களை அடைந்துள்ளன. ஆனால் எங்கள் கரப்பு இனம் ஒன்றுதான் தோன்றிய நாள் முதல் 350 மிலியன் ஆண்டுகளாக எந்தவிதமான பரிணாம மாற்றமும் இன்றி இயற்கைக்கும், விஞ்ஞானிகளுக்கும் சவாலாக இருக்கிறோம். இந்த ஆலயம் உருவாகும் போதே என் முன்னோர்கள் இங்கே வாழ வந்து விட்டார்கள். எந்த அடிப்படையில் பாம்பை மட்டும் வாழ நீங்கள் அனுமதிக்கிறீர்களோ அதே அடிப்படையில் எங்களையும் வாழ அனுமதிக்க அதிக நியாயம் இருக்கிறது.''

நிர்வாக அதிகாரி அயர்ந்து போய் செய்வதறியாது நின்றார்.

அறிவியல் உண்மைகள் :

★ மண்ணில் நிலக்கரிப் படிவங்கள் தோன்று முன்பே, அதாவது 350 மிலியன் ஆண்டுகளுக்கு முன்பே கரப்பு இனம் தோன்றி விட்டது. தோன்றிய நாள் முதல் பரிணாம வளர்ச்சியின் மாற்றங்களுக்கு இலக்காகாத ஒரே உயிரினம் இதுதான்!

★ இது ஆர்த்ரோ போடா எனும் பிரிவில், இன்செக்டா வகுப்பில் வரும் உயிரினம். இதன் அறிவியல் பெயர் பெரிப்ளனேட்டா அமெரிக்கானா.

★ இது ஒளியை வெறுக்கும் இனம். தூய்மை இதன் பகைவன். எதையும் கரண்டித் தின்னும் பற்கள், எதையும் ஜீரணம் செய்யும் தன்மை உடையது.

★ ஆண் கரப்புதான் பறக்கும். அதற்கு ஏற்ப இறக்கைகளும், அவற்றை மடக்கி வைக்கும் உடலமைப்பும் உடையது ஆண் கரப்பே.

★ முன்னால் அலைபாயும் மீசை, இதன் உணர் கொம்புகள்.


★ கரப்பின் உடல் தட்டையானது. இதனால் இண்டு இடுக்குகளில் இது எளிதாக நுழைந்து இனப்பெருக்கம் செய்யும்.

★ மனிதனை விட எத்தனையோ மடங்கு அதிக அளவிலான ஒளிக்கதிர் வீச்சையும் புவி ஈர்ப்பு விசையையும் இது தாக்குப் பிடிக்க வல்லது.

''சீனிவாசன்ங்கிற பேரை ஏன்டா வாசன்னு சுருக்கி வெச்சுக்கிட்டே?''

''சர்க்கரை வியாதி வராமல் இருக்கக் கூடிய வரை 'சீனி'யை விட்டுடறது நல்லதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரே!''

- சீர்காழி வி. ரேவதி








இருகையால் வாங்கக் காரணம்...

★ ''எனக்குக் கொடுக்கப்படும் பொருள்கள் அனைத்தும் ஏழைகளுக்குத் தரப்படும்'' என்றார் புத்தர். அரசன் ஒருவன் விலைமதிப்பற்ற நகைகள், பணத்தைக் கொடுத்தான். அவற்றையெல்லாம் ஒரு கையால் வாங்கி ஒரு பக்கம் வைத்தார். அப்போது ஓர் ஆடை கிழிந்த கிழவி வந்தாள். ''சுவாமி, தாங்கள் நன்கொடை வாங்குகிறீர்கள் என்றவுடன் ஓடோடி வந்தேன். ஆனால் என்னிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே... என நினைத்தேன். மாதுளம் பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். நற்செய்தியைக் கேட்டதும் பாதி சாப்பிட்டுவதை நிறுத்தி விட்டு இந்த மாதுளம் பழத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். தயவாய் ஏற்றுக் கொள்ளவும்'' என வேண்டினாள். அந்த எச்சில் பழத்தை இரு கையால் புத்தர் வாங்கினார். மற்றவர்கள் ஆச்சரியப்பட்டனர். ''நீங்கள் ஆயிரக்கணக்காகக் கொடுத்திருக்கிறீர்கள். உண்மைதான். ஆனால் அவை உங்கள் சொத்தில் ஒரு பங்கு கூட இருக்காது. இந்தக் கிழவியோ தன்னிடம் உள்ளதை அப்படியே உள்ளன்போடு கொடுத்திருக்கிறாள். நீங்கள் பெருமையைக் காட்டக் கொடுத்தீர்கள். எனவே அவள் கொடுத்ததை இரு கைகளால் வாங்கினேன்'' என்றார் புத்தர்.

- சுகா ராஜ், மதுரை - 2.




பார்லிமெண்ட் கட்டடம்

★ நமது பார்லிமெண்ட் கட்டடத்துக்கு 1921-ல் தான் கட்டட வேலைகள்

முடிந்தன. வட்ட வடிவமான இக் கட்டடத்தின் சுற்றளவு அரை மைல் தூரம். கட்டடத்தின் மத்திய மண்டபத்தின் குறுக்களவு நூறு அடி. இதன் மாடியைத் தாங்கி நிற்பவை 144 தூண்கள். ஒவ்வொன்றும் 27 அடி உயரம் ஓங்கி நின்று கட்டடத்துக்கு அழகு தருகிறது. உள்ளேயுள்ள முற்றத்தில் விக்கிரமாதித்தன் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

- ஆருபாதி புகழேந்தி.



★ ஆப்பிரிக்காவில் பாவோ பாப் என்று ஒருவகை மரம் காணப்படுகிறது. குட்டையாக உள்ள இந்த மரத்தின் அடிப் பாகம் மிகவும் பருமனானது. அடி மரத்தின் குறுக்களவு சுமார் 30 அடிகள். உள்ளே குழலாக இருக்கும் இம்மரம் மழை பெய்யும் போது நீரைப் பிடித்துத் தேக்கி வைத்துக் கொள்கிறது. இந்த நீர் நாட்கணக்கில் வற்றாமல் இருக்கிறது. காடுகளில் உள்ள யானைகளுக்கும் வேட்டைக்காரர்களுக்கும் இம் மரத்தின் நீர் தாகத்தைத் தணிக்கப் பயன்படுகிறது.

- நல்லாலம் ந. நவமணி.



★ சத்யஜித்ரே எடுத்த முதல் திரைப் படம் பதேர் பாஞ்சாலி. விபூதி பூஷன் என்பவர் எழுதிய நாவலையே இவர் இத் திரைப்படமாக எடுத்து 1955-ல் வெளி யிட்டார். இப் படத்திற்காக இவர் 12 சர்வ தேச விருதுகளைப் பெற்றாராம். இதுவும் ஒரு சாதனையல்லவா?


- மு. பூபாலன், சாத்தூர்பட்டு.



★ உலகிலேயே மிகக் குறைந்த வயதில் திரைப்பட இயக்குனராக இருப்பவர் கிரேஸ் ஸ்காட் என்ற ஆறு வயது அமெரிக்க சிறுவன்தான். இந்தச் சிறுவனை தற்போது ஐந்து வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். தன்னுடைய நாலாவது வயதில் முதல் படத்தை இச் சிறுவன் இயக்கினான்!

- இந்திரா கோபாலன், திருச்சி.

★ நீலகிரி மலைப் பகுதியில் 'பகாசுரன்' மலை என்று ஒரு மலை இருக்கிறது.



இந்த மலையில் ஒரு மரம் இருக்கிறது. இரவில் இந்த மரத்தின் அருகே வெளிச்சம் இருக்கும். இந்த ஒளி மரத்தை, மலைவாழ் மக்கள் கொள்ளிவாய்ப் பிசாசு என்று கூறுகிறார்கள். இந்த மரத்தின் பட்டைகளைப் பாட்டிலில் போட்டு இருட்டில் வைத்தால் சுற்றிலும் ஒளி பரவும். இந்த மரத்திற்கு "ஜோதி மரம்" என்று கூடப் பெயர் உண்டு.

- தக்கோலம், அ. முஸ்தபா.



கலைவாணரின் கருணை

★ கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இளம் பருவத்தில் நாடகக் குழுவில் சேர்ந்து நடித்தார். ஒருமுறை திருநெல்வேலியில்

நாடகக் குழு முகாமிட்டிருந்தது. தாமிரபரணியாற்றில் குளிக்க இரயில் பாதையில் கலைவாணரும் அவரது நண்பரும் நடந்து கொண்டிருந்தார்கள். கீழே ஆற்றங்கரையில் கழுதை ஒன்று அடிபட்டு வலியால் துடித்துக் கொண்டிருந்தது. காகங்கள் அடிபட்ட காயத்திலிருந்து வடிந்த இரத்தத்தைக் கொத்தித் தின்றன. காகங்கள் கொத்தும் போதெல்லாம் வலியால் கழுதை கத்தியது. அதைக் கண்ட கலைவாணர் காகங்களை விரட்டியபடி அங்கேயே அமர்ந்திருந்தார். நேரமாகியது. அன்றிரவு நாடகத்தில் நடிக்க வேண்டியதை நினைப்பூட்டினார் நண்பன். கலைவாணருக்கு அனாதையாகக் கழுதையை விட்டுப் போக மனமில்லை. ஒரு யோசனை தோன்றியது. அருகிலிருந்த சாணத்தை வாரி வந்து கழுதையின் அடிபட்ட இடத்தில் தடவி காயத்தை மறைத்தார். அதன்பின் காகம் வரவில்லை. அதன் பிறகே கலைவாணர் கிளம்பினார்!

- சுகாராஜ், மதுரை - 2.



★ புலிக்கு ஆங்கிலத்தில் டைகர் என்று பெயர். அது ஆங்கிலச் சொல் அல்ல. பாரசீகச் சொல். டைகர் என்பது அம்பின் பெயர். அம்பை நாணேற்றி விடும் போது வேகமாகச் செல்கிறது. புலி அதே மாதிரி வேகமாகப் பாய்வதால் அதற்கு அப் பெயர் இடப்பட்டது!

- பறங்கிப்பேட்டை,
ஆர். மகேஸ்வரன்.



★ சோதனைகள் மூலம் மனித உடலால் 106 டிகிரி செண்டிகிரேட் வரை உள்ள வெப்பநிலையைத் தாங்கிக் கொள்ள முடியும் எனக் கண்டிருக்கிறார்கள். துளிக் கூட ஈரப்பதமில்லாத உலர்ந்த காற்றின் சூட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக 106 டிகிரி செண்டிகிரேட் வரை உயர்த்தினால் அதில் மனிதன் கொஞ்சம் கூட ஆபத்தின்றி இருக்க முடியும்! காரணம், அவன் அந்தச் சூட்டைச் சமன்செய்ய வெளியிடும் வியர்வையே!

- தா. சித்துகுமார், திருவட்டார்.



★ எகிப்தியர்கள் பிரமிடுகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்திய சிமெண்ட் 13 வகையான இரசாயனக் கலவைகளை உடையது. அதனால்தான் கல்லுக்கும் அதற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு அது அவ்வளவு கடினத் தன்மை உடையதாக உள்ளது. எகிப்தியர் அந்த வகைச் சிமெண்டைத் தயாரிப்பதற்காகக் கையாண்ட கலவையின் இரகசியத்தைக் கண்டுபிடிக்க இன்றைய ஆராய்ச்சியாளர்கள் இன்னமும் முயன்று வருகிறார்கள்.


- கே. எஸ். சரவணன்,
கம்புகாலப்பட்டி.



★ காட்டில் ஒரு யானை ஏதாவது சமிக்ஞை செய்ததும் இரண்டு கிலோ மீட்டர்

தூரத்தில் இருக்கும் யானைகள் அதற்கேற்ப செயல்படும் அதிசயத்தை விலங்கியல் வல்லுனர்கள் பல ஆண்டுகளாகக் கூர்ந்து ஆராய்ந்த போது, அவை 20 ஹெர்ட்சுக்கும் குறைவான ஒலி அதிர்வில் தங்களுக்குள் அவ்வப்போது 'பேசி'க் கொள்வது கண்டு பிடிக்கப்பட்டது! அச் சந்தர்ப்பங்களில் யானைகளின் வாய் மற்றும் காதருகே ஏற்படும் சில நுண்ணிய அதிர்வுகளைப் பதிவு செய்து இது உறுதிபடுத்தப்பட்டது. அவ்வளவு குறைவான ஒலி அதிர்வுகளைக் கேட்கும் ஆற்றல் மனிதர்களின் செவிகளுக்கு இல்லை!

- அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.



அண்டார்டிகாவின் நில ஆழம்!

★ அண்டார்க்டிகா பிரதேசத்தில் உள்ள பனிப்பாறைகள், அவற்றின் கனமையால் கீழுள்ள நிலத்தை அழுக்கித் தாழ்த்தியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஓர் இடத்தில் அளந்து பார்த்த போது, பனிக் கட்டியின் கீழ் 9750 அடி ஆழத்தில் நிலம் இருந்தது! அதாவது கடல் மட்டத்திற்கு 5000 அடி கீழே நிலம் காணப்பட்டது.

- என். ஆர். சுப்பிரமணியன்,
பூனாம்பாளையம்.

பிருந்தாவனம் பகுதிக்கு எழுதுவோர் கவனத்திற்கு...

தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியான துணுக்குகளையே எழுதி அனுப்பாதீர்கள். அறிவியல், அதிசயச் செய்திகளானால் அதற்கான ஆதாரத்தைக் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். செய்திகள் கலாங்கடந்தவையா என்பதைப் பிற நூல்களைப் பார்த்து உறுதி செய்து கொண்டு எழுதவும். வெளியான செய்திகளையே மறுபடி மறுபடி எழுதாதீர்கள்.


- ஆசிரியர்



அதிகப் புத்தகம் எழுதியவர்!

★ குழந்தைகளுக்கென்று அதிகமான புத்தகங்களை எழுதியவர் 'எனிட் பிளைட்டன்' என்ற பெண்மணிதான். இவர் குழந்தைகளுக்காக 600 கதைப் புத்தகங்களை எழுதியிருக்கிறார். இவரது நூல்கள் 28 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.


- தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.



தங்கச் செடி!

★ லெனின் கிராடில் (ரஷ்யா) உள்ள ஹெர்மிட்டேஜ் அருங்காட்சியகத்தில் தங்கத்தால் செய்யப்பட்ட செடி உள்ளது.

- பண்ருட்டி டி. பாலாஜி.



★ நாடுகளின் தேசியக் கொடிகளைப் பற்றி ஆராயும் கலைக்கு 'வெக்ஸில் லோலாஜி' என்று பெயர்.

- பண்ருட்டி டி. பாலாஜி.

அண்டப் புளுகிக்கு சுண்டைக்காய் மாலை!

அண்டப் புளுகி அகிலா, பிரமை பிடித்தது போல் நின்றாள். அவள் இது வரை எத்தனையோ ஆயிரம் பொய் கூறியிருக்கிறாள். எத்தனையோ இக்கட்டான நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறாள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு நிலையை அவள் இதுவரை சந்தித்ததே கிடையாது.



பள்ளியில் எத்தனையோ புளுகிகள் இருந்தார்கள். மிளகாய் புளுகி மீனா, தக்காளி புளுகி தருமாம்பாள், வாழைப் பழப் புளுகி வரலட்சுமி இப்படி எத்தனையோ பேர்.

இந்த மூன்று பேரையும் விற்று விழுங்கக் கூடியவள் அகிலா. மற்றவர்களாவது ஏதாவது காரணத்தோடு புளுகுவார்கள். ஆனால் அகிலா, எந்தவிதமான காரணமும் இல்லாது இஷ்டத்துக்குப் புளுகுவாள். மற்றவர்களைப் பகைத்துக் கொள்ளாதவரை தொந்திரவு இல்லை. ஆனால், அகிலா அப்படி இல்லை. பகைத்துக் கொண்டாலும் சரி, கொள்ளாவிட்டாலும் சரி அவள் நினைத்துக் கொண்டால் நம் பாடு அவ்வளவுதான்!

தெருவில் ஒரு பையன், சொறி நாயைக் கல்லால் அடித்திருப்பான். அது வாள்வாளென்று கத்தி ஓடியிருக்கும். அதற்குப் பயந்து யாராவது இரண்டொரு சிறுவர் சிறுமியர் ஓடி ஒளிந்திருப்பார்கள். இதை, வெறிநாய் ஒன்று வெறி பிடித்து அந்தத் தெருவில் போவோர் வருவோரையெல்லாம் துரத்தித் துரத்திக் கடித்ததாகவும், அந்தத் தெருப் பக்கம் நடமாடவே எல்லோரும் பயப் படுகிறார்கள் என்றும் அகிலா புளுகுவாள்.

தண்ணீர்ப் புட்டியை யாராவது ஒரு பையன் வகுப்பில் கவனப் பிசகாகக் கை தவறிக் கீழே போட்டு உடைத்திருப்பான். 'ஏண்டா உடைத்தே?' என்று யாராவது இன்னொருவன் அவனைக் கேட்க, இருவரும் சண்டை போட்டிருப்பார்கள். இதை, 'அந்த வகுப்பில் எல்லோரும் ஒருவருக்கொருவர் சண்டைப் போட்டு புட்டியாலும் கல்லாலும் தாக்கிக் கொள்கிறார்கள், வகுப்பு முழுவதும் புட்டிகள் உடைந்த கண்ணாடிச் சிதறல்தான்' என்று பயங்கரமான ரௌடி ரகளையைப் போல் அதை விவரிப்பாள் அகிலா.

ஒரு பொய்யை மறைக்க அவள் அடுக்கடுக்காகப் பல பொய்களைக்

சின்னபாபு

கூறுவாள். அத்தனையும் பொருத்தமாக இருக்கும்! கேட்பவர் நம்பி விடுவார்கள்!

ஒருமுறை பள்ளிக்கு மட்டமடித்து விட்டாள் அகிலா. அடுத்த நாள், ஆசிரியை காரணத்தைக் கேட்ட போது, ''பாட்டி இறந்து விட்டார்கள்'' என்று புளுகினாள். ஆசிரியைக்கு நம்பிக்கைப் படவில்லை. ''ஆறு மாதம் முன்னால் தானே பாட்டி செத்துப் போனதா லீவு போட்டே?'' என்று கேட்டார்.

''அது அம்மாவைப் பெத்த பாட்டி. இது அப்பாவைப் பெத்த பாட்டி'' என்றாள் அகிலா அயராமல்.

''போன வருஷம் கூட பாட்டி செத்ததா லீவு போட்டியே... அது?''

அண்டப்புளுகி வசமாக சிக்கிக் கொண்டாள் என்று எல்லோரும் எண்ணி மகிழ்ந்தனர். ஆனால் அகிலா அயரவில்லை. ''எங்க தாத்தாவுக்கு ரெண்டு பெண்டாட்டி டீச்சர்'' என்றாள் கம்பீரமாக. ஆசிரியை அயர்ந்து போனார்!

தன்னை அண்டப்புளுகி என்று எல்லோரும் அழைப்பது பற்றி அகிலாவுக்கு அளவில்லாத பெருமை. தலைமை ஆசிரியைக்குக் கூட அவளைப் பற்றிக் கொஞ்சம் பயம்தான். இப்படி எல்லோரையும் அயரவைக்கும் அகிலாவே பிரமை பிடித்து நின்றாள் என்றால் அது எத்தனை சிக்கலான விஷயமாக இருக்கும்?

பத்து நாட்களுக்கு முன், ஊருக்கு வெளியே இருந்த பரந்த மைதானத்தில் சைக்கிள் விடப் பழகிக் கொண்டிருந்தாள் அகிலா. உதவிக்கு யாரும் இல்லை. அவள் ஒண்டிதான். வாடகை சைக்கிள் வாங்கி வந்திருந்தாள்.

திடீரென்று 'ஹார்ன்' சத்தம் அவ



ளுக்கு மிக அருகில் கேட்டது. அகிலா பதறிப் போய் சைக்கிளைச் சாய்த்துக் கீழே இறங்கி சமாளித்துக் கொண்டாள். அருகே ஒரு மோட்டார் சைக்கிள். அதில் பெரிய அதிகாரியைப் போல் தோற்றமளித்த ஒருவர். நல்ல சுருள் முடி. பின்னால் அவர் மனைவி, முன்னால் ஒரு வாண்டு இருந்தனர். அந்த வாண்டுதான் ஹாரனை அப்படி அலற விட்டிருக்க வேண்டும்.

அகிலாவுக்கு எரிச்சலான எரிச்சல்.

''ஏம்மா, கருவிமலை ஆலயத்திற்கு எப்படிப் போகணும்? இங்கே ரெண்டு வழி பிரியறதே?'' என்று கேட்டார் சுருள் முடி.

''பேபேபே...'' என்று பேச இயலாதவளைப் போல் நடித்தாள் அகிலா. காது மடலில் கை வைத்து அவர்களைக் கூர்ந்து பார்த்தாள்.

''ஐயோ பாவம். பேச முடியாத ஊமை போல இருக்கு!''

''அதோட காது வேறு கேட்காது போல இருக்கு!''

''கிளி மாதிரி இருக்கிற பொண்ணுக்கு இப்படி ஒரு சாபமா?''

''இவள்கிட்டே கேட்டு விவரம் தெரிஞ்சுக்கறதைவிட, வேற யார் கிட்டேயாவது கேட்டுக்கலாம்.''

சுருள்முடி, மோட்டார்சைக்கிளைத் திருப்பிக் கொண்டு போவதை வெற்றிப் பெருமிதத்துடன் பார்த்துச் சிரித்தாள் அண்டப் புளுகி அகிலா. ஹாரன் அடிக்க எரிச்சலூட்டியதற்கு நல்ல தண்டனை என்று மகிழ்ந்தாள்!

அன்று மாலை. அகிலா முன்பக்க அறையில் படித்துக் கொண்டிருந்தாள். வாசலில் இரண்டு மோட்டார் சைக்கிள் வந்து நின்றன. ஒன்று அவளுடைய





அப்பாவினுடையது. இரண்டாவது... ஆமாம், காலையில் மைதானத்தில் சந்தித்த அதே கருள் முடி குடும்பம்! அவர்களை அவருடைய தந்தை வரவேற்று வந்த மாதிரியில் இருந்தே, தந்தைக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது புரிந்தது. தந்தை தன்னை அழைத்துக் கண்டிப்பாக அறிமுகம் செய்து வைக்கப் போகிறார் என்பதை எண்ணியதுமே அகிலா நடுங்கினாள்!

என்ன செய்யலாம் என்று யோசித்த அகிலா, நொடியில் ஒரு முடிவுக்கு வந்தாள். விளக்கை அணைத்து விட்டு, மூலையில் இருந்த ஆளுயர பிரம்பு அழுக்குக் கூடைக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டாள். மூடியை இழுத்து மூடிக் கொண்டாள்.

''என்னோடு கல்லூரியில் படித்த பாலு, இன்று எனக்கு மேல் அதிகாரி. அடுத்த மாதம் நம்ம ஊருக்கே மாற்றலாகி வரான். இப்போ கருணிமலை நாதரைத் தரிசனம் பண்ண வந்திருக்கான். நான்தான் எதேச்சையாக வழியில் பார்த்து அழைத்து வந்தேன்'' என்று அப்பா, அம்மாவிடம் கருட்டையை அறிமுகப்படுத்தியது கேட்டது.

தொடர்ந்து அப்பா, 'அகிலா, அகிலா' என்று அழைத்தபடி அறைக்குள் வந்தார்.

''அகிலா எங்கே?''

''அந்த அறையில்தானே படித்துக் கொண்டிருந்தாள்! என்னிடம் கூடச் சொல்லவில்லையே? எங்கே போயிருப்பாள்?'' என்று வியந்தபடி அம்மா அறைக்குள் வந்தாள்.

''என்னது, நோட்டு பாதி எழுதின படி பிரிக்கக் கிடக்கு! எங்கே போயிருப்பாள்?''

''யாராவது சிநேகிதி வீட்டுக்குப் போயிருப்பாளா?''

''இல்லையே! செருப்பு இங்கேயே தானே கிடக்கு?''

''கதைகளில் வருவது மாதிரி ஏதாவது மந்திரவாதி வந்து மந்திரம் போட்டு மயக்கிக் கூட்டிக் கொண்டு போயிருப்பானோ? எனக்குப் பயமாக இருக்கு.''

அம்மா அழ ஆரம்பித்து விட்டாள். அப்பாவும், கருட்டையும் சமாதானப் படுத்தினார்கள். ஆனால் அம்மாவின் அழுகை நிற்கவில்லை.

''நான் முதன் முதலா உங்க வீட்டுக்கு வந்த நேரத்தில் இப்படி நடந்திருப்பது வேதனையா இருக்கு. வா, ரெண்டு பேருமா போய் அகிலாவின் சிநேகிதிகள் வீட்டில் தேடி விட்டு போலீசில்-புகார் கொடுத்து விட்டு வருவோம்'' என்று அப்பாவை அழைத்தார் கருட்டை.

போலீசா! அழுக்குக் கூடைக்குள் அழுக்குத் துணி நாற்றத்தைத் தாங்கியபடி ஒளிந்து கிடந்த அகிலா நடுங்கினாள்.

அமர்க்களத்தைக் கேட்டு, மற்ற குடித்தனக்காரர்கள், அக்கம் பக்கத்தினர் வீட்டில் திரண்டு விட்டனர். ஆளுக்கு ஒரு யோசனை கூறினர்.

அந்தப் பொல்லாத நேரத்தில், கூடத்திற்குள் ஒரு எலி நுழைந்தது. 'எலி எலி' என்று ஒரு சிறுவன் கத்தினான்.

அந்தக் குறும்புக்கார எலி கூடத்தைக் கடந்து, முன் அறைக்குள், நுழைந்தது. அழுக்குக் கூடையின் கீழே இருந்த ஓட்டை வழியாக உள்ளே புகுந்து விட்டது!

''எலி, அழுக்குக் கூடைக்குள் புகுந்து விட்டது'' என்றான் ஒரு சிறுவன்.

தான் அண்டப் புளுகி பட்டம் பெற்ற பெருமைக்குரியவள் என்பதையெல்லாம் அகிலா மறந்தாள். சூழ்நிலையையும் மறந்தாள். ''ஐயோ எலியா?'' என்று அலறியபடி அழுக்குக் கூடைக்குள் இருந்து வெளியே வந்தாள்.

கருட்டையுடன் போலீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த அப்பா, திகைத்துப் போய் நின்றார். அவர் மட்டுமா, எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

''இவளா உங்கள் பெண் அகிலா? இவளை நாங்கள் காலையில் பார்த்தோமே. பாவம்! பேச முடியாத, காது கேட்காத இவளா உங்கள் பெண்!'' என்று பரிதாபப்பட்டார் கருட்டை.

''என்னது! இவள் ஊமையுமில்லை. காது கேட்காதவளுமில்லை!'' என்றார் அப்பா.

கருட்டை எல்லாவற்றையும் விளக்கினார். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எல்லாம் புரிந்து போயிற்று. ''இவள் அண்டப் புளுகி. உங்கள் மேல் ஏற்பட்ட எரிச்சலால் உங்களுக்கு உதவக் கூடாது என்று முடிவு கட்டி, அப்படி நடித்திருக்கிறாள். எதிர்பாராமல் நீங்கள் என்னுடன் வரவும், உங்களிட மிருந்து தப்ப அழுக்குக் கூடைக்குள் ஒளிந்திருக்கிறாள். இப்ப எலிக்குப் பயந்து வெளியே வந்திருக்கிறாள்'' என்று விளக்கி வெகுண்டார் அப்பா.


''இவளை மாற்ற எத்தனையோ தண்டனை கொடுத்தாச்சு. சூடு கூட இழுத்து விட்டேன். இவளை மாற்ற முடியலே,'' என்று தலைகுனிந்து கண்ணீர் விட்டாள் அம்மா.

அப்பா கூடத்து அலமாரியில் இருந்த காய்கறிப் பையை எடுத்து வந்தார். அம்மாவிடம் தந்து, ''இதில் நிறைய கண்டைக்காய் இருக்கு. இதை அப்படியே மாலையாகக் கோர்த்துக் கொடு. இவள் கழுத்து நிறையப் போடலாம். இது வாடுகிறவரை இவள் மாலைகளைக் கழற்றக் கூடாது. பள்ளிக்கும் அப்படியே போகட்டும். இல்லே போகாமலேயே இருக்கட்டும். எல்லோரும் பார்த்து என்னவென்று கேட்டு இவளுடைய புளுகுணித்தனத்தையும், தண்டனையும் தெரிந்து கொள்ளட்டும். இதுதான் இவளுக்கு ஏற்ற தண்டனை. அப்படியாவது இவள் மாறுகிறாளா பார்ப்போம்!'' என்றார் உறுதியாக.

''சேர சோழ பாண்டிய பல்லவர்களெல்லாம் ஒன்றாகச் சேரும் இடம் எது?''

''பஸ் ஸ்டாண்டில சார்!''

- க. வெங்கடேசன்



ஆனந்தா, இங்கே வா!

படு அவசரமாகப் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் ஆனந்தன். சாய்வு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்திருந்த தாத்தா, ''ஆனந்தா! கொஞ்சம் இங்கிட்டு வந்திட்டுப் போறியா?'' என்றார்.

'பள்ளிக்குக் கிளம்பும் போது அபசகுனமாட்டம் கூப்பிடுகிறதே இந்தக் கிழம்!' என மனதுக்குள் பொருமிக் கொண்டு, ''எனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு. பேச நேரமில்லே தாத்தா. ஏதாவது வேணும்னா அம்மா இருக்காங்க. கேட்டுக்குங்க'' என்று அதைக் கூட சீராக முழுக்கச் சொல்லி முடிக்காமல் அவசரத்தை மடியில் கட்டிக் கொண்டு பறந்தான் ஆனந்தன்.

ஆனந்தனின் தாத்தாவிற்கு ரொம்பவும் வயதாகி விட்டது. வயதாகிப் போன அவர் ஏதாவது வேலை செய்யத் தான் தன்னைக் கூப்பிட்டிருப்பார் என்கிற நினைப்பில் அவர் கூப்பிட்டதை சட்டை செய்யாமல் கிளம்பி விட்டான் ஆனந்தன். என்ன ஏது என்றாவது கேட்டிருக்கலாம். இயலாமையைத் தெரிவித்திருக்கலாம். ஆனால், ஆனந்தன் அப்படிச் செய்யவில்லை. இவ்வளவுக்கும் பள்ளி மணி அடிக்க இன்னும் எவ்வளவோ நேரமிருந்தது. இருந்தும் தாத்தா கூப்பிட்டதற்கு மதிப்புக் கொடுக்காமல், ''ஒரே தொணதொணப்பு, கிடக்குது கிழம்'' என மனதுக்குள் எள்ளி நகையாடி துள்ளிக் குதித்தோடி பள்ளிக்குச் சென்றான்.

பள்ளியில் வகுப்பு துவங்கியது.

முதல் பீரியடு ஆங்கிலப் பாடம்...

இரண்டாம் பீரியடு தமிழ்ப் பாடம்....

மூன்றாம் பீரியடு கணக்குப் பாடம்...


மூன்றாம் பீரியடு வந்த போதுதான் ஆனந்தனின் மரமண்டைக்கு உரைத்தது. தாத்தா ஏன் பள்ளிக்குக் கிளம்பும் போது கூப்பிட்டிருக்கிறார் என்று!

கணக்கு வாத்தியார் நேற்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தார் அல்லவா, 'நாளைக்கு வரும் போது யாரும் ஜாமின்ட்ரி பாக்ஸ் இல்லாமல் வகுப்புக்கு வரக் கூடாதென்று! இந்த ஜாமின்ட்ரி பாக்ஸ் விஷயமாத்தான் தாத்தா கூப்பிட்டிருக்க வேண்டும்!

ஜாமின்ட்ரி பாக்ஸ் வாங்குவதற்குக் காசு கேட்டு அப்பாவிடம் அழுத போது..

''இது மாதக் கடைசி. முதல் தேதிக்குப் பிறகு





சம்பளம் வந்தவுடன் அதை வாங்கித் தரு கிறேன்'' என்று அப்பா சொன்ன போது... அவனருகில் ஆதரவாக வந்த மர்ந்து கொண்டார் தாத்தா.

''பேராண்டி! அழுவாதேடா... எனக்கு உன் அப்பா கைச் செலவுக்குக் கொடுக்கும் காசில் கொஞ்சம் சேர்த்து வைச்சிருக்கேன். நீ நாளைக்கு ஸ்கூ லுக்குப் போகும் போது கேளு. அதைத் தரேன். ஜாமின்ட்ரி பாக்ஸ் வாங் கிக்கோ... என்ன!'' என்று கன்னத்தைப் பரிவுடன் தடவிச் சொன்னார் தாத்தா.

அந்த ஜாமின்ட்ரி பாக்சை வாங்கக் காக கொடுக்கத்தான் தாத்தா கூப்பிட் டிருக்க வேண்டும்.

தாத்தா கூப்பிட்டும் மதியில்லாமல் மதியாமல் வந்து விட்டோமே! இப் பொழுது என்ன செய்வது? கணக்கா சிரியர் கண்டிப்பானவர் ஆச்சே! கடும் தண்டனை கொடுப்பாரே!

ஆனந்தன் எதிர்பார்த்தபடியே அந்த பீரியடு பூராகவும் தண்டனையாக வெயிலில் நிற்க ஆசிரியரிடமிருந்து ஆணை பிறந்தது! வேறு வழியில் லாமல் வகுப்பு அறையை விட்டு வெயிலில் நிற்க வெளியே வந்தான். வந்தவனுக்கு இன்ப அதிர்ச்சி!

ஆனந்தனின் வகுப்பறையைத் தேடி, தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தார் அ வ னு டை ய அருமைத் தாத்தா. அவருடைய கையில் பளபள வென்று ஒரு புது ஜாமின்ட்ரி பாக்ஸ்!

அப்படியே... அங்கேயே தாத்தா வின் காலில் விழ வேண்டும் போலி ருந்தது ஆனந்தனுக்கு. இனி எக்கார ணத்தைக் கொண்டும் பெரியோரை அவமதிக்காமல் மதித்து நடக்க வேண் டும் என்று முடிவு செய்து கொண்டான். தாத்தா கூப்பிட்டும் மதியாமல் வந்த தற்கு தாத்தாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

– எம். சி. பாலு.

'டேவிஸ்' கோப்பை

'டேவிஸ்' கோப்பை உலகச் சுற்றில் பங்குபெறுவதற்கான, தகுதிச் சுற்றுப் போட்டி டில்லியில் செப்டம்பர் மாதம் 25 முதல் 27 தேதி வரை நடைபெற உள்ளது. இந்தியாவுக்கும் பிரிட்ட னுக்கும் இடையே இதில் கடும் போட்டி இருக்கும். சரி, டேவிஸ் கோப்பை என்பது என்ன?

பன்னிரெண்டாம் நூற்றாண்டிலேயே ஃபிரான்ஸ் நாட்டில் 'டென் னிஸ்' ஆட்டம் துவங்கி ஆடப்பட்டா லும், பதினாறாம் நூற்றாண்டிலிருந்து தான் இதன் வளர்ச்சி உலகம் முழுவதும் பரவ

* ரமேஷ் கிருஷ்ணன்



ஆரம்பித்தது. இதன் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது பிரிட்டன். 1877-இல் தான் முதன் முதல் 'டென்னிஸ் அசோஸியேஷன்' நிறுவப்பட்டது.

இதன் விளைவாக புகழ்பெற்ற 'விம்பிள்டன்' போட்டிகள் முதன் முத லில் 1877-இல் துவக்கப்பட்டன. துவங் கப்பட்ட போது இப்போட்டிகள் ஆட வர்க்கு மட்டுமே இருந்தது. 1884-லி லிருந்துதான் மகளிருக்கும் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு துவங்கிய டென்னிஸ் போட்டிகள் நாளடைவில் பல நாடு களிலும் வெகுவாகப் பரவி, இப்பொழுது உலகம் முழு வதும் 100-க்கும் மேற்பட்ட முக்கிய போட்டிகள் நடத்தப் படுகின்றன. இவற்றில் அதிமுக்கியமானவை நான்கு. இவற்றை 'கிராண்ட் ஸ்லாம்' என்பர். ஆஸ்திரேலியன் ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், யூ. எஸ். ஓபன் ஆகிய நான்கும்தான் அவை.

'டேவிஸ்' கோப்பை போட் டிகள் 1900 ஆண்டிலிருந்து ஆடப்பட்டு வருகின்றன. இக் கோப்பையை வழங்கியவர் அமெரிக்காவின் இடது கை ஆட்டக்காரர் Dwight Filley Davis. 1879-இல் செயின்ட் லூயியில் பிறந்த இவர், 1900, 1902 ஆகிய ஆண்டுகளில் 'டேவிஸ்' கோப் பைப் போட்டிகளில் தாமே ஆடியுள்ளார்! யூ. எஸ். ஓபன் போட்டிகளில் 1899-1901 வரை இரட்டையர் பிரிவில் இவர் வெற்றி பெற்றவர். யூ. எஸ்.

கிடைக்குமா?



✱ ராமநாதன் கிருஷ்ணன்

லான் டென்னிஸ் அசோஸியேஷனின் தலைவராக (1923) இருந்துள்ளார். தவிர, அரசியலிலும் ஈடுபட்டு அமெரிக்க போர்ப் பிரிவு அமைச்சராகவும், பிறகு பிலிப்பைன்ஸின் கவர்னர் ஜெனரலாகவும் இருந்தவர்.

டேவிஸ் கோப்பைப் போட்டிகள் இரண்டு அடுக்கு முறையில் நடைபெறுகின்றன. முதல் கட்டத்தில், இக் கோப்பைக்குப் போட்டியிடும் நாடுகள், தாங்கள் உள்ள மண்டலத்தில் இடம் பெறும் நாடுகளுடன் மோதும். அதில் வெற்றி பெறும் நாடுகள் இரண்டாவது கட்டத்தில் உலகச் சுற்றுப் போட்டிகளில் இடம்பெற்று ஆடும். தற்பொழுது கிட்டத்தட்ட எட்டு மண்டலங்கள் உள்ளன.

நீ. சூரியபிரகாஷ்



✱ ஆனந்த் அமிர்தராஜ்

சென்ற வருடம் வரை 80 முறை நடைபெற்றுள்ள டேவிஸ் கோப்பை போட்டிகளில் யூ.எஸ்.ஏ. 30 முறையும், ஆஸ்திரேலியா 26 முறையும், பிரிட்டன் ஒன்பது முறையும், ஃபிரான்ஸ் ஏழு

✱ விஜய் அமிர்தராஜ்



முறையும், ஸ்வீடன் நான்கு முறையும், செக்கோஸ்லோவாகியா, இத்தாலி, தென் ஆப்பிரிக்கா மற்றும் ஜெர்மனி ஆகிய நான்கும் தலா ஒருமுறையும் வென்றுள்ளன. சென்ற ஆண்டு சற்றும் எதிர்பார்க்காத விதத்தில் ஃபிரான்ஸ் மிகவும் அபாரமாக ஆடி அமெரிக்காவை வென்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை, அது Asiaoceania என்ற மண்டலத்தில் இடம்பெற்று ஆடி வருகிறது. இது வரை இந்தியா மூன்று முறை டேவிஸ் கோப்பையின் இறுதி ஆட்டத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனால் மூன்று முறையும் தோற்றது.

1987-இல் இறுதிப் போட்டி வரை சென்றிருந்த இந்தியா 1988-இல் முதல் சுற்றிலேயே யூகோஸ்லாவியாவிடம் தோற்றது. இதனால் தகுதிச் சுற்றில் இஸ்ரேலுடன் ஆடும்படியாக நேர்ந்து ஆட மறுத்ததால், மூன்று வருடங்களுக்கு டேவிஸ் கோப்பைப் போட்டிகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டது. இருப்பினும், அப்போதைய கேப்டன் விஜய் அமிர்தராஜின் தீவிர முயற்சியால் இந்தப் புறக்கணிப்பு ஒரு வருடத்தோடு நீக்கப்பட்டு 1990-இல் இந்தியா மீண்டும் Asiaoceania மண்டல தகுதிச் சுற்றுப் போட்டிகளில் ஆட அனுமதிக்கப்பட்டது. அந்த வருடத்தில் மண்டல இறுதிச் சுற்றில் தென் கொரியாவிடம் தோற்றது. சென்ற வருடம் தென் கொரியாவை இறுதிச் சுற்றில் வென்றும், உலகச் சுற்றுக்கான தகுதிச் சுற்றில் பிரேசிலிடம் தோற்றது. இந்த வருடமும் அதே நிலையில் பிரிட்டனைச் சந்திக்க உள்ளது.


இந்தியாவின் பெருமையை டேவிஸ் கோப்பையில் நிலைநாட்டியவர்கள் ராமநாதன் கிருஷ்ணன், ரமேஷ் கிருஷ்ணன், விஜய் அமிர்தராஜ், ஆனந்த் அமிர்தராஜ், பிரேம்ஜித்லால், ஜெய்தீப் முகர்ஜி, நரேஷ்குமார், சஷி மேனன், லியாண்டர் பேஸ் எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

நம்பிக்கையோடு காத்திருப்போம்!

"என்னது, ஆபரேசன் தியேட்டரிலேருந்து ஒரே தும்மல் சத்தமாவே இருக்கே?"

"நோயாளி பொடி விற்பவராச்சே... அதான்!"

– கோ. பக்தவத்சலம்,
விருத்தாசலம் – 1.





"எல்லோரும் சேர்ந்து நில்லுங்க. ஒரேயொரு படம் எடுக்கிறேன்னா இப்படி நடுநடுங்கறீங்களே...! ஸ்மைலிங் ப்ளீஸ்...!"

– ச. காணிக்கைராஜ்



ஔரங்கசீப்பின் தந்திரம்

ஔரங்கசீப்பின் மகன் ஒருவன் தன் தந்தையுடன் கோபித்துக் கொண்டு எதிரிகளின் பக்கத்தில் சேர்ந்து முகலாயப் பேரரசுக்கு விரோதமாக அவர்களுக்கு உதவி செய்து வந்தான். முகலாயப் பேரரசின் இராணுவ இரகசியங்களை அவன் எதிரிகளுக்கு எடுத்துரைத்து விட்டால் என்ன செய்வது என்று ஔரங்கசீப் கவலைப்பட்டார். அவருடைய மூளை வேலை செய்தது.

ஒரு காகிதத்தை எடுத்துத் தம் மகனுக்கு எழுதினார்.

'மகனே! அவசரப்பட்டு வந்து விடாதே! ஏற்கெனவே நாம் முடிவு செய்தபடி எதிரிகளுடன் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகி, அவர்களுடைய இராணுவ இரகசியங்கள் அத்தனையும் அறிந்து கொண்டு திரும்ப வந்து சேர்!' என்று எழுதி அந்தக் கடிதத்தை எதிரிகளின் கையில் சிக்குமாறும் செய்து விட்டார்.

கடிதத்தைப் படித்த எதிரிகளின் கண்கள் சிவந்தன. 'என்ன துரோகம்! என்ன துரோகம்!' என்று கூறி பற்களை ''நறநற''வெனக் கடித்தனர். அடுத்துக் 'கெடுக்க வந்த அந்த அயோக்கியப் பயலை அடித்து விரட்டுங்கள்!' என்று கூறி இளவரசனை விரட்டியடித்தனர்.

ஔரங்கசீப்பின் யுக்தி பெரிய பலனை அளித்தது!

– ஆர். ஆமினா பீவி, நீடூர்.

படத்திற்கு ஏற்ற பாடல் எழுதுங்கள் - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் எதிர்பார்த்த அளவுக்கு தம்பி தங்கைகள் ஏனோ உற்சாகம் காட்டவில்லை. அறுநூறு பேர்தான் கலந்து கொண்டிருக்கிறார்கள். ரூபாய் பத்து பரிசு பெறும் பாடல்களும், பரிசு பெற்றோர் விவரமும் :

1. யானையாரே யானையாரே தாகமா?
அரும்புக் கைகள் அடித்துத்
தந்தால் தீருமா?
– பா. ராமதுரை, சென்னை - 91.

2. குடிக்கக் கிணற்றில் நீரில்லை.
குழாய் கிணறே உதவிடுவாய்!
– ஈ. பானு, கிருஷ்ணகிரி.

3. என்னருமை யானையாரே
தண்ணீர் தாகமா?
உதவ நாங்க இருக்கிறோம்,
ஓரம் நில்லுங்க!
– மா. சக்திவேல், ஆலம்பாளையம்.

4. தும்பிக்கையார் நீர்குடிக்கும்
வேடிக்கை
தம்பி தங்கை குழாய்
அடியில் நம்பிக்கை!
– ஆர். ஹேமா, மதுரை - 20.

5. குடிக்க வென்றால் அடித்துத்
தருவோம் யானையாரே!
குளிக்க வென்றால்
குளத்துக்குவா யானையாரே!
– ஜெ. பாலசுப்ரமணியன், கீழையூர்.

6. எச்சில் பண்ணிக் குடிச்சாலே
தெரியும் சங்கதி!
இப்படியே போனாலே
என்ன நம்கதி!
– பி. பி. வெங்கடசுப்ரமணியன்,
காரைக்கால்.

7. பானை இல்லை என்பதால்
யானை வந்து சேர்ந்ததா?
– என். கவிதா மனோன்மணி,
போர்ல்பிளேயர்.

8. யார் நீர் அடித்தாலும்
யானை தாகம் தீருமா?
– என். மாலதி, சென்னை - 1.

9. யானைக்கு வந்தது
தண்ணீர் தாகம் - அதை
தீர்த்து வைத்தது
பிள்ளைகள் ஆர்வம்!
– பி. கோகுலகிருஷ்ணன்,
பொன்மலை.


10. கார்ப்பரேஷன் குழாய்
இது கஜராஜரே!
காவிரிநீர் வராதையா கஜராஜரே!
– ஆர். சாரதா, கோவை - 1.

11. யானை கட்டி போர் அடித்தது
அந்தக் காலம்!
யானைக்காக போர் அடிப்பது
இந்தக் காலம்!
– கா. தென்றல், போரூர்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுக்கள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!

என்னை அரிக்காதே!

எஸ். ஆர் ஜி. சுந்தரம்



ஒரு மாமரம். 'பச்சைப் பசே'லென்ற இலைகளோடும் வளைந்து வளைந்து வளர்ந்திருந்த கிளைகளோடும் பார்க்க அழகாயிருந்தது. கோடைக்கால மாதலால் நிறையப் பூக்களும் பிஞ்சுகளும் விட்டிருந்தன. அருகில் செல்லும்போதே தனியான ஒரு மணம்...! அந்த மாமரம் ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமானது அது!

ஒருநாள் மரம் திருடும் கூட்டத்தைச் சேர்ந்த இருதிருடர்கள் அந்த மரத்தை வெட்ட அந்த மரத்தின் கீழே கூடினார்கள். மூன்றாவது திருடன் இன்னும் வந்து சேரவில்லை! நேரத்தைப் போக்க இரண்டு திருடர்களும் தங்களிடமிருந்த பச்சை வேர்க்கடலையை, மாமரத்தின் உலர்ந்த இலை, சருகுகளைப் பொறுக்கித் தீ மூட்டி அதில் சுட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்!

அப்பொழுது, ஒரு பெரிய புழு அந்த மாமரத்தில் ஒரு பெரிய மா இலையை அரித்துக் கொண்டிருந்தது. அந்த மாவிலையுடன் ஒரு பெரிய மாங்காயும் சேர்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. புழுவின் அரிப்பினால் அந்த இலை வலி தங்காமல் ''ஏ! புழுவே! உயிருள்ள என்னை அரிக்காதே! எனக்கு வலிக்கிறது. கீழே விழுந்து அழுகியுள்ள இலைகளைச் சாப்பிடு! போ!'' என்று கெஞ்சியது.

''ஓ! இலையா! நீ கூடவா பேசுகிறாய்?'' என்று கேட்டது புழு!

''புழுவே! நாங்களும் உன்னை மாதிரி உயிருடையவர்கள்தான். இந்தப் பச்சை மரத்தின் உயிர்நாடி எங்களிடம் இருக்கிறது. நானும் மூச்சு விடுவேன். மணம் பரப்புவேன்! சூரிய ஒளியில் உணவு தயாரிப்பேன்! அதனால்தான் பூக்கிறோம்! காய்க்கிறோம்!'' என்றது இலை.

புழு சிரித்தது! ''ஆனால், உன்னாலும் இந்த மரத்தாலும் இருந்த இடத்தை விட்டு அசைய முடியாது. ஆபத்து வந்தால் என்னைப் போல் விலகி ஒதுங்க முடியாது. நான் உன்னைச் சாப்பிடத்தான் சாப்பிடுவேன்'' என்றது புழு!

''அசைய முடியாத எங்களை அரித்து அசைபோடும் நீ வெறும் கோழை! மற்றவர்கள் சொத்தைத் திருடுவதும், அவர்களைக் கொல்வதும்தான் திருடர்களுக்கு வேலை. அதே திருட்டு வேலையைத்தான் நீயும் செய்கிறாய். இந்த மரத்தின் கீழே இருக்கும் மரம் வெட்டும் திருடர்களுக்கும், உனக்கும் வித்தியாசமே இல்லை. மனித குலத்திற்கு நாங்கள் செய்யும் நன்மைகளையெல்லாம் மறந்து வெறும் காசுக்காக எங்களை வெட்டி மாய்க்கும் இந்தத் திருடர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?'' என்றது இலை!

இலையும், புழுவும் இப்படிப் பேசிக் கொண்டிருந்ததைக் கீழே இருந்த திருடர்களும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இலை தொடர்ந்தது ''இப்பொழுது நீ என் காம்பை அரித்துக் கொண்டிருக்கிறாய்! காம்பு அறுந்து போனால் நானும் இந்த மாங்காயும் கிளையி

விருந்து கீழே விழுந்து விடுவோம்! அதோடு கூட என்னுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் நீயும் விழப் போகிறாய்!'' என்று எச்சரித்தது.



புழு இலையின் எச்சரிக்கையைக் கேட்கவில்லை! ''இலையே! கீழே விழுந்தாலும் எனக்கு அடிபடாது'' என்றபடி மேலும் அரித்தது. காற்று வேகமாக வீசியது.


காம்பும் ஒடிந்து விட்டது. மாங்காயுடன் இலையும், புழுவும் சேர்ந்து கீழே விழுந்தபொழுது, காற்றால் தூக்கப்பட்டு, புழு கீழே எரிந்து கொண்டிருந்த நெருப்பிலும், இலையுடன் ஒட்டிக் கொண்டிருந்த மாங்காய் வேர்க் கடலையைத் தின்று கொண்டிருந்த திருடன் கைகளிலும் வந்து விழுந்தன! இலையின் புத்திமதியைக் கேட்காத புழு தீயில் கருகிச் செத்தது!

தன் கையில் விழுந்த அந்த மாவிலையையும் மாங்காயையும் பார்த்தான் திருடர்களில் ஒருவன்! புழுவால் அங்குமிங்குமாக அரிக்கப்பட்டிருந்தது அது! 'இந்த இலைகள் இல்லாவிட்டால் மரத்தில் பூ, பிஞ்சு கிடையாது! மரமில்லாவிட்டால் இந்த இலைகளே கிடையாது! இதோ இந்த அழகிய மாங்காயும் கிடையாது. இவற்றை எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த மரம் வளர்த்திருக்கும்?' என்று நினைத்த திருடனின் கண்கள் கலங்கின! அதே மன நிலைதான் அடுத்த திருடனுக்கும்.

யோசித்தபடி கையிலிருந்த மாங்காயை உடைத்து திருடர்கள் சுவைக்கத் தொடங்கினர். இலை புழுவைத் திட்டியது நினைவுக்கு வந்தது. எவ்வளவு உண்மை!

''சீ! இந்தப் புழுவிற்கும், நமக்கும் என்ன வித்தியாசம்! யாருக்கும் தெரியாமல் இந்தப் புழு இலைகளை அரித்துத் தின்றது. அதைப் போல்தானே நாமும்! வயிற்றுப் பிழைப்புக்காக எவருக்கும் தெரியாமல் எவ்வளவு மரங்களை அழித்து விற்று விட்டிருக்கிறோம்! மனிதர்களாகப் பிறந்தும் புழுவை விடக் கேவலமாக வாழ்கிறோமே! எவ்வளவு இழிந்த செயல்!'' என்று திருடர்கள் ஒருவருக்கொருவர் வெளிப்படையாகப் பேசிக் கொண்டனர்.

இனி மரங்களை வெட்டுவதில்லை என்று முடிவெடுத்தனர். மரத்தை வெட்ட மனம் வராமல் திரும்பிப் போய் விட்டனர். அன்று முதல் அவர்கள் எந்த மரத்தையும் வெட்டுவதில்லை. பெரிய பெரிய தோப்புகளில் மரஞ்செடி கொடிகளைக் காக்க, பூச்சி மருந்து விற்று, உழைத்துப் பிழைக்க ஆரம்பித்தனர்.



★ தபால் முத்திரையில் 'கல்வி விதாயகர்!' கல்வி பொன் விழாவுக்கு நேரில் வராத குறையைத் தீர்த்தது.
எம். சோமசுந்தரம், தருமபுரி - 4.

★ குழந்தைகள் பத்திரிகைகளில் குழந்தைப் பாடல்களுக்கு அதிக இடம் தருவது கோகுலம் தான். பிருந்தாவனக் கவியரங்கம் கவிதைகள் மொத்தம் 8+3=11. தவிர இரண்டு பெரியவர் கவின் கவிதைகள் வேறு! எந்தச் சிறுவர் இதழும் இந்த அளவு கவிதைக்கு இடம் தருவதில்லை. இது குழந்தைக் கவிஞரால் தொடங்கப் பெற்றதல்லவா? அதனால்தான் குழந்தைக் கவிதைகளுக்கு இவ்வளவு இடம்! மகிழ்ச்சி.
முத்துராமலிங்கபுரம், கோகுலம் சிறுவர் சங்கம்.

★ ஜூலை '92 இதழில் ரோட்டரி ஸைப் 1941-ஆம் ஆண்டு ஆரம்பித்ததாக பதில் படித்தோம். ஆனால் எங்கள் தகப்பனார், "ரோட்டரி இயக்கம், PAUL P Haris, என்ற ஒரு வக்கீலால் அமெரிக்காவில் (சிகாகோ), 1905-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்" என்று ஆதாரத்தோடு கூறுகிறார்.
ஒசூர், தீபலக்ஷ்மி.

(கோட்டை விட்டது சோதம்பி அல்ல. புரூபில்தான். 1901 என்பது, தவறுதலாக 1941 ஆகி விட்டது. - ஆர்.)

★ விரல் ரேகைப் பற்றிய விரிவான கட்டுரை தந்து - மனதைத் தெளிவுப்படுத்திய எங்கள் கோகுலத்திற்கு பால் பாயாசம் படைத்துப் பாராட்டலாம்.
மொரப்பூர், அ. திம்ஷா.

★ அஜி அவர்களின் ஆக்டோபஸ் செய்திகள் எங்களை ஆச்சரியப்பட வைத்தன.
திருவட்டார், நா. சித்துகுமார்.

★ அன்னதான நாமதேவர் படக்கதை நல்ல விறுவிறுப்பு. முடிவில் எங்களையும் மீறி பக்திப் பிரவாகம் பீறிட்டது!
கும்பகோணம், எல். கே. மூர்த்தி.

★ "புலி பசித்தால் ஜாங்கிரியும் தின்னும்" - கதையைப் படித்து எல்லோருக்கும் வ யி ற் று வலியே வந்து விட்டது!
அம்பத்தூர், ச. பிரசன்னா.

★ ரேவதி அவர்கள் வெந்தியைப் பற்றி ஆழமாக விவரித்தது மிகவும் அருமை. மாதம் இரு விலங்குகள் பற்றி எழுதினால் நன்றாக இருக்குமே.
மணப்பாறை, வை. ஸ்ரீராம்.

★ "குற்றாலம்" கவிதை, அருமை. நேராகக் குற்றாலத்திற்கே சென்று குளித்ததைப் போல உணர்வு ஏற்பட்டது.
சென்னை - 19, ப. கோகுலப்ரீத்தன்.

★ "தேன் கொடுத்த தண்டனை" நன்றாக இருந்தது. யாருக்கும் துரோகம் செய்யக் கூடாது என்ற கருத்தை அனைவர்க்கும் எடுத்துரைத்தது.
வடமாதிமங்கலம், வே. பாரதி.

★ கலப்படம் செய்பவர்களுக்கு சரியான பாடம் கற்பித்து விட்டது, 'சவுக்கால் அடி' சிறு கதை.
விசலூர் - 1, ஜி. ஜி. கிருஷ்ணன்.

★ 'சவுக்கால் அடி!' கதையில் அருண் தன் அப்பாவிற்குப் புத்தி வ ழ ங் கி ய அடி, கெத்தி அடி!
சங்கராபுரம், ஆ. முருகன்.

★ "உலகெங்கும் கேட்கும் உன்னத மணி யோசை", ஒவ்வொரு வாசகர் இதயத்திலும் ஒலித்துக் கொண்டே இருக்க வைத்தது.
மேலப்பாதி, எஸ். நாகராஜன்.

★ "அரசையே ஆட்டிப் படைத்தவர்!" அருமையாக இருந்தது. ஒருவன் அற்புத சக்திகளைப் பெற்றாலும் அதை நல்ல முறையில் பயன்படுத்தினால் உலகம் புகழும். தீயமுறையில் பயன்படுத்தினால் உலகம் இகழும். அதோடு அவனும் அழிந்து விடுவான் என்பதை உணர்த்தியது.
புதுவை - 5, நா. குமரதரன், நா. நர்மதா.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈகாடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு : 2345621
அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-
அறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-


MAGGI CLUBBERS FUN LOVERS
MAGGI CLUB
வானத்தில் விரிட்டுச் செல்லுங்கள், உங்கள் மேகி ஸ்கை ப்ளேனில்!
ஒன்று சேர்த்திடுங்கள மேகி ஜிக்-ஸா புதிர்
WHO-DUN-IT
கடல்-வானப்பயணத்தை பூர்த்தி செய்வீர் மேகி ஏஸ் அட்வென்ச்சரர் கேமில்!
திருடனைப் பிடியுங்கள் மேகி ஹூ-டன்-இட் மிஸ்டிரி விளையாட்டில்
உல்லாசம் பெறுவீர், வியப்பூட்டும் துணிகர விளையாட்டுகளில்!
இலவசப் பரிசுகள் - மேகி கிளப் உறுப்பினர்களுக்கு!
வஞ்சகமான எதிரிகளை சாதுரியமாக முறியடியுங்கள். மேகி ரெய்டர்ஸ் ஆஃப் தி ரெட் ஸ்டார் விளையாட்டில்!
Name:
Membership no.:
ஹல்லோ! மேகி கிளப்பில் சேருங்கள்: மேகியின் துணிகர உலகிற்குள் செல்லுங்கள்.
ஐந்து மேகி நூடுல்ஸ் காலி பேக்குகளிலிருந்து அதன் முன்பக்கத்தில் உள்ள இந்த முத்திரையை வெட்டி எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள் - உங்களுக்குப் பிடித்த இலவசப் பரிசைப் பெற. ஆறு முதல் எட்டு வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து குதூகலமளிக்கும் பரிசு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
மறவாதீர்! உங்களுக்கு விருப்பமானப் பரிசைக் குறிப்பிட்டு எழுதும்போது, உங்கள் பெயர், முகவரி, பிறந்த தேதி ஆகியவற்றையும் எழுதுங்கள். ஏற்கனவே நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால், உறுப்பினர் எண்ணையும் எழுதுங்கள். இதுவரை உறுப்பினராக ஆகவில்லை என்றால் இப்போது வருகிறது வாய்ப்பு! மேலே உள்ள விவரங்களை எழுதும்போது, உறுப்பினராக விரும்புவதையும் தெரிவியுங்கள். இலவசப் பரிசுடன், இலவச மேகி கிளப் உறுப்பினர் அட்டையையும் உங்களுக்கு அனுப்புவோம்.
எங்கள் முகவரி :
MAGGI CLUB
P.O. Box 5788 New Delhi-110 055
இலவசம்! மேகி "வேர்ல்ட் ஆஃப் அனிமல்ஸ்" புதிர்! ஒவ்வொரு 2 இலவசப் பரிசுகளுக்கும் உங்களுக்கு ஒரு மேகி "வேர்ல்ட் ஆஃப் அனிமல்ஸ்" புதிர் இலவசமாகக் கிடைக்கும்.
MAGGI 2-minute noodles
FAST TO COOK! GOOD TO EAT!
மேலும் ஒரு சலுகை: இதுவரை மேகி போட்ட ஹவுஸைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்.
HTA 7778TAM

gistered as Newspaper in Srilanka

